பக்கங்கள்: இருபத்தாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 13 ஞாயிற்றுக்கிழமை (28-11-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:02

# பேச்சுக்கு அரசு தயாரா?

# இல்லையேல் போரே வழி

## பொறுமையின் எல்லையில் நின்று தலைவர் பிரபா அவசர அழைப்பு


கிளிநொச்சி,நவம்பர்28

"இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைப்பட்டுக் கிடக்கமுடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதேசமயம், பிரிந்துசென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி, சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக்கோடுகள் உள்ளன். அந்த எல்லைக்கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் ஸ்ரீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந்தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயரவாழ்வை நீடித்துச்செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை."

- இப்படி நேற்று தமது மாவீரர் தின உரையில் அறிவித்தார் தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன். (ஐ-3)

(தலைவரின் உரை முழுமையாக 8ஆம் பக்கத்தில்)





தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையை நிகழ்த்துவதையும், சுடர் ஏற்றுவதையும் படங்களில் காணலாம்.

## அரசுக்கு இது இறுதி வாய்ப்பு என்கின்றார் பாலசிங்கம்

லண்டன்,நவ.28

பேச்சுக்களை ஆரம்பிக்க ஸ்ரீலங்கா அரசுக்கு இறுதிவாய்ப்பு ஒன்றைத் தலைவர் பிரபா கரன் வழங்கியுள்ளார். இதை அரசு சரியான முறையில் பயன்படுத்தினால் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு வாய்ப்புக்கிட்டும்.

விடுதலைப் புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் இவ்வாறு தெரிவித்தார். இலங்கை நேரப்படி நேற்று நள்ளிரவு லண்டனில் நடந்த மாவீரர் தின விழாவில் பாலசிங்கம் உரையாற்றினார்.

அவர் பேசுகையில் கூறியதாவது:-

போரா சமாதானமா? என்பதை முடிவு செய்ய இறுதி வாய்ப்பு - சந்தர்ப்பம் - ஒன்றைத் தலைவர் தனது மாவீரர் தினச் செய்தியில் வழங்கியுள்ளார். இது வெறும் செய்தி அல்ல. கொள்கைப் பிரகடனம்.

தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்க இந்தச் சந்தர்ப்பத்தை ஸ்ரீலங்கா அரசு பயன்படுத்தும் பட்சத்தில் பேச்சுக்களை ஆரம்பிக்கும் வாய்ப்புக் கிட்டு தெற்கில் மக்கள் சந்தோஷமாக வாழும் போதும், வடக்கு - கிழக்குத் தமிழர் தாயகத்தில் மக்கள் தொ... து கஷ்டமான வாழ்க்கையைத் தொடரமுடியாது. (20ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச தொலைக்காட்சிகளில் பிரபாவின் உரை

லண்டன்,நவ.28

தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவரர் நாள் உரை நேற்று சமகாலத்தில் சர்வதேச தொலைக்காட்சிகளிலும் ஒளிபரப்பப்பட்டன. பரிஸில் இயங்கும் தமிழ் தொலைக்காட்சி வலையமைப்பு மற்றும் ஆஸ்திரேலியா, கனடா ஆகிய இடங்களில் உள்ள தொலைக்காட்சி நிலையங்கள் தலைவர் பிரபாகரனின் உரையை ஒளிபரப்பின. மாவீரர் தினத்தையொட்டி வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற நிகழ்வுகளின் தொகுப்புக்களும் சர்வதேச தொலைக்காட்சிகளில் முக்கிய இடம்வகித்தன. (ஐ-3)

## நாடாளுமன்ற வாயிலிலும் நேற்று மாவீரர் தினம்!

இலங்கை நாடாளுமன்ற பிரதான நுழைவாயில் முன்றிலிலும் நேற்று மாவீரர் நிகழ்வுகள் இடம்பெற்றன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எம்.பிக்கள் இந்த நிகழ்வுகளை ஏற்பாடுசெய்திருந்தனர். கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஆர்.சம்பந்தன் நிகழ்வுகளுக்குத் தலைமை வகித்தார்.

தமிழ்க்கூட்டமைப்பின் 21 நாடாளுமன்ற உறுப்பினர்களும் 21 ஈகச்சுடர்களை ஏற்றி, மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினர். நேற்று மாலை 5.55 மணிக்கு ஆரம்பமான நிகழ்வுகள், 6.06 மணியளவில் நிறைவுற்றன.

இலங்கை நாடாளுமன்றில் மாவீரர் நிகழ்வுகள் இடம்பெற்றது இதுவே முதல்தடவை ஆகும். (ஐ-12)

## சம்பந்தன் எம்.பியின் மகன் கிரனேட் வீச்சில் படுகாயம்

### திருகோணமலையில் நேற்றிரவு சம்பவம்

திருகோணமலை,நவ.28

திருகோணமலை சிறிமாபுரம் பகுதியில் நேற்றிரவு 8.45 மணியளவில் இடம்பெற்ற கிரனேட் வீச்சுச் சம்பவத்தில் திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தனின் புதல்வர் செந்தூரன் (வயது 30) படுகாயமடைந்தார். அவருடன் வயோதிபர் ஒருவரும் காயங்களுக்குள்ளானார்.

அலஸ்தோட்டத்தில் உள்ள தங்களது தோட்டத்துக்குச் சென்றிருந்த செந்தூரனும் அவரது உதவியாளர் முருகேசு கோபால் (வயது 60) என்பவரும் நேற்றிரவு அங்கிருந்து ஓட்டோவில் வீடு நோக்கி வந்துகொண்டிருந்த சமயம் அவர்கள் மீது கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

இவர்கள் பயணம் செய்த ஓட்டோ சிறிமாபுரம் (20ஆம் பக்கம் பார்க்க)

## உண்மை வீரர்கள் நாள் நேற்றுப் பிசுபிசுப்பு!

கொழும்பு,நவ.28

மாவீரர் தினத்தைக் குழப்பும் விதத்தில் திருகோணமலையில் நேற்று இடம்பெற்ற 'உண்மை வீரர்கள்' நாள் பிசுபிசுத்துப்போனது. வெறும் நூற்றுக்கும் குறைவானவர்களே இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

நேற்று ஊர்வலமாகச் சென்று விடுதலைப் புலிகளுக்கு எதிராக கண்காணிப்புக் குழுவிடம் மகஜர் கையளிக்க அவர்கள் ஏற்பாடு செய்திருந்தபோதும் பொலீஸார் அதனைத் தடுத்து நிறுத்தினர். மேற்கொண்டு செல்வதற்கு அனுமதிக்கவில்லை.

வடக்கு - கிழக்கு சிங்கள அமைப்பும் ஜே.வி.பியும் இதற்கு ஏற்பாடு செய்திருந்தன. இதுவரை காலமும் இத்தகைய ஒரு தினம் அனுஷ்டிக்கப்பட்டிருக்கவில்லை.

விடுதலைப் புலிகளுடனான போரில் கொல்லப்பட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கல்லறைகளைக் கட்டியணைத்து உறவுகள் கதறல் துயிலும் இல்லங்களில் நெஞ்சுருகும் காட்சிகள்

*பிரதேச செய்தியாளர்களும் அலுவலகச் செய்தியாளர் குழுவும்*

யாழ்ப்பாணம்,நவ.28

தாயகக்கனவோடு சாவினைத் தழுவிய பல்லாயிரக்கணக்கான மாவீரர்களை நினைவு கூர்வதற்காக மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்றுமாலை இடம்பெற்ற வைபவங்களில் பெருந்திரளான மக்கள் பங்குகொண்டனர்.

குடாநாட்டில் உள்ள நான்கு துயிலும் இல்லங்களிலும் வடக்கின் ஏனைய இடங்களிலும் கிழக்கிலும் உள்ள துயிலும் இல்லங்களிலும் விசேட அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

துயிலும் இல்லங்களில் உள்ள மாவீரர்களான தங்கள் பிள்ளைகளின் கல்லறைகள் மீது உறவினர்கள், உரித்துடையோர் புரண்டு அழுதனர். குடும்பம் குடும்பமாக வந்து கல்லறைகளைச் சூழ இருந்து கதறி அழுதகாட்சி நெஞ்சை உருக்குவதாக இருந்தது.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என சகல தரப்பினரும் தங்கள் பிள்ளைகளை, சகோதரர்களை நினைத்து உருகி கண்ணீர் சிந்தினர்.

உறவினர்களின் உள்ளக் குமுறல் கேட்டு அங்கு திரண்டிருந்த ஏனையோரும் கண்ணீர் சிந்தியதைக் காணமுடிந்தது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் பல்லாயிரக்கணக்கானோர் திரண்டுவந்து நேற்று இரவும் தொடர்ந்து அஞ்சலி செலுத்தினர் என்று அங்கு தங்கியிருந்த 'உதயன்' செய்தியாளர் குழு தெரிவித்தது.

நேற்றுமாலை சரியாக 6 மணி 35 நிமிடமளவில் பொதுச் சுடர்கள் ஏற்றப்பட்டன. அதனைத் தொடர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டது. அதற்கு முன்னதாக சரியாக 6.10 மணிக்கு முழுத் தமிழ் இனமும் ஆர்வத்துடனும், பெரும் எதிர்பார்ப்புடனும் நோக்கிக்கொண்டிருந்த தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மாவீர்தின உரை ஒலிக்கவிடப்பட்டது. தொடர்ந்து துயிலும் இல்லப் பாடல் இசைக்கப்பட்டது. அப்போது துயிலும் இல்லங்களில் நிலவிய நிசப்தமும் அடக்கமுடியாது எழுந்த விம்மல்களும் மனதைப் பிசைவனவாக அமைந்தன.

கல்லறைகளில் விதைக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான மாவீரர்களின் பெற்றோர், உரித்துடையோர் மற்றும் உறவினர்களுடன் பொது மக்களும் ஆயிரக்கணக்காகத் திரண்டு வந்ததால் கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் எங்கும் மக்கள் வெள்ளமாகக் காட்சியளித்தது.

முன்னதாக துயிலும் இல்லத்தின் வாயில் ஊடாக 'பாண்ட்' வாத்தியங்கள் இசை முழங்க மாவீரர்களின் பெற்றோர்கள் உள்ளே அழைத்து வரப்பட்டனர்.

துயிலும் இல்லத்தினுள் நுழைந்ததும் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தத்தமது பிள்ளைகளின் கல்லறைகளைச் சூழ்ந்துகொண்டனர்.

அகவணக்கத்தை அடுத்து பிரதான ஈகச் சுடரினை தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு கல்லறைகளுக்கும் நினைவுக் கற்களுக்கும் முன்பாக தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த சுடர்களை மாவீரர்களின் பெற்றோர் ஏற்றினர். போராளிகள், பொது மக்கள் அனைவரும் மாவீரர்களின் கல்லறைகளுக்கு மலர்தூவி மலர்மாலைகளை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

ஒவ்வொரு மாவீரர்களினதும் கல்லறைகள் இருக்கும் இடங்களை அவர்களின் பெற்றோர்கள், உரித்துடையோர் இலகுவாக அறிந்துகொள்வதற்கு பல்கலைக்கழக மாணவர்களும் தேசிய கல்வியியல் கல்லூரி மாணவர்கள் உட்படப் பல தொண்டர் அமைப்பினரும் உதவிபுரிந்தனர். அத்துடன், துயிலும் இல்லத்திலுள்ள அலுவலகத்திலிருந்து இதற்கான அறிவிப்புக்களும் அடிக்கடி விடுக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்திலிருந்து மட்டுமன்றி வடக்கு - கிழக்கின் இதர மாவட்டங்களில் இருந்தும் மாவீரர்களின் பெற்றோர்கள் கோப்பாய் துயிலும் இல்லத்திலுள்ள தமது பிள்ளைகளின் கல்லறைகளுக்கு அஞ்சலி செலுத்த வந்திருந்தனர்.

மாவீரர்களின் பெற்றோர் மற்றும் உறவினர்களுக்கான விசேட போக்குவரத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## வடமராட்சியில்...

நேற்றுமாலை 3.30 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்துக்கு கூட்டிவரப்பட்ட மாவீரர்களின் பெற்றோர்கள் அங்கு கௌரவிக்கப்பட்டனர். அங்கு நடைபெற்ற கலந்துரையாடலில் அரசறிவியல் கல்லூரி அதிபர் அரசண்ணா, பேராசிரியர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் உரையாற்றினர். பின்னர் நவிண்டில் தாமோதர வித்தியாசாலை முன்பாக இருந்து இசை வாத்தியங்கள் முழங்க பெற்றோர்களும் உறவினர்களும் எள்ளன்குளம் துயிலும் இல்லத்துக்கு அழைத்துவரப்பட்டனர்.

அங்கு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. பிரதான சுடரை யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஏற்றினார். பெற்றோர்களும் உறவினர்களும் தத்தமது சுடர்களை ஏற்றி மலரஞ்சலி செய்தனர்.

## கொடிகாமத்தில்...

கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலத்தில் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மதிய உணவு வழங்கப்பட்டு பிற்பகல் 3 மணியளவில் எழுச்சிப் பேரவை செயலாளர் க.சந்திரசேகரா தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. மங்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து வீரவணக்கம் இடம்பெற்றது. பின்னர் மாவீரர்களின் நினைவுரையை விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா நிகழ்த்தினார்.

அதனையடுத்து மாவீரர்களின் பெற்றோர், பாடசாலை மாணவர்களின் 'பாண்ட்' வாத்திய அணிவகுப்புடன் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் இருந்து கொடிகாமம் நகரப் பகுதி ஊடாக - பருத்தித்துறை வீதி வழியாக - துயிலும் இல்லத்துக்கு அழைத்து வரப்பட்டனர். துயிலும் இல்லப் பொதுச் சுடரினை விளையாட்டுத்துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா ஏற்றிவைத்தார்.

கொடிகாமம் துயிலும் இல்லத்தில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள் திரண்டிருந்தனர்.

நுணாவில் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சம்பவம் காரணமாக நேற்றுக் காலை தென்மராட்சிப் பகுதிகளில் ஒருவித பதற்றநிலை மக்கள் மத்தியில் காணப்பட்ட போதிலும் மாவீரர் தின நிகழ்வுகளில் மக்கள் உணர்ச்சிபொங்க பங்கேற்றனர்.

தீவுப் பகுதியில் சாட்டியில் உள்ள மாவீரர் துயிலும் இல்லத்திலும் நேற்று மாலை அஞ்சலி நிகழ்வுகளில் உணர்வுபூர்வமாக மக்கள் பங்குகொண்டனர்.

(ஐ-3-5-13-180-7-70-173-31-117-182-72-11-15-75-30-86-112-202-203-111-17)

## களுத்துறையில் தமிழ்க்கைதிகள் சுடர் ஏற்றினர்

கிளிநொச்சி,நவ.28

களுத்துறைச் சிறைச்சாலையில் நேற்று மாவீரர் எழுச்சிநாள் நிகழ்வு கைதிகளினால் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

களுத்துறைச் சிறைச்சாலையில் 36 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் 40 சுடர்களை அங்கு ஏற்றினர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

(ஐ-12)










கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்றுமாலை இடம்பெற்ற அஞ்சலி நிகழ்வுகளின்போது எடுக்கப்பட்ட படங்கள்.
*படங்கள் : வசந்தன், பிரதீபன், இராஜேஸ்வரன்.*







# தலைவர் பிரபாகரனின் மாவீரர் தின உரை



எனது அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழீழ மக்களே!

இன்று ஒரு புனிதமான நாள். தமது உன்னதமான உயிருக்கும் மேலாக, தமது தேசத்தின் விடுதலையை அதியுன்னதமானதாக நேசித்து, அந்த உயரிய இலட்சியத்திற்காகச் சாவைத் தழுவிக்கொண்ட எமது மாவீரர்களை நாம் போற்றி வணங்கும் நன்னாள்.

எமது மாவீரர்களின் வீரஞ்செறிந்த போராட்ட வாழ்வையும் அவர்களது ஒப்பற்ற தியாகங்களையும் அற்புதமான அர்ப்பணிப்புகளையும் நெஞ்சில் நிறுத்தி நினைவுகூரும் இத்திருநாளில் ஒரு முக்கிய விடயத்தைக் கவனத்திற்கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக்கொள்கிறேன்.

மூன்று தசாப்தங்களாகத் தொடர்ந்த எமது வீர விடுதலைப் போராட்டத்தில் எமது மாவீரர்கள் புரிந்த மகத்தான தியாகங்கள் காரணமாக ஒப்பற்ற போரியற் சாதனைகளை நாம் நிலைநாட்டினோம். உலகமே வியக்கும் வகையிற் போர் அரங்குகளில் எதிரிப் படைகளை விரட்டியடித்து வெற்றிகளை ஈட்டினோம். சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புக்கு ஆளாகியிருந்த எமது தாயக மண்ணின் பெரும்பகுதியை மீட்டெடுத்து அங்கெல்லாம் எமது நிர்வாக ஆட்சியதிகாரத்தை நிறுவினோம். உலக நாடுகளின் உதவியுடன் கட்டியெழுப்பப்பட்ட சிறீலங்கா அரசினது ஆயுதப் படைகளுக்கு ஈடாகப் படைவலுச் சமநிலையை நிலைநாட்டினோம். தமிழீழ மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தைச் சர்வதேசமயப்படுத்தி, உலகத்தின் கவனத்தை எம்மீது திருப்பினோம். எனினும் எமது மாவீரர் கண்ட இலட்சியக் கனவு இன்னும் நிறைவுபெறவில்லை. எமது தாயக மண் இன்னும் முழுமையாக விடுதலைபெறவில்லை. எமது மக்கள் இன்னும் பூரண சுதந்திரம் அடைந்துவிடவில்லை.

தமிழீழத்தின் தொன்மைவாய்ந்த, வரலாற்றுப் புகழ்மிக்க நகரங்களும் பட்டினங்களும் அங்கு வாழ்ந்துவரும் எமது மக்களும் இன்னும் சிங்கள இராணுவ ஆக்கிரமிப்புப் பிடியிலிருந்து விடுபடவில்லை. அவர்கள் திறந்த வெளிச் சிறைச்சாலைகளில் அடைபட்டு, நசிபட்டு, மிதிபட்டு வாழ்கிறார்கள். தமது சொந்த மண்ணிலிருந்து வேர் அறுபட்டு இடம்பெயர்ந்த பல்லாயிரக்கணக்கானோர், தாம் பிறந்து வாழ்ந்த நிலங்களுக்குத் திரும்பமுடியாது அகதி முகாம்களில் அல்லற்படுகிறார்கள். எமது மக்களின் துயரும் துன்பமும் தொடர்கிறது. தேச விடுதலை என்ற எமது இலட்சியம், எமது மாவீரர்கள் கனவுகண்ட அந்தச் சத்திய இலட்சியம் இன்னும் நிறைவுபெறவில்லை.

## அரசியல் வெறுமை ஆபத்து!

எனது அன்பான மக்களே!

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலேயே என்றுமில்லாதவாறு, ஓர் இக்கட்டான, சிக்கலான சூழ்நிலையை நாம் இன்று எதிர்கொண்டு நிற்கின்றோம். போருமின்றி, நிலையான சமாதானமுமின்றி, இயல்புநிலையுமின்றி, இடைக்காலத் தீர்வுமின்றி, இனப்பிரச்சினைக்கு முடிவுமின்றி, நாம் ஓர் அரசியல் வெறுமைக்குள் வாழ்ந்து வருகின்றோம். இந்த அரசியற் சூனிய நிலை நீடித்தால், அது எமது இலட்சியப் போராட்டத்திற்குப் பெரும் பங்கத்தை ஏற்படுத்திவிடும் என்பது திண்ணம்.

மூன்று தசாப்தங்களாக முடிவின்றித் தொடர்ந்த ஆயுதப் போருக்கு நாம் ஓய்வு கொடுத்து, மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நாம் அமைதி காத்த இக்கால விரிப்பில், சமாதான வழிமூலமாகத் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண எம்மாலான சகல முயற்சிகளையும், நேர்மையுடனும் உறுதிப்பாட்டுடனும் நாம் மேற்கொண்டோம் என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நோர்வே நாட்டை நடுநிலையாளராக ஏற்று, அந் நாட்டின் அனுசரணையுடன் உலக நாடுகள் சிலவற்றின் தலைநகர்களில் நிகழ்ந்த சமாதானப் பேச்சுக்களில் எமது விடுதலை இயக்கம் பங்குபற்றியது. ஆறு மாதங்கள்வரை நீடித்த ஆறு சுற்றுப் பேச்சுக்களும் அர்த்தமற்றதாகப் பயனற்றுப் போயின. நெருக்கடி நிலையைத் தணித்து, இயல்புநிலையைத் தோற்றுவித்து, இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியமர்த்தவும் அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கவும் போரினாற் பேரழிவுக்கு ஆளான கட்டுமானங்களைப் புனர்நிர்மாணம் செய்யவும் நிறுவப்பட்ட உபகுழுக்கள் செயலிழந்து செத்துப்போயின. இவை ஒருபுறமிருக்க, சிறீலங்கா அரசானது எமது விடுதலை இயக்கத்தை ஓரங்கட்டிவிட்டு, வாஷிங்ரனில் நிகழ்ந்த உதவி வழங்கும் நாடுகளின் மாநாட்டிற் பங்குபற்றியது. இதனால், சமநிலைப் பங்காளி என்ற தகைமையிலிருந்து நாம் ஒதுக்கப்பட்டோம். இப்படியான புறநிலையிற்றான் பேச்சுக்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த எமது இயக்கம் முடிவெடுத்தது. எமது அதிருப்தியையும் ஏமாற்றத்தையும் வெளிப்படுத்தவே நாம் இந்த முடிவை எடுத்தோம். பேச்சுக்களை ஒரேயடியாக முறித்து, சமாதான முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட நாம் விரும்பவில்லை. பேச்சுக்களை இடைநிறுத்தம் செய்த இடைவெளியில், ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக்கான திட்ட வரைவை முன்வைக்குமாறு ரணில் விக்கிரமசிங்கவின் அரசிடம் வேண்டுகோள் விடுத்தோம். நீண்ட காலப் போரினாலே பாதிக்கப்பட்ட எமது மக்களுக்குப் புனர்வாழ்வு பெற்றுக்கொடுக்கவும், சிதைந்துபோன தமிழர் தேசத்தை மீள்நிர்மாணம் செய்யவும் கணிசமான அதிகாரத்துடன் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு அவசியமென்பதை வலியுறுத்தினோம்.

ஒன்றுக்குப் பின் ஒன்றாக ரணிலின் அரசு முன்வைத்த, இடைக்கால நிர்வாகம் பற்றிய மூன்று வரைவுகளும் எமக்குத் திருப்தியை அளிக்கவில்லை. மிகவும் மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரங்களுடன் நிர்வாக வலுவற்றதாக இத்திட்ட வரைவுகள் அமையப்பெற்றதால், எம்மால் அவற்றை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. இறுதியில், ஓர் இடைக்கால நிர்வாகத் திட்ட வரைவை நாமாகத் தயாரித்துக்கொடுக்க முடிவெடுத்தோம். பலமட்டங்களிலே தமிழீழ மக்களின் கருத்தைப் பெற்று, வெளிநாடுகளிற் புலம்பெயர்ந்து வாழும் அரசியல் அறிஞர்கள், சட்ட வல்லுநர்கள், அரசமைப்பு நிபுணர்கள் ஆகியோரின் கலந்தாலோசனையுடன் ஓர் இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைத் தயாரித்தோம். இத்திட்டம் புதுமையானது; நடைமுறைச் சாத்தியமானது. எமது மக்களின் அவசரமான வாழ்நிலைத் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையில் இதன் கட்டமைப்பு நெறிப்படுத்தப்பட்டுள்ளது. தமிழர் தாயகத்தில் மீள்குடியமர்வு, புனர்வாழ்வு, புனரமைப்பு, அபிவிருத்தி ஆகிய பணிகளைத் தாமதமின்றிச் செயற்றிறனுடன் நிறைவுசெய்ய வழிவகுக்கும் உருப்படியான அதிகாரங்களைக் கொண்டதாக இத்திட்டம் அமையப்பெற்றது.

இந்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தைச் சென்ற ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி நாம் ரணில் விக்கிரமசிங்கவின் அரசிடம் சமர்ப்பித்ததுடன், ஊடகங்கள் வாயிலாகப் பொதுசன அரங்கிலும் பகிரங்கப்படுத்தினோம்.

சர்வதேச நாடுகள் பல, எமது இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வரவேற்கத் தவறவில்லை. நீண்டகாலத்தின் பின்பு முதற்றடவையாக விடுதலைப் புலிகள் தமது அரசியற் சிந்தனைகளைத் தெளிவாகவும் விரிவாகவும் எழுத்தில் வடித்திருக்கின்றார்களென இந்நாடுகள் திருப்தி தெரிவித்தன.

## சந்திரிகா அம்மையாரின் அதிரடி நடவடிக்கை

நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை ரணில் விக்கிரமசிங்கவின் அரசு நிராகரிக்கவில்லை. தாம் சமர்ப்பித்த வரைவுகளைப் பார்க்கிலும் எமது திட்டம் வித்தியாசமானது என்று குறிப்பிட்ட அரசு, எமது யோசனைகளின் அடிப்படையிற் பேச்சுக்களை ஆரம்பிக்க இணங்கியது. ஆனால், அதேசமயம், எமது இடைக்கால நிர்வாகத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்த சிறீலங்கா சுதந்திரக் கட்சி, அது தமிழீழத் தனியரசுக்கு இடப்பட்ட அத்திபாரமெனக் கண்டித்தது. சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க ஒருபடி மேலே சென்று அதிரடி நடவடிக்கையை எடுத்தார். எமது இடைக்கால நிர்வாகத் திட்டம் அறிவிக்கப்பட்ட நான்காவது நாளே சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட திடீர் நடவடிக்கை தென்னிலங்கை அரசியலைப் பெரும் நெருக்கடிக்குள்ளே தள்ளியது. பாதுகாப்பு அமைச்சு உட்பட மூன்று முக்கிய அமைச்சுகளை ஜனாதிபதி சந்திரிகா பறித்தெடுத்துக் கொண்டதால் ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சிப்பீடம் அதிகார வலுவிழந்து ஆட்டம் கண்டது. இதனைத் தொடர்ந்து மூன்று மாதத்திற்குள் ஜனாதிபதி சந்திரிகாவினால நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதன் விளைவாக ரணில் அரசு கவிழ்ந்தது.

இவ்வாண்டு முற்பகுதியில் நிகழ்ந்த பொதுத் தேர்தல் சிங்கள, தமிழ்த் தேசங்கள் மத்தியிலான இன முரண்பாட்டினை மேலும் கூர்மையடையச் செய்தது. சமாதானத்திற்கும் இன இணக்கப்பாட்டிற்கும் விரோதமான சிங்களப்பௌத்த பேரினவாத சக்திகள், என்றுமில்லாதவாறு தென்னிலங்கை அரசியல் அரங்கில் மேலாண்மை வகிக்க இப்பொதுத் தேர்தல் வழிவகுத்தது. இனவாதமும் மதவாதமும் பழைமைவாதக் கம்யூனிஸமும் ஒன்று கலந்த குளறுபடியான கருத்தியலில் ஊறித் திளைத்த, தமிழர் விரோதக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுனை (ஜே.வி.பி) இத்தேர்தலில் கணிசமான ஆசனங்களைப்பெற்று மூன்றாவது பிரதான அரசியற் கட்சியாக வெற்றிபெற்றது. இந்த இனவாதக் கட்சியை முக்கிய தோழமைப் பங்காளியாக அரவணைத்து, ஒரு கூட்டணி அரசை அமைத்தார் சந்திரிகா அம்மையார். தமிழரின் தேசியப் பிரச்சினை குறித்து மாறுபட்ட போக்கும் முரண்பட்ட கொள்கையுமுடைய அரசியல் இயக்கங்களின் ஒவ்வாத கூட்டாக இந்த அரசு அமையப்பெற்றது.

## தமிழ்த்தேசியத்தின் எழுச்சி

பொதுசனத் தீர்ப்பின் வாயிலாக, தென்னிலங்கை அரசியலரங்கில் சிங்களப்பௌத்த மேலாண்மைவாதம் வலுப்பெற்ற அதே சமயம், தமிழரின் தாயகமான வடக்கு - கிழக்கில், ஒரே இலட்சியத்தில் ஒன்றுபட்ட சக்தியாகத் தமிழ்த் தேசியம் எழுச்சிபெற்றது. எமது விடுதலை இயக்கத்தின் அரசியல் இலட்சியத்திற்கு மக்கள் சக்தியின் ஏகோபித்த ஆதரவு கிட்டியது. தமிழீழ மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்ற வெகுசன அங்கீகாரமும் எமது விடுதலை இயக்கத்திற்கு வழங்கப்பட்டது. எமது இயக்கம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்திற்கு எமது மக்களின் மனுவும் கிடைத்தது. விடுதலைப் புலிகளின் இலட்சியக் குரலாக, அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சனநாயக சக்தியாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இருபத்திரெண்டு ஆசனங்களைப் பெற்று அமோக வெற்றியீட்டியது. இப்பொதுத் தேர்தலானது என்றுமில்லாதவாறு தமிழ், சிங்கள இனங்களை வேறுபட்ட இரு தேசங்களாகப் பிளவுபடுத்தியது. கருத்தாலும் உணர்வாலும் இலட்சியத்தாலும் வேறுபட்டு, மாறுபட்டு, முரண்பட்டுநிற்கும் இரு மக்கள் சமூகங்களாகப் பிரிவுறச் செய்தது.

தென்னிலங்கையில் ஆட்சிமாற்றம் நிகழ்ந்து, அரசியலதிகாரம் இனவாத சக்திகளிடம் சென்றடைந்தபோதும் நாம் தொடர்ந்தும் அமைதி பேணி, சமாதான முயற்சியை முன்னெடுக்க விரும்பினோம். இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பிக்க நாம் தயாரென்பதை நோர்வே அனுசரணையாளர்கள் மூலமாகச் சந்திரிகாவின் கூட்டணி அரசுக்கு அறிவித்தோம். அவ்வேளைதான் அரச கூட்டணிக்குள் குழப்பமும் கொள்கை முரண்பாடும் தலைதூக்கின.

அரச கூட்டணிக்குள் ஆதிக்க வலுவுடைய கட்சியான ஜே.வி.பி, சமாதானப் பேச்சுக்கள் வாயிலாகத் தமிழ் மக்களுக்கு அரசியல் உரிமையும் ஆட்சியதிகாரமும் வழங்கப்படுவதைக் கடுமையாக எதிர்த்தது; மூன்றாந் தரப்பு நடுநிலையாளராகச் செயற்பட்ட நோர்வே அரசையும் வன்மையாகக் கண்டித்தது; நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை முற்றுமுழுதாக நிராகரித்தது; எமது திட்டத்தின் அடிப்படையிற் பேச்சுக்கள் ஆரம்பமானால் அரச கூட்டணியிலிருந்து வெளியேறிவிடப் போவதாகவும் மிரட்டியது; சமாதானப் பேச்சுக்கும் சமரச முயற்சிக்கும் எதிரான ஜே.வி.பியினரின் தீவிரவாதக் கடும்போக்கு, சந்திரிகா அம்மையாருக்குப் பெரும் சவாலாக அமைந்தது. இந்நிலையே தொடர்ந்தும் நீடிக்கிறது.

## சந்திரிகா அரசுக்கு பல முனை நெருக்கடி

சமாதான வழிமுறையைப் பேணி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டுமென்ற சர்வதேச அழுத்தம் ஒருபுறமும், பேச்சுக்கள் ஆரம்பமாகி முன்னேற்றம் ஏற்படும்போதுதான் உதவி வழங்கும் நாடுகள் உறுதியளித்த பெருந்தொகைக் கடனுதவி கிடைக்குமென்ற நிர்ப்பந்தம் மறுபுறமும், பாதாளம் நோக்கிச் சரிந்து செல்லும் இலங்கையின் பொருளாதாரம் இன்னொரு புறமுமாக, சந்திரிகாவின் அரசு பலமுனைகளில் நெருக்கடியைச் சந்தித்து நிற்கிறது. இந்த நெருக்கடிக்கு முகங்கொடுப்பதாயின் விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்தியே ஆகவேண்டும் என்ற நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனால், அரச கூட்டணிக்குள் நிலவும் உள்முரண்பாடும், அடிப்படையான கொள்கை வேறுபாடும் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்குப் பெரும் இடையூறுகளாக எழுந்துள்ளன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம்வகிக்கும் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டமோ பொதுவான அணுகுமுறையோ இருக்கவில்லை. தமிழர் விரோத இனவாதத்திலும் போர்வெறி பிடித்த இராணுவவாதத்திலும் சிங்களப்பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித் திளைத்த தீவிரவாதச் சக்திகளுடன் அதிகாரக் கூட்டுறவு வைத்திருக்கும் சந்திரிகா அம்மையாரால் ஒரு தெளிவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் சமாதான முயற்சியை முன்னெடுக்க முடியவில்லை. இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண்மையான அரசியல் யதார்த்த நிலை. அரச கூட்டணிக்குள் கருத்தொற்றுமையில்லையென்ற அரசியல் உண்மையானது மிகவும் சாதுரியமான முறையில், சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டு வருகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசுடன் நாம் நிகழ்த்திய பேச்சுக்களின் தொடர்ச்சியாக, அதன் இறுதிக் கட்டத்திலேயே எமது இடைக்கால நிர்வாக யோசனைகளை முன்வைத்தோம். அந்த யோசனைகளை அடிப்படையாக வைத்து உடன் பேச்சுக்களைத் தொடங்கலாம் என்ற எமது நிலைப்பாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை ஆதரிக்கிறது. ஆனால், எமது நிலைப்பாட்டிற்கு மாறாக, சந்திரிகாவின் அரசு ஒரு நிபந்தனையை விதிக்கிறது. அதாவது, எந்த வகையான இடைக்கால நிர்வாக அமைப்பும் ஒரு நிரந்தரமான தீர்வுத் திட்டத்தின் இணைபிரியாத அங்கமாக அமையவேண்டும் என வலியுறுத்துகிறது. நாம் ஓர் இடைக்கால நிர்வாக ஒழுங்கை வேண்டிநிற்க, சந்திரிகாவின் அரசு இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுபற்றிப் பேச விரும்புகிறது.

கால தாமதமின்றி, இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு தமிழர் தாயகத்தில் அமையப்பெற வேண்டுமென நாம் வலியுறுத்துவதற்கு முக்கியமான காரணங்கள் இருக்கின்றன. நீண்டகாலமாகத் தொடர்ந்த கொடிய போரினால் பாதிக்கப்பட்ட எமது மக்கள் மிகவும் அவசரமான வாழ்நிலைத் தேவைகளையும் பாரிய மனிதாபிமானப் பிரச்சினைகளையும் எதிர்கொண்டு நிற்கின்றார்கள். பல்லாயிரக்கணக்கான இடம்பெயர்ந்த மக்கள் அகதி முகாம்களில் அவல வாழ்க்கை வாழ்ந்துவருகிறார்கள். போரினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்குவதற்கு உதவி வழங்கும் நாடுகள் பெருந்தொகையில் நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்துள்ளன. துன்பப்படும் எமது மக்களுக்கு நிவாரணமும் புனர்வாழ்வும் வழங்கவும், அழிவுற்ற தமிழர் தேசத்தை மீளக் கட்டியமைக்கவும் தகுந்த அதிகாரங்களுடன் வடக்கு - கிழக்கில் ஓர் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு நிறுவப்படுதல் அவசியம்.

## சமாதானத்தின் பயன்கள் மக்களை எட்டவில்லை

போர்நிறுத்தம் செய்து, மூன்று ஆண்டு காலமாக அமைதி பேணி, ஆறு மாதங்கள்வரை பேச்சுக்களை நடத்தியபோதும் சமாதானத்தின் பலாபலன்கள் இன்னும் எமது மக்களைச் சென்றடையவில்லை. தாங்கமுடியாத அளவிற்கு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளின் சுமை எமது மக்களை நசுக்கிவருகிறது. முதலில், உடனடியாகத் தமது அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டவேண்டுமென்பதையே எமது மக்கள் ஆவலாக எதிர்பார்த்து நிற்கின்றார்கள். எனவேதான், நாம் முன்வைத்த யோசனைகளின் அடிப்படையில் பேச்சுக்களை ஆரம்பித்து, வெகு சீக்கிரமாக இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவவேண்டுமென நாம் விரும்புகின்றோம். நாம் தெரிவித்த யோசனைகளில் சில சர்ச்சைக்குரியனவாகத் தென்பட்டால் அவைபற்றிப் பேச்சு மேசையில் விவாதித்துத் தெளிவுபடுத்திக்கொள்ளலாம். முதலில், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பை நிறுவி, அது செம்மையாகச் செயற்படத் தொடங்குவதை அடுத்தே இனப் பிரச்சினைக்கான நிரந்தரத் தீர்வுபற்றிப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதே எனது நிலைப்பாடு. எமது கோரிக்கை நியாயமானது. தமிழர் தாயகத்தில் நிலவும் வாழ்நிலை நிதர்சனத்தைக் கருத்திற்கொண்டே நாம் இக்கோரிக்கையை முன்வைக்கின்றோம்.

ஆனால், சந்திரிகா அம்மையாரோ, இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றிப் பேசவருமாறு எமக்கு அழைப்பை விடுத்து வருகிறார். எந்த வடிவத்திலான இடைக்கால நிர்வாகத் திட்டமும், முழுமையான நிரந்தரத் தீர்வுத் திட்டத்தின் அங்கமாக அமையவேண்டும் என்பது அவரது நிலைப்பாடு. தமிழரின் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு முன்னுரிமை வழங்கவேண்டும் என அவர் வலியுறுத்துவதற்குப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். முதலாவதாக, அரசுக் கூட்டணிக்குள் அங்கம்வகிக்கும் தீவிரவாத இனத்துவேசச் சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக இருக்கலாம். அதுவும் குறிப்பாக, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைத் திட்டத்தை வன்மையாக எதிர்த்து நிற்கும் ஜே.வி.பியினரைச் சமாதானப்படுத்தும் நோக்கமாக இருக்கலாம். இரண்டாவதாக, தமிழரின் தேசிய இனப்பிரச்சினையைத் தீர்ப்ப

(18ஆம் பக்கம் பார்க்க)

# புத்தளம் கற்பிட்டியில் புயல் அபாயம்

கற்பிட்டிப் பிரதேச பகுதிக்குள் புயல்காற்று வீசலாம் என எச்சரிக்கை செய்யப்பட்டதையடுத்து அங்கு வாழும் மக்களின் இயல்புநிலை பாதிப் படைந்துள்ளது.தீவுகளில் வசித்துவந்த பெரும்பாலான மீனவக் குடும் பங்கள் இடம்பெயர்ந்து வேறுபகுதிகளுக்கு சென்றுள்ளன. இதன்கார ணமாக மீன்பிடிக்க மீனவர்கள் செல்லாததால் மீனின் விலையும் வெகு வாக அதிகரித்துள்ளது. தென்னை மரங்கள் புயல்காற்றினால் விழுந்து விடும் என்ற பீதியினால் நூற்றுக்கணக்கான தென்னைகள் வெட்டப்பட் டுள்ளன. மக்கள் ஒருவிதமான பீதியின் மத்தியில் பொழுதைக் கழிக் கின்றனர்.

(ஐ-186)

## மரண அறிவித்தல்கள்

### மனவல் அருளப்பு (ஆசீர்)



குருநகரைச் சேர்ந்த மனவல் அருளப்பு அவர்கள் நேற்று (27.11.2004) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மனவல் - றோசம் மாவின் அன்பு மகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற பிரகாசம் - மாகிறேற் ஆகியோரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற மரியதாஸ், விக்டோரியா (ஓய்வுபெற்ற ஆசிரியை), பிரான்சிஸ்கா, யேசுதாசன், காலஞ்சென்ற வரோ ணிக்கா, தேவதாஸ் (நோர்வே), சவுந்தரி, ரவி (நோர்வே) ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும் கனகமணி, வசந்தி, பிரான்சிஸ், பிறேமா (நோர்வே), அன்பழகி (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான முத்தம்மா, மரியான், தங்கரெட்ணம், துரைராசா ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (28.11.2004) ஞாயிற்றுக்கிழமை பு.நே. 4.00 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து நல்லடக் கத்திற்காக புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*16, மவுண்கார்மேல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*

(39056)(43-11-14-29)

தகவல்:
குடும்பத்தினர்.

### கந்தையா சின்னத்தம்பி

மாரீசன்கூடல், இளவாலையைச் சேர்ந்த கந்தையா சின்னத்தம்பி நேற்று (27.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகம்மாவின் அன்புக் கணவரும் கனகேஸ்வரன், சிவனேஸ்வரன், வசந்தமலர், நித்தியானந்தம் ஆகி யோரின் அருமைத் தந்தையாரும் வேலாயுதம், கனகநாயகி, புஷ்ப லதா ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2004) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற் றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊர் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*மாரீசன்கூடல்,*
*இளவாலை.*

(சி-39054)(29-11-14)

தகவல்:
மக்கள்,
மருமக்கள்.

# ஒளியின் பிரசவம் புகைப்படக்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.28

ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத் தினால் நடத்தப்பட்ட இரண்டுநாள் பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட இதழியல் மாண வர்களின் ஒளியின் பிரசவம் என்ற புகைப்படக் கண்காட்சி இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி வரை யாழ்.பல்கலைக்கழக ஊடகங்கள் மற் றும் பயற்சி மையத்தில் நடைபெறுகின்றது.

இரண்டு நாள்கள் நடைபெற்ற புகைப்படப் பயிற்சிப்பட்டறையில் கலந்துகொண்டவர்கள் வல்வெட்டித்துறை, கந்தரோடை, சுன்னாகம், பொம்மைவெளி, காக்கைதீவு மற்றும் யாழ். நகர் ஆகிய இடங்களிற்கு அழைத்துச் செல் லப்பட்டனர்.

இந்த இடங்களில் புகைப்பட பயிற்சி யாளர்களினால் பிடிக்கப்பட்ட படங்களே இக் கண்காட்சியில் காண்பிக்கப்படவுள்ளன.

(8-6)

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள மோட்டார் சைக்கிள் (NEWS MATE 50) விற்பனைக்குண்டு.

தொடர்பு:
**லா.யஸ்ரீன் (ஆசிரியர்)**
31,கதீற்றல் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.:5576, 7593

(39051)

## பூசகர் தேவை

**வண்.வடமேற்கு ஸ்ரீவீரமாகாளி அம் பாள் திருக்கோயிலுக்கு 01.01.2005 தொடக்கம் பணியாற்றுவதற்குப் பூசகர் ஒருவர் தேவை. பூசை செய்யத் தகு தியுடையோர் கீழ்க்காணும் முகவரியில் தொடர்புகொள்ளவும்.**

திரு.அ.குமாரவேல்,
பொன்னையா லேன்,
ஆனைக்கோட்டை.

சி.செகராசசிங்கம்,
செயலாளர்.
தர்மகர்த்தா சபை.

(சி-39346)

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி செல்வரத்தினம்

**(ஓய்வுபெற்ற ஊழியர், தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்)**



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி செல்வரத்தினம் 26.11.2004 வெள் ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத் தம்பி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற நன்னித்தம்பி மற் றும் நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் முத்தம்மாவின் அன்புக் கணவரும் சுப்பிரமணி யம், சின்னத்தங்கம் ஆகியோரின் அருமைச் சகோதரரும் நவரூபன் (கனடா), நவரூபி, செரூபன் (க.பொ.த. உயர்தர மாணவன், கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியால யம்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறியத்தரப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு,*
*கைதடி.*

(39052)(29-11-14)

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

### காசித்தம்பி கந்தசாமி

**(ஓய்வுபெற்ற மலேரியா தடை வெளிக்கள உத்தியோகத்தர்)**

சிவன்கோயில் வீதி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் இல.117/13, குட்செட் வீதி, வவுனியாவை வசிப்பிட மாகவும் கொண்ட காசித்தம்பி கந்தசாமி 26.11.2004 வெள்ளிக் கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசித்தம்பி - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அருமை மகனும் டிக்கோயா நாகலிங்கம் - அன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி சிவஞானத் தின் அன்புக் கணவரும் பிரபாலினி (ஆசிரியை - வவுனியா தமிழ் ம.ம.வி.), சுபாஸ்கரன்(பிரான்ஸ்), சுரேஸ்கரன் (நோர்வே), சுதேஸ் கரன் (ஆசிரியர், வவுனியா - ஒலுமடு அ.த.க.பாடசாலை, நெடுங் கேணி), சுபாலினி (ஆசிரியை, வவுனியா இறம்பைக்குளம் மகளிர் ம.வி.) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் வரதராஜன் (மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி), லதா (பிரான்ஸ்), திலகா (நோர்வே), வசந்த குமார் (தபாலகம் - வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் உமையாள் (வவுனியா - இறம்பைக்குளம் மகளிர் ம.வி.), கௌதமன், கௌசல்யா (பிரான்ஸ்), கௌசிகா, காவியா (நோர்வே), சுபாங்கன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2004) திங்கட் கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத் துக்காக தோணிக்கல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(சி-39557)(29-11-14)

தகவல்:
குடும்பத்தினர்
கந்தசாமி சுதேஸ்கரன்
(கண்ணன் - மகன்).


## யாழ்குடா நாட்டின் தனித்துவமான ஆங்கில மொழி மூலமான பாலர் பாடசாலைகள்

## சிறார்களுக்கான ஆங்கில பயிற்சி நெறிகள்

[5+ முதல் 14+ சிறார்களுக்கு]

### சிறார்களுக்கான பாடவிதானங்கள்

PLAY GROUP
[2+ முதல் 3+ வரை]

MONTESSORI SCHOOL
[3+ முதல் 4+ வரை]

PRE-SCHOOL
[4+ முதல் 5+ வரை]

BEST CHILD PERFORMANCE இற்கான ASIA-PACIFIC EXECUTIVE FORUM விருதைப் பெற்ற பாலர் பாடசாலைகள்

எமது சிறார்கள் வயதிற்கேற்ப சரளமாக ஆங்கிலம் பேசுகிறார்கள்

☆☆☆☆☆ விசேட அம்சங்கள் ☆☆☆☆☆

☆ ஆங்கில மொழி மூலமான சிறந்த கற்பித்தல் முறை

☆ தமிழ் ஒரு தனிக் கட்டாய பாடமாக கற்பிக்கப்படும்

எமது பாலர் பாடசாலைகளில் 2 வருடங்கள் பூர்த்தி செய்த சிறார்கள் தங்கள் திறமைகளை நேர்முகப் பரீட்சையிலும் அனுமதிப் பரீட் சையிலும் வெளிப்படுத்தி பிரபல பாடசா லைகளில் Jan 2005 Year 1 அனுமதியை பெற்றுள்ளார்கள்.

*எமது சிறார்களுக்கான ஆங்கிலப் பயிற்சி நெறிகளாவன சிறார்கள் விரைவில் ஆங்கிலம் பேசுவதற்கு ஏதுவான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஆங்கிலம் பேசுவதற்கு குறுக்கு வழிகள் இல்லை. சரளமாக ஆங்கிலம் பேச வேண்டுமானால் பேச்சுப் பயிற்சியும் கற்பித்தல் முறையும் மிக முக்கியமானது.*

- PRE-FOUNDATION
- FOUNDATION
- LOWER INTERMEDIATE
- INTERMEDIATE
- UPPER INTERMEDIATE

ஒவ்வொரு பாட நெறியின் காலம் 6 மாதங்களாகும் ஆகவே 30 மாதங்களில் சிறார்கள் ஒரளவிற்கு சரளமாக ஆங்கிலம் பேசுவார்கள்

### வளர்ந்தோருக்கான ஆங்கில பயிற்சி நெறிகள்

Certificate in English | Diploma in English | Advanced Diploma in English | IELTS | TOEFL

## BRITISH BUSINESS SCHOOL

யாழ்ப்பாணம்: இல:140, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
இல:174, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

வடமராட்சி : பருத்தித்துறை சாலை, கிராமக் கோட்டடி, புலோலி.

HOT LINE : 021-222-5796

British BUSINESS SCHOOL
Where Students Come First



# உதயன்

## புதிய யுக்திகளை நாடுகிறார் சந்திரிகா!

ஆட்சி அதிகாரத்தில் தனது இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக 'தலையால் கிடங்கு வெட்டும்' பகீரதப் பிரயத்தனத்தில் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஈடுபட்டிருக்கின்றார்.

இதற்காக அவர் செய்யும் தந்திரங்கள், அரசியல்காய் நகர்த்தல்கள், அதிகாரக் குளறுபடிகள், திரைமறைவு சதிகள் எனப் பல்வேறு விடயங்கள் குறித்து அவ்வப்போது செய்திகள் கசிந்த வண்ணம் உள்ளன.

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தாம் முன்னெடுத்தால் தமது அரசின் பிரதான பங்காளியும் பேரினவாதத்தில் ஊறித் திளைத்து நிற்கும் கட்சியுமான ஜே.வி.பி. தனது அரசைக் கவிழ்த்துவிடும் என்பது ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு மிக நன்றாகத் தெரியும்.

அப்படி நடந்தால் ஆட்சி அதிகாரத்தில் நீடிக்கும் தனது நப்பாசை கனவாகிவிடும் என்பதும் அவருக்குத் தெரியும்.

அதேவேளை, அமைதி முயற்சிகளின்றி, யுத்தம் மீண்டும் வெடித்தால் அதைத் தனது அரசும், நாடும் தாங்கா என்பதும் அவருக்குத் தெரியாததல்ல.

எனவே, யுத்தமுமில்லை, சமாதானமுமில்லை என்ற - தற்போதைய யுத்தநிறுத்த - நிலையை ஒருவாறு நீடித்துக்கொண்டு, தமது தென்னிலங்கை அரசியல் காய் நகர்த்தல்களை மறுபுறம் நாசூக்காக முன்னெடுக்க அவர் வியூகம் வகுக்கின்றார்.

யுத்த நிறுத்த நிலை முறியாமல் பேணுவதற்காக, ஏதோ அமைதி முயற்சியில் ஈடுபாடுள்ளவர் போல் வாயளவில் - பேச்சில் பாவனை செய்யும் ஜனாதிபதி, அந்த அமைதி முயற்சிகளை முன்னெடுத்துத் தமிழர்களுக்கு உரியதை வழங்கும் கைங்கரியத்தைச் செய்யாமல் தவிர்ப்பதன் மூலம் ஜே.வி.பியினர் தமது அணியைவிட்டுப் பிரிந்து செல்லாமல் பார்த்துக்கொள்கிறார்.

இவ்வளவற்றையும் வெற்றிகரமாக அவர் செய்தாலும், அமைதி முயற்சிகளை ஆரம்பிக்காமல் இருப்பதால் - அதை ஆக்கபூர்வமான திசையில் முன்நகர்த்தாமல் இருப்பதால் - எழுகின்ற வேறு ஒரு பிரச்சினையை அவர் எதிர்கொள்ள முடியாதவராக இருக்கின்றார்.

அதுதான் - நாட்டின் மிகமோசமான பொருளாதாரச் சிக்கல்.

அமைதி முயற்சிகளை ஆக்கபூர்வமான திசையில் முன் நகர்த்தாத காரணத்தினால் இலங்கை அரசுக்கு வழங்குவதென, டோக்கியோ மாநாட்டில் உறுதியளித்த பெரும் தொகை நிதியை உதவும் நாடுகள் வழங்காமல் இழுத்து வருகின்றன.

அமைதி முயற்சிகளை ஆரம்பிக்காமல் இருப்பதால் ஏற்படக்கூடிய ஏனைய பிரச்சினைகளை இதுவரை வெற்றிகரமாகச் சமாளித்து வந்த ஜனாதிபதி குமாரதுங்கவுக்கு, இந்தப் பொருளாதார நெருக்கடி மட்டுமே தீராத தலைவலியாக - சமாளிக்க முடியாத சிக்கலாக - இருந்து வருகின்றது. அதையும் சமாளிக்க இப்போது புதிய யுக்தியை அவர் கண்டுபிடித்திருக்கின்றார்.

அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய யூனியன் நாடுகள் போன்றவையே இலங்கைக்கு உதவும் சர்வதேச சமூக அணியில் உள்ளன. இவையே டோக்கியோ மாநாட்டில் பங்குகொண்டன. அமைதி முயற்சிகள் ஆக்கபூர்வமான திசையில் நகர்ந்தால்தான் உதவி என்ற வற்புறுத்தலை - நிபந்தனையை - இவையே விதித்தன.

அமைதி முயற்சிகளை ஆரம்பிக்காமல் இந்த நாடுகளைக் கெஞ்சி - இவற்றின் ஆதரவையும், உதவியையும் எதிர்பார்த்து - காத்திருப்பது அர்த்தமற்றது; பயனற்றது என்பதைப் புரிந்துகொண்டுள்ள ஜனாதிபதி குமாரதுங்க மாற்று வழிகளை நாடுகின்றார்.

இலங்கைக்கு உதவும் நாடுகளின் சமூகத்தில் இல்லாத புதிய நாடுகளைக் கைக்குள் போட்டுக்கொண்டு காரியம் சாதிக்கப் பார்க்கின்றார் அவர்.

அயல நாடுகளான பாகிஸ்தானிடமும், இந்தியாவிடமும் நிதி உதவிகளைக் கணிசமாகக் கறந்துகொண்ட இவர் இப்போது ஈரானிலும் உதவியைப் பெற்றுள்ளார். நீண்டகாலக் கடன் அடிப்படையில் அடுத்த இரண்டு வருடங்களுக்குத் தேவையான எரிபொருளை இலங்கைக்கு வழங்க ஈரான் முன்வந்திருப்பது ஜனாதிபதி சந்திரிகாவின் அரசு எதிர்கொண்ட பொருளாதாரச் சுமை நெருக்கடியில் அரைவாசியை இறக்கியது போன்றது என்கின்றன வர்த்தக வட்டாரங்கள்.

ஈரான் நாட்டில் இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்ட ஜனாதிபதி குமாரதுங்க, அதன் பின்னர் ஈரானின் இரண்டு நகரங்களுக்கு தனிப்பட்ட - சொந்த விஜயத்தை மேற்கொண்டார் என அறிவிக்கப்படுகின்றது. தனிப்பட்ட விஜயம் என்பதால் அதுபற்றிய விவரங்கள் வெளியிடப்படமாட்டா, வெளியாகா. ஆனால், இந்த இரண்டு நகரங்களில் ஒன்றான இஸ்பஹான் மர்மங்கள் நிறைந்த இடம். இங்குதான் ஈரானின் சர்ச்சைக்குரிய அணு ஆயுத உற்பத்தி மையம், அதற்கான யுரேனியம் பிரிகைப்படுத்தும் நிலையம் என்பன உள்ளன.

அங்கு ஜனாதிபதி குமாரதுங்க மேற்கொண்ட தனிப்பட்ட விஜயத்தின் மர்மம் துலங்கவில்லை.

ஆனால், அமைதி முயற்சிகளை ஆரம்பிக்காமல் தவிர்க்கவும், அதற்கான சர்வதேச அழுத்தத்திலிருந்து தப்பவும் ஜனாதிபதி குமாரதுங்க சர்வதேச பொலீஸ்காரனான அமெரிக்காவுடன் இணங்கிப்போகாத - அல்லது அமெரிக்காவுடன் முரண்டுபிடிக்கின்ற - நாடுகளுடனும், சக்திகளுடனும் கூட்டுச்சேர்கின்றார். அவற்றிடம் தஞ்சம் புகுகின்றார்.

இந்தச் சகவாசங்கள் அவருக்கும் அவரது அரசுக்கும் தற்காலிகமாக பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீட்சியைத் தந்தாலும், நீண்டகாலச் சிக்கல்களை அவரது அரசுக்குத் தோற்றுவிக்கும் என்பது மறக்க - மறுக்க முடியாத ஒன்று.

# பனை மரங்கள் தறிக்கப்படுவதைத் தடுக்க ஊர்காவற்றுறையில் விசேட ஏற்பாடுகள்

## சூழல் பாதுகாப்புக் குழுவும் தெரிவானது

ஊர்காவற்றுறை,நவ.28

தீவகம் வடக்கு, ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் பிரிவில் பனைமரங்கள், வன வளங்களைத் தறித்தல், சட்டவிரோதமாக மாடு வெட்டுதல், கால்நடைகளைக் களவாடுதல் போன்றவற்றைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் க.ஸ்ரீமோகனன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக் கூட்டத்தில் மேற்படி குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் உரையாற்றுகையில் தீவகம் வடக்குப் பிரதேசத்தில் பனை மரங்கள் மற்றும் வன வளங்களைத் தறித்தல், சட்டவிரோதமாக மாடு வெட்டுதல், கால்நடைகளைக் கொண்டு செல்லல் போன்ற விடயங்கள் கூடுதலாக நடைபெற்று வருகின்றன. இவற்றினைத் தடை செய்ய சில நடைமுறைகளை அமுல் செய்யவேண்டியுள்ளது.

பனைமரங்களை, வனவளங்களைத் தறிப்பதாயின் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புக்குழு, சமுர்த்தி உத்தியோகத்தர், கிராம அலுவலர்கள் ஆகியோரின் சிபார்சினைப்பெற்று அவை பிரதேச சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு அக்குழுவின் சிபார்சிற்கு அமையவே அனுமதி வழங்கப்படும்.

ஒவ்வொரு மாதத்திலும் வரும் கடைசி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச செயலகத்தில் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்புக்குழுவின் கூட்டம் நடைபெறும்.

அதேவேளை - பனைமரங்கள் தறிப்பதனைப் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் கண்காணிப்பதுடன் அனுமதியின்றித் தறிக்கப்படின் உடன் நடவடிக்கை மேற்கொள்ளல் வேண்டும்.

அவற்றுடன், எமது பிரதேசத்தில் மரக்காலைகள் முறைப்படியான பதிவுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, அதனைப் பரிசீலித்துப் பதிவினை மேற்கொண்டு அனுமதிப்பத்திரத்தினை வழங்க பிரதேச சபை நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார்.

இந்தச் சுற்றுப்புறச்சூழல் பாதுகாப்புக் குழுவின் தலைவராக ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் க.ஸ்ரீமோகனனும், உபதலைவராக ஊர்காவற்றுறை பிரதேச சபையின் செயலாளர் இரா.லோகநாதனும், செயலாளராக பனை அபிவிருத்திப் பேதனாசிரியர் இ.உதயகுமாரியும், பொருளாளராக ஊர்காவற்றுறை ப.தெ.வ.அ.கூ.சங்க பொது முகாமையாளர் ம.யோகராசனும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் வே.யோசன் (நாரந்தனை), செல்வி எல்.எம்.லியோனிற்றா (சமுர்த்தி முகாமையாளர்), ஜே.பத்திநாதன் (கிராம அலுவலர்) வ.அஞ்சலலோ (கரம்பன்), அ.ருக்குமணி (எழுவைதீவு), தி.திருக்குமரன் (சுற்றாடல் அலுவலர்), வி.விநாயகமூர்த்தி (புளியங்கூடல்), கே.கார்த்தீபன் (பொதுச் சுகாதாரப் பரிசோதகர்) ஆகியோர் குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குழுக் கூட்டத்தில் பின்வரும் முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★ பனை மரங்கள் வெளியில் கொண்டு செல்வதற்கு (ஒரு மரம் என்றாலும்) அரச அதிபரின் அனுமதி பெறப்பட வேண்டும்.

★ அனுமதியின்றித் தறிக்கப்படும் பனை மரம் ஒன்றிற்குத் தண்டப்பணமாக ஆயிரம் ரூபா அறவிடப்படும்.

★ ஆண்பனை, பட்டபனை வீடுகளுக்குப் பக்கத்திலுள்ள ஆபத்தை ஏற்படுத்தக்கூடிய பனைமரங்களாக இருந்தால் மட்டும் பனைமரம் தறிக்க அனுமதி வழங்கப்படும்.

★ ஊரி, மணல் ஏற்றுவதாக இருந்தால் சுற்றுப்புற சூழல் பாதிப்படையாது இருத்தல் வேண்டும் - போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (எ-16)

### வடக்கு - கிழக்கு மாகாணசபையில்

# நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள் பன்னிருவருக்கு நியமனங்கள்

யாழ்ப்பாணம், நவ.27

வடக்கு - கிழக்கு மாகாண சபையில் நிலவிவரும் வெற்றிடங்கள் சிலவற்றுக்கு இலங்கை நிர்வாக சேவை உத்தியோகத்தர்கள் 12பேர் கடந்த 23ஆம் திகதி நியமிக் கப்பட்டுள்ளனர்.

அவர்களின் பெயர் விவரங்கள் வருமாறு:-

பீ.வாகீசன் (உதவிச் செயலாளர் மாகாண பொதுநிர்வாக அமைச்சு), ஈ.தயாரூபன் (உதவிச் செயலாளர் மாகாணக் கல்வி அமைச்சு), கே.குண நாதன் (உதவி ஆணையாளர், உள்ளூராட்சித் திணைக்களம்), பீ.தயானந்தன் (உதவிச் செயலாளர் - மாகாண விவசாய அமைச்சு), எஸ்.அச்சுதன் (உதவி ஆணையாளர் - சிறுவர் பராமரிப்பும் நன்னடத்தையும் சமூக சேவைகள் திணைக்களம்), பி.சிவசங்கர், திருமதி யு.யசோதா (உதவி ஆணையாளர் - காணித் திணைக்களம்), திருமதி வீமதுமதி (செயலர் யாழ்.மாநகரசபை), ரீ.உஷா (உதவித்திட்டப் பணிப்பாளர், திட்டமிடல் செயலகம்), எஸ்.சத்தியானந்தி (உதவிச் செயலாளர் - மாகாணப் பொதுச் சேவைகள் ஆணைக்குழு), கில்மி (உதவிப்பணிப்பாளர், பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்), திரிமன்ன - (உதவிச் செயலாளர், மாகாண சுகா தார சேவைகள் சுதேச வைத்திய அமைச்சு). (10-202)

### உதயவாக்கு

திட்டமில்லா செயல்கள் யாவும், நஷ்டத்தையே ஏற்படுத்தும்.

### நாளை

கார்த்திகை 14
திங்கட்கிழமை
(29.11.2004)
திதி: திருதியை முழுவதும்
நட்சத்திரம் : திருவாதிரை முழுவதும்
சுபநேரம் : 12.14 - 01.44
ராகுகாலம் : 07.44 - 09.14
(பழைய நேரப்படி)

# பலத்த சிரமத்தின் மத்தியில் நடைபெறும் தீவுப்பகுதிகளுக்கான கடற்போக்குவரத்து

ஊர்காவற்றுறை,நவ.28

தற்பொழுது நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக தீவுப்பகுதிகளுக்கிடையிலான கடற்போக்குவரத்து மிகுந்த சிரமத்தின் மத்தியில் நடைபெற்று வருகிறது.

அண்மையில் நயினாதீவில் இருந்து அனலைதீவு ஊடாக ஊர்காவற்றுறைக்குச் சென்று கொண்டிருந்த பயணிகள் படகு கடும் மழை காரணமாக திக்குத் தெரியாமல் ஆள்கள் அற்ற பருத்தித்தீவில் தரைதட்டியது.

இதனால் படகு சற்றும் நகரமுடியாத நிலை ஏற்பட்டதுடன் படகில் இருந்த பயணிகள் பெரும் அல்லோல கல்லோலப்பட்டனர். ஆண்கள் சிலர் கடலில் குதித்துப் படகைத் தள்ளியபோதும் அவர்களது முயற்சி பயனளிக்கவில்லை.

எனினும், இப்படகில் இருந்த பயணிகளை மீட்கும் பொருட்டு மற்றைய படகொன்று கொண்டுவரப்பட்டு சற்றுத் தொலைவில் நிறுத்தப்பட்டது. குறித்த படகில் இருந்த பயணிகள் கடலில் இறங்கி நடந்து சென்றே மற்றைய படகில் ஏறிக் கொண்டனர். பின்னர் இவர்கள் அனலைதீவுக்குக் கொண்டுசென்று இறக்கப்பட்டனர். அன்றையதினம் இவர்களது பயணம் கைகூடாமையால் அனலைதீவிலுள்ள உறவினர் வீடுகளிலும், தெரிந்தவர் வீடுகளிலும் தங்கி மறுநாளே தமது பயணத்தை மேற்கொண்டனர்.

ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு இறங்குதுறைகளில் பயணிகள் தங்குமடம் இன்மையால் பொதுமக்கள் மழைக்கு ஒதுங்குவதற்கு ஏற்ற இடமின்றி நனைந்தபடியே பயணம் செய்ய வேண்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (10-16)

# வீதி வெள்ளத்தில் மூழ்கியதனால் கோவிலாக்கண்டி மக்கள் சிரமம்

தென்மராட்சி,, நவ.28

தென்மராட்சி தெற்கு கோவிலாக்கண்டி மத்திய பகுதி மக்களினால் பிரதான போக்குவரத்து வீதியாகப் பயன்படுத்தப்படும் ஸ்ரீ முருகன் வீதி வெள்ளத்தில் முழ்கியுள்ளதால் அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

பல வருடங்களாக திருத்தப்படாமல் சேதடைமந்த நிலையில் காணப்பட்ட இவ்வீதியில் சுமார் இரண்டு அடி வெள்ளம் காணப்படுவதாகவும் அப்பகுதிக்குச் செல்லும் பரமானந்தர் வீதியில் உள்ள மூன்று மதகுகள் உடைந்துள்ளதால் ஸ்ரீ முருகன் வீதியையே மக்கள் பயன்படுத்தி வருவதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் மீளக்குடியமர்ந்த மக்கள் அப்பகுதி வயல்களுக்குச் செல்வோர் அங்குள்ள பத்து ஆலயங்களுக்குச் செல்வோர் பாடசாலை மாணவர்கள் ஆகியோர் இந்த வீதியை பயன்படுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## உதயனின் பதிவில் பொதிந்தவை

கடந்து வந்த 19 ஆண்டுகளில் உதயன் தந்த பதிவுகள் தமிழர்களின் சுதந்திரத்தில் - வாழ்வியலில் ஒரு பகுதி.
உதயனின் உதயகாலம் தொடக்கம் முக்கிய பதிவுகளை மீண்டும் படிக்கும் வாய்ப்பைத் தருகிறோம்.

### 1985 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதத்தில்...

01.12.1985
★ இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியில் தீர்வு காணமுடியாது:- இந்தியா வலியுறுத்து

01.12.1985
★ தனிநாடே பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு - பிரபாகரன்

02.12.1985
★ பேச்சுவார்த்தை தோல்வியெனில் பூண்டோடு அழித்துவிடுவாராம் - ஜே.ஆர். பேட்டி

02.12.1985
★ எங்கள் உயிரைப் பாதுகாக்கவே படைகளுக்குப் போர்ப்பயிற்சி - படையினர் மத்தியில் ஜே.ஆர்.

03.12.1985
★ மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கு இலங்கை அரசு ஐ.நாவுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் - லக்ஸ்மன் ஜெயக்கொடி

# சாவகச்சேரி நகரசபைப் பிரிவில் குப்பை அகற்றுதல் இடைநிறுத்தம்

தென்மராட்சி, நவ.28

சாவகச்சேரி நகரசபையினால் வாகனங்களில் சேகரிக்கப்படும் குப்பைகளைக் கொட்டுவதற்கு இடமில்லாததால் நகரசபைப் பிரிவில் குப்பை அகற்றும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால், வட்டாரங்களின் வீதியோரமாகப் பொதுமக்களால் போடப் பட்ட குப்பைகள் குவித்துள்ளதைக் காணமுடிகிறது.

இவ்விடயம் தொடர்பாக நகரசபையின் செயலாளருடன் தொடர்பு கொண்டபோது -

தனங்களப்பு வீதி வெளியில் (கண்ணாடிப்பிட்டி இந்துமயானத் திற்கு அருகில்) குப்பை போடுவதற்கான கட்டடத்திலான தொட்டிகள் அமைக்கப்படும் வரை பொதுமக்கள் குப்பைகளைத் தமது காணிகளில் குழிவெட்டிப் புதைக்குமாறு அறிவித்தல் வழங்கியுள்ளதாகவும் -

குப்பைகள் கொட்டுவதற்கு நகர்ப் பகுதியில் இடமில்லாததால் வரியிறுப்பாளர்கள் நகரசபையுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் தெரிவித்தன.

குப்பை அகற்றுவதற்கு நகரசபையிடம் வாக னங்கள் இல்லாதபோதிலும் வாடகை வாக னங்கள் குப்பை அகற்றும் நடவடிக்கையை மேற்கொண்டு வருவதாகவும் -

கடந்த ஒரு மாதமாகச் சேகரிக்கப்படும் குப்பையினைக் கொட்டுவதற்கு இடமில்லாத தால் வட்டாரங்களில் குப்பை அகற்றும் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ-117)

## சேதமடைந்த வீடுகளின் விவரம் சேகரிப்பு

வலி.தென்மேற்கு(சண்டிலிப்பாய்) பிரதேச, செயலகப் பிரிவில் கடந்த யுத்தகால அனர்த் தங்களின்போது முற்றாக அழிந்த வீடுகள் மற் றும் சேதமடைந்த வீடுகள் பற்றிய விவரங்கள் அவ்வப் பிரிவு கிராம அலுவலர்களால் சேகரிக் கப்பட்டு வருகின்றன. உலக வங்கியின் நிதியுதவித் திட்டத்தின் கீழ பயனாளிகளைத் தெரிவு செய்வதற் காகவே இந்த விவரங்கள் திரட்டப்பட்டு வருவ தாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித் தன. யுத்த கால அனர்த்தங்களின் போது தங் கள் தங்கள் வீடுகளை முற்றாக இழந்தவர்கள், வீடுகள் சேதமடைந்தவர்கள் ஆகியோர் தத்தமது பிரிவு கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்றும் -தெரிவிக்கப்பட்டது. (எ-135)


## தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையின்
## நூல் வெளியீட்டு விழா

இடம்: சிவகடாஷக் குருக்கள் இசையரங்கு
காலம்: இன்று (28.11.2004) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி
தலைமை: செஞ்சொற்கொண்டல் ஆறு.திருமுருகன்
ஆசியுரைகள்:
மகாராஜஸ்ரீ .து.சண்முகநாதக் குருக்கள் *(மாவை ஆதீனம்)*
சிவஸ்ரீ தா.மகாதேவக் குருக்கள்
*(அதிபர், தர்மசாஸ்தா குருகுலம்)*
சிவஸ்ரீ சு.தியாகராஜக் குருக்கள்
*(பிரதமகுரு, காசி விநாயகர் தேவஸ்தானம்)*
அருளுரை:
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்
நூல்களின் ஆய்வுரை:
சைவப்புலவா வ.செல்லத்துரை
நூல்கள் வெளியீடு செய்தல்:
பேராசிரியா ப.கோபாலகிருஷ்ண ஐயர்
*பாலர்ஞானோதய சபையில் இசை பயிலும் மாணவர்களின் மிருதங்க, இசை, நடன நிகழ்வுகள் தொடர்ந்து நடைபெறும்.*

காசிவிநாயகர் தேவஸ்தானம்,
தெல்லிப்பழை. (சி-39270) (24-11-14-26)
சி.கணேசலிங்கக் குருக்கள்
தலைவர்.


## சைவவித்தியா விருத்திச் சங்கம்
## பதவி வெற்றிடங்கள்


பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. உபவிடுதிக்காப்பாளர்: பெண்கள்
- ☆ க.பொ.த.சா/தரத்திற்குக் குறையாத கல்வித்தகைமை
- ☆ வயதெல்லை: 30 - 60
- ☆ விடுதியில் தங்கியிருப்பது கட்டாயம்
- ☆ விண்ணப்பதாரர் தேகாரோக்கியம் உடையவராகவும், இல்லப் பிள்ளைகளைப் பரிவோடு கவனிப்பதிலும், சைவாசாரம் பேணு வதிலும், வழிகாட்டுவதிலும் அர்ப்பணிப்போடு ஈடுபடுபவராகவும் இருத்தல் வேண்டும்.

02.பயிலுநர் லிகிதர்
க.பொ.த.உ/தரம் கணக்கியல் உட்பட 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் கணக்கு அலுவல்கள் பற்றிய 3 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.
வயதெல்லை: 30

எல்லாப் பதவிகளுக்கும் ஊதியம் பேசி நிர்ணயிக்கப்படும். அண்மையில் பெறப்பட்ட இருநற்சான்றிதழ் பிரதிகளோடு விண்ணப்பங்கள் கிடைக்கவேண்டிய
இறுதி நாள்: 10.12.2004

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி.
(சி-39355)(39-14-17-26)
சு.பசுபதி,
செயலாளர்.


## அனுமதியின்றி பனை தறிப்போர் மீது வலி.மேற்கில் சட்ட நடவடிக்கை

வட்டுக்கோட்டை, நவ.28

வலிமேற்குப் பிரதேச செயலர் பிரிவில் அனு மதியின்றி சட்டவிரோதமான முறையில் பனை மரங்கள் தறிப்போர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என வலி.மேற்குப் பிரதேச செய லர் சி.ஏ.மோகன்றாஸ் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டு மக்களின் அரிய சொத்தான பனை மரங்கள் கடந்த காலங்களில் அனுமதி யின்றித் தறிக்கப்பட்டு வந்துள்ளதாக முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. இத்தகைய நடவடிக்கையில் ஈடுபடுவோர் மீது உரிய சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பனை மரங்கள் தறிக்கும்போது அதற் குரிய எழுத்து மூலமான அனுமதி பிரதேச செயலகங்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். இத்தகைய நடவடிக்கைகளை உரிய பகுதி கிராம அலுவலர்கள் கண் காணித்து மீறுவோர்மீது சட்டநடவடிக்கை எடுக்கவேண்டும் - என பிரதேச செயலர் மேலும் தெரிவித்துள்ளார்.

(எ-161)

## சுவர் வீழ்ந்து இருபெண்கள் காயம்

வலி.வடக்கு,நவ.28

நள்ளிரவு நேரம் உறக்கத்தில் இருந்தவர் கள் மீது சுவர் இடிந்து வீழ்ந்ததில் இரு இளம் பெண்கள் காயம் அடைந்தனர்.

கடந்த புதன்கிழமை இணுவில் பாலா வோடை என்னும் இடத்தில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

உறக்கத்தில் இருந்த 20, 23 வயதுகளை உடைய இரு பெண்களின் கால்கள் பலத்த காயத்திற்கு உள்ளாகி, அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீட்டில் இருந்தவர்களில் ஒரு பகுதியி னர் வேறு அறைகளில் உறங்கியமையினால் காயங்கள் இன்றித் தப்பிவிட்டனர்.

கடந்த பல நாள்களாகப் பெய்துவரும் மழையினால் இப்பகுதியில் வெள்ளம் நிற்ப தைத் தொடர்ந்தே சுவர் இடிந்து வீழ்ந் துள்ளமை குறிப்பிடத்தக்கது. (10-36)

## ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ.28

வடபிராந்திய ஸ்ரீ சத்தியசாயி சேவா நிறு வன இளைஞர் பிரிவின் ஏற்பாட்டில், ஜி.சீ.ஈ. சாதாரண தர மாணவர்களுக்கு இலவச வழி காட்டல் கருத்தரங்குகள் நடத்தப்படவுள்ளன.

இன்று ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 2ஆம் திகதி வரை காலை 9 மணி முதல் 12 மணி வரை இந்தக் கருத்தரங்கு நடைபெறும்.

இன்று ஞாயிற்றுக்கிழமை கணித பாடத் துக்கான கருத்தரங்கும், நாளை திங்கட் கிழமை தமிழ், நாளைமறுதினம் செவ்வாய்க் கிழமை விஞ்ஞானம் எதிர்வரும் முதலாம் திகதி சமூகக்கல்வி, 2ஆம் திகதி ஆங்கிலம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்குகள் நடை பெறும் என இளைஞர் இணைப்பாளர் டாக்டர் இ.கணேசமூர்த்தி அறிவித்துள்ளார். (எ)

## 6ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 31 - 01 - 1949



உதிர்வு 05 - 12 - 1998

### திருமதி ராணி ஜெகசோதி

(முன்னாள் ஆசிரியை - சென்.ஜோசப் கல்லூரி, திருகோணமலை)

எங்கள் குடும்பத்தின் மூத்த செல்வமே!
எப்பொழுதும் சிரித்த முகத்துடன் சீர்பெற்று நீ வாழ்ந்தாய்
ஏற்றமுடன் உன்புகழ் கண்டு இறுமாப்படைந்தோம் நாம்
எங்கள் இதயம் கனக்க எம்மை ஏங்க வைத்து
எங்கு நீ சென்றாய் என்றும் நாம் மறவோம் உன்னை!

200. சென்.பெனடிக் றோட்,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.
- குடும்பத்தினர்.
(சி-39352) (26-14)

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் கடமையாற்றுகின்ற
திரு.த.முத்துக்குமார் அவர்களின்
பாசமிகு தாயார்

### திருமதி தங்கவேல் சிந்தாமணி

அவர்களின் மறைவு மனவேதனையைத் தருகின்றது. அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்கி ஆத்மா சாந்திபெற இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

- உத்தியோகத்தர்கள்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு,
யாழ்ப்பாணம்.
(39046) (24-

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

மண்ணில் 30 - 01 - 1945



விண்ணில் 29 -- 10 - 2004

### திருமதி செல்லையா உருத்திராதேவி

(மகேஸ்வரி)

எங்கள் குடும்ப ஒளி விளக்கே!
விழியோரம் கண்ணீர் காயவில்லை!
ஆனதம்மா முப்பத்தியொரு நாள்கள்
ஆறுதலுக்கு ஆயிரம் பேர் கூறவிருந்தாலும்
அன்புக்கு நீங்கள் எம்முடன் இல்லையே - அம்மா
தினம் தினம் எண்ணி அழுகின்றோம்
உங்களை நினைந்து....

எங்கள் குடும்பத் தலைவியின் பிரிவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்கள் மற்றும் எங்கிருந்தாலும் எம்முடன் துயரம் பகிர்ந்தவர்களுக்கும் பல வழிகளில் உதவிபுரிந்த அனைவருககும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்வதுடன், இன்று (28-11-2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அ.செல்லையா (கணவர்),
36/17. பிரம்படி ஒழுங்கை. பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில். சகோதரி குடும்பத்தினர். (39034) (26-14)


## கடை விற்பனைக்கு

கோப்பாய்ச் சந்தியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய கடை விற்ப னைக்குண்டு. விலை ரூபா முப்பது லட்சம். விலை பேசித் தீர்மானிக் கப்படும்.

தரகர்கள் தேவையில்லை. நேரடி யாகத் தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி இல.:
0777 883894
(சி-39229) 0777 892034


## மரண அறிவித்தல்கள்

### பாலசுப்பிரமணியம் காண்டீபன்

சண்டிலிப்பாய் மத்தியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் காண் டீபன் 25-11-2004 வியாழக்கிழமை பிரான்ஸில் சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் பாலசுப்பிரமணியம் - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் விஜிதா (அமெரிக்கா) அவர்களின் அன்புச் சகோத ரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுண்டுக்குளி.
(39050) (26-14-17)
தகவல்:
த.பாலசிங்கம் (மாமா).

### கதிரவேல் வீரசிங்கம்



சுன்னாகம் தெற்கைப் பிறப்பிடமாகவும் உடுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேல் வீரசிங்கம் அவர்கள் 26.11.2004 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற அருள்மலரின் அன்புக் கணவரும் பஞ்சலிங்கம் (நோர்வே), அமுதலிங்கம் (சுவிஸ்), காலஞ்சென்ற கலா மலர் மற்றும் தயாமலர் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கோமளாநிதி (நோர்வே), விஜயா (சுவிஸ்), செந்தூரன் (சுவிஸ்) ஆகி யோரின் அன்பு மாமனாரும் கஸ்ணா (நோர்வே), சுகந்தன் (நோர்வே), தர்சிகன் (நோர்வே), சுதர்சன், விஜிதன், றகீம், அலெக்ஸ், அருணி (சுவிஸ்), இலக்கியன் (சுவிஸ்), இலக்கியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2004) ஞாயிற்றுக் கிழமை காலை 11மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பூவோடை இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாகம்மாள் வீதி,*
*உடுவில் கிழக்கு,*
*சுன்னாகம்.*
(39053)(39-11-14-26)
தகவல்:
பிள்ளைகள்

# பிரபாவின் பிறந்தநாள் நிகழ்வுகளின் நிழல்கள்



தமிழீழ வடிவில் உருவாக்கப்பட்டிருக்கும் பிறந்தநாள் கேக்.



கடற்புலிகளின் சிறப்புத் தளபதி சூசை கேக் வெட்டும்போது...



சிறுவர்களுக்குத் தலைவரின் பிறந்த நாள் கேக் வழங்கப்படுகிறது



மாவீரர் ஒருவரின் தந்தையார் மெழுகு வர்த்தியை ஏற்றுகிறார்.



பொங்கல் வழங்குகிறார் தளபதி சூசை.



வாழ்த்துப்பா இசைக்கும் விளையாட்டு வீரர்கள்.



பிறந்தநாள் கொண்டாட்டத்தில் குழந்தைகளோடு தாய்மார்கள்.

வன்னியிலிருந்து சிறப்புப்படங்கள்:
அலுவலகப்படப்பிடிப்பாளர்:
எஸ்.பார்த்திபன்



பொங்கல் பானைகள் தலைவரின் அகவையைக் குறிக்கும் வகையில் 50 என்ற இலக்க வடிவில் வைக்கப்பட்டுள்ளன.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

3 அடி-12 அடி வரையிலான (**4'x3'**) புதிய வேப்பந் தீராந்திகள், பலகைகள் விற்பனைக் குண்டு. ஞாயிறு காலை 9 மணிமுதல் 2 மணி வரை பார்வையிட்டுப் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல.15, மெமோறியல் லேன், மானிப்பாய். (39003)

41ஸ்ரீ....தொடரிலக்கமுடைய **ELF** கண்டர் இசுசு ½ பொடி, வைற்மொடல் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.12, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (39010)

## கடைகள் விற்பனைக்கு

கந்தர்மடம் சந்திக்கும், அம்மன் வீதிச் சந்திக்கும் இடையில், பலாலி வீதியில், 152ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள இரண்டு கடைத் தொகுதிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: சாமியார் மரக்காலை, 3 ஆம் கட்டை, கட்டைப்பிராய், கல்வியங்காடு. (38921)

## வீடு விற்பனைக்கு

பருத்தித்துறை பாடசாலை ஒழுங்கையில் 2பரப்புக்காணியில் சுற்றுமதிலுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: **K.**பாலன். **T.P.:** 021 - 226 3016. (சி-39333)

யாழ்ப்பாணம், கச்சேரி கிழக்கு, ஒழுங்கையில் புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட 3¼பரப்பில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக் குண்டு. தொடர்பு: 93, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். **T.P.:** 0777 145282. (39028)

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கொழும்புத்துறை சுவாமியார் வீதியில் வீட்டுடன் கூடிய 11 பரப்புக் காணியும் மற்றும் இலந்தைக் குளத்தில் 10½ பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: **Mr.**செல்வராசன், 54/17, சுவாமியார் வீதி, கொழும்புத்துறை. (காலை 8.00 மணிகCு முன்னர்) **T.P.:** 011 - 2552738 (சிவம்). (சி-39276)

கொட்டடி வைரவர் கோயில் ஒழுங்கையில் இரண்டு பக்கமும் வீதியைக் கொண்ட 5¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. காணி பிரித்தும் கொடுக்கப்படும். த.கனகலிங்கம், 67/43, தர்மலிங்கம் அவெனியூ, கொட்டடி, யாழ்ப்பாணம். (39023)

சாவகச்சேரி, இந்துக்கல்லூரியில் இருந்து 100 யார் தூரத்தில், றோயல் கல்வி நிலையத்திற்கு முன்பாகவுள்ள 7பரப்பு 11¼ குழி அளவிலான காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: திருமதி சிவவடிவேல், தாமோதரம் பிள்ளை வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி. **T.P.:** 0777 238562. (சி-39340)

## நாய்க்குட்டிகள் விற்பனை

**Pure Bred Pedigreed Dobermann Pincher** நாய்க்குட்டிகள், **Dachshund** (ஒன்று) குறைந்த விலையில் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முததிரைச் சந்தையடி, நல்லூர். (38975)

எம்மிடம் அல்சேஷன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: V.சிவசுப்பிரமணியம், பொன்னாலை வீதி, மானிப்பாய் மேற்கு (முனியப்பர் கோயிலுக்கு அருகில்). (39045)

## சிறுகுறிஞ்சாப் பவுடர்

சிறுகுறிஞ்சா இலையிலிருந்து தயாரிக்கப்பட்ட பவுடர் விற்பனைக் குண்டு. இது நீரிழிவு, கர்ப்பப்பை நோயாளர்களுக்கும் சாதாரண மக்களுக்கும் சிறந்த மூலிகையாகும். இதில் விற்றமின் A,C உடன் கல்சியம். இரும்பு போன்ற தாதுப்பொருள்களும் அடங்கும். *தொடர்பு:*

**BIO TEC INTERNATIONAL**

இல.131/2, பலாலி வீதி, திருநெல்வேலி. T.P.: 021- 4590907. (38381)

## FOR SALE

TOYOTA CORONA GX (Vagon Model) 16 - xxxx Car For Sale.

Contact: **YARL PAADY RESIDENCY**
51C , AMMAN ROAD,
NALLUR, JAFFNA. (39047) (24-11-14-26)

## காணி விற்பனைக்கு

பழைய வீட்டுடன் கூடிய 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நெல்லியடி, கரவெட்டி, மகாத்மா காந்தி தியேட்டருக்கு அருகில் இருந்து 200 யார் தூரத்தில் உள்ளது. விலை நாற்பது (40) லட்சம் ரூபா. விலை பேசித் தீர்மானிக்கப்படும். தரகர் தேவையில்லை. நேரடித் தொடர்பு:

தொலைபேசி:
**0777 892034, 0777 883894.** (சி-39230)

## காணி, வீடு விற்பனைக்கு

சாவச்சேரி, வடக்கில் இலுவத்தி பிள்ளையார் கோயிலுக்கு அருகில், ஏறக்குறைய 15 பரப்புக் காணியும் நல்லநிலையில் உள்ள பெரிய கல்வீடும் விற்பனைக்குண்டு. இந்தக் காணியில் பலவித மரங்களும் இரண்டு பெரிய கல்லரிக்கட்டு கட்டப்பட்ட கிணறுகளும் மின்சார வசதியும் உண்டு. தொடர்பு: **T.P.: 021 222 6286.** **(C/39226)**

## இறைச்சிக்கோழி விற்பனைக்கு

கூடுதல் நிறையுடைய (4Kg) தரமான புறொயிலர் இறைச்சிக்கோழிகள் விற்பனைக் குண்டு. தினமும் சுத்தம்செய்து வேண்டிய அளவுகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, இராமலிங்கம் றோட், முடமாவடி, திருநெல்வேலி கிழக்கு. (38892)

## கோழிக்குஞ்சு விநியோகம்

மிகவும் தரமான, இரண்டுமுறை தடுப்பு மருந்து வழங்கப்பட்ட **Prima Original Broiler** குஞ்சுகள், பேட்டுக் குஞ்சுகள் 06.12.2004 திங்கட்கிழமை விநியோகிக்கப்படும். பருத்தித்துறை - நெல்லியடிக்கிளையிலும், சூட்டி பாம் - வட்டுக்கோட்டை, **R.S.K.** பாம் - உடுவில், சுன்னாகம் - ஐங்கரன் களஞ்சியம் - திருநெல்வேலி, முருகன் - சாவகச்சேரி, நல்லூர் பாம்சென்ரர் - 19, முருகேசர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (38932)

தரமான நம்பர் - 1 பகிரா புறொயிலர் குஞ்சுகள் விற்பனைக்குண்டு (இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்). றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி, றாஜீவ், கால்நடைத் தீவன விற்பனை நிலையம், சண்டிலிப்பாய் சந்தி. **T.P.No: 222 3529, 222 2867.** (38960)

## திருமண சேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம், 1972 - 7 செவ்வாய், கிரகபாவம் 52, உயரம 5'8" மணமகனுக்கு மணமகளும், 1975 **Australia**, உயரம் 5'3" திருவோணம் U.K., அச்சுவினி, 1966 பெண் **M.Sc.**, கனடா 1979 பெண் திருவோணம், **Norway 1982 Accountant 1963 Canada PR 1975-10-04 Canada Accountant** மணமகள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ படித்த மணமகன் தேவை. ஜாதகம், புகைப்படத்துடன் தொடர்புகொள்ளவும். **KASAVAN MARRIAGE SERVICE, 76, ALLESH ROAD, NEGOMBO. T.P.: 031 222 4978.** **(C/39338)**

## மணமகள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 28 வயதுடைய, உத்தரட்டாதி நட்சத்திரம், கனடா பிரஜா உரிமைபெற்ற (I.I.T.) பொறியியலாளர் பட்டம் பெற்ற 5'8" உயரமுள்ள மணமகனுக்கு படித்த, அழகான மணமகள் தேவை. சாதகம், புகைப்படம், குடும்ப விவரத்துடன் விண்ணப்பிக்கவும். தொடர்புகளுக்கு: C/o: விளம்பர இல. 2444, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (38991)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரச உத்தியோகம் பார்க்கும், 28 வயது, திருவாதிரை நடசத்திர, நற்பண்புகளுடைய மணமகனுக்கு நற்குணமுள்ள, அழகிய மணமகள் தேவை. தொடர்பு: புதிய பாலம், தபாற்பெட்டி இல.10, வவுனியா. (37778)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, அரசாங்க அதிகாரியாகக் கடமையாற்றும் 32 வயதுடைய பட்டதாரிக்கு (அனுசம், 13 கிரகபாவம், 5அடி 3") செவ்வாய்க்குற்றமற்ற மணமகனுக்கு அழகிய பெண் தேவை. மணமகள் அரசாங்க அலுவலராக இருந்தல் வேண்டும். உடன்தொடர்புகொள்க. விள.இல. 2445, மே/பா உதயன். (சி-39335)

## நூல்கள் விற்பனைக்கு

2005 இல் உங்கள் பலாபலன்கள், ஆங்கிலத்தில் 50கட்டுரைகள், அழகியல் (தரம் 1-5 வரை). பொது அறிவுத்தேடல், எண் சாத்திரம். **V.A.** சிவராசா, இல.01, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். எங்கும் விற்பனையாகின்றது. (39039)

## ஆன்மீகச் சொற்பொழிவு

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் அமைந்துள்ள பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிறு தோறும் நடைபெற்று வரும் வாராந்த ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று 'வைணவத்தின் தத்துவங்களும்' பெரியாழ்வாரின் மகிமையும்' என்னும் பொருளில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை உத்தியோகத்தர் கசச்சிதானந்தனின் சிறப்புரை இடம் பெறவுள்ளது. (8-204-78)

## மாபெரும் புத்தக விற்பனை
### (நவம்பர் 22 முதல் 30 வரை)

நீண்டகாலமாக நீங்கள் எதிர்பார்த்திருந்த அரிய நூல்கள் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன. பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், கல்விக் கல்லூரிகள், தனியார் கல்வி நிறுவனங்கள், நூலகங்கள் அனைத்திற்கும் பயன்தரும் புத்தம்புதிய நூல்கள் அனைத்தும் தாமதமின்றி எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

வருட இறுதியில் வரும் வாய்ப்பினைத் தவறவிடாதீர்கள்.
உங்கள் தெரிவுகளுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்:

**ஸ்ரீலங்கா புத்தகசாலை,**
234, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 - 222 2573.

(சி-39010) (26-14-11)

## 41ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் வைரமுத்து நல்லையா**

மலர்வு 05.10.1950 — உதிர்வு 19.10.2004

நாள்கள் நாற்பத்தியொன்று ஆயினும்
ஆறுதில்லையே எங்கள் அன்பு மனம்!
மீண்டும் ஒருமுறை உமது முகத்தைக்காண
விரும்புகின்றோம் வருவீரோ எம்மிடத்தில்?

அம்மன் வீதி,
உரும்பிராய் மேற்கு,
உரும்பிராய்.

தகவல்:
**மனைவி, பிள்ளைகள்.**

(39040) (39-11-14-26)

## வாடகைக்கு

இல.35A, சோமசுந்தரம் அவனியூவிலுள்ள 5 அறைகள் கொண்ட மாடி வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். தொடர்பு: **T.P.No. 222 3858.** **(39026)**

## ஒத்துமாறல்

விஞ்ஞான ஆசிரியர் ஒருவர் மட்டக்களப்பில் இருந்து தனது சேவையை யாழ்ப்பாணத்தில் சேவையாற்றும் இன்னொருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். விரும்புவோர் தொலைபேசி 0777 421575 இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். (39018)

## வீடு வாடகைக்கு

நல்லூர் ஆலயச் சுற்றாடலில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. (**N.G.O.** விரும்பத்தக்கது) தொடர்பு: **R.**நடேசபிள்ளை, 38, முருகமூர்த்தி வீதி, வண்.வடமேற்கு, யாழ்ப்பாணம். **T.P.:** 077 6590322. (39041)

## ஆள்கள் தேவை

நிலாவரைப் பகுதியில் பண்ணையில் தங்கி வேலைசெய்வதற்கு ஆள்கள் தேவை. குடும்பமாகத் தங்கி வேலைசெய்ய விரும்புபவர்களுக்கு முன்னுரிமை.

தொடர்பு:
(38992) 077 6199897, 0777 570400.

## பிரத்தியேக பாதுகாப்புச் சேவை - 2005
## வடபிராந்திய போக்குவரத்துச் சபை

வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையின் சாலைகளிற்கான பாதுகாப்புக் கடமைக்காகப் பிரத்தியேக பாதுகாப்பு சேவையினரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. அதன் விவரம் வருமாறு:-

| | | |
|---|---|---|
| 1. யாழ்.சாலை | காலை 06.00 - 18.00 - 05 பேர் | |
| | மாலை 18.00 - 06.00 - 06 பேர் | |
| 2. யாழ்.பேருந்து நிலையம் | காலை 06.00 - 18.00 - 03 பேர் | |
| | மாலை 18.00 - 06.00 - 02 பேர் | |
| 3. பருத்தித்துறைச் சாலை | காலை 06.00 - 18.00 - 03 பேர் | |
| | மாலை 18.00 - 06.00 - 03 பேர் | |
| 4. காரைநகர்ச் சாலை | காலை 06.00 - 18.00 - 03 பேர் | |
| | மாலை 18.00 - 06.00 - 03 பேர் | |
| 5. மன்னார் சாலை | காலை 06.00 - 18.00 - 04 பேர் | |
| | மாலை 18.00 - 06.00 - 04 பேர் | |

*ஒவ்வொரு சாலைகளிலும் பாதுகாப்புக் கடமை புரிவதற்கு ஒரு நாளுக்கு 12 மணித்தியாலங்களுக்கு ஒருவருடைய வேதனத்தைக் குறிப்பிடவும்.*

**விண்ணப்பிக்க விரும்புவர்கள்:**

1. கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரத்தியேக பாதுகாப்புச் சேவை 2005" எனக் குறிப்பிட்டுப் பதிவுத்தபால் மூலம் சகல விண்ணப்பங்களும் "பொதுமுகாமையாளர், வ.பி.போ. சபை, பலாலி வீதி, கோண்டாவில்" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.
2. சேவைகள் திருப்தியற்றதாகக் காணும் பட்சத்தில் ஒரு மாத கால முன்னறிவித்தலுடன் சேவை இடைநிறுத்தம் செய்யப்படும்.
3. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நகல் தகவல்களை விண்ணப்பப் படிவத்தோடு இணைத்தல்வேண்டும்.
   1. பெயரும் விலாசமும்
   2. தொலைபேசி இல.
   3. சேவைப்பதிவின் இலக்கமும் திகதியும்
   4. சேவையின் தன்மை
   5. பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக் கடிதம்
   6. வங்கியின் பெயர்

*விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி:* 2004-12-15
*குறிப்பு:* கொடுப்பனவுகள் விண்ணப்பத்தில் பதிவுசெய்யும் பெயரிலேயே வழங்கப்படும்.

**க.கணேசபிள்ளை,**
பொது முகாமையாளர்,
பிராந்திய போக்குவரத்துச் சபை,
கோண்டாவில்.

(சி-39307) (26-14-11)

## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் சுப்பிரமணியம்

கொக்குவில் மேற்கு, முதலியார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் தாவடி தெற்கை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சுப்பிரமணியம் 24.11.2004 புதன்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் மனோன்மணியின் அன்புக் கணவரும் துரைசிங்கம் (ஜோமனி), சுகுந்தலாதேவி, அனுசாதேவி, கோணேஸ்வரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் பவானி, பாலசிங்கம் (நல்லூர்), புலேந்திரராசா (ஏதயிட்டி), அனுசா ஆகியோரின் அன்பு மாமனாரும் தாரணி, சர்மினி (ஜேர்மனி), ராஜ்குமார், சர்மிலா (கனடா), சரணியா, சுஜீவன், விசியா, நர்மினி, மௌளீசன், துசானன் (கனடா) ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2004) திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகத் தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*5, வேம்படி தாவடி,*
*கொக்குவில்.*

தகவல்:
கோணேஸ்வரன் *(மகன்)*,
பாலசிங்கம், புலேந்திரராசா
*(மருமக்கள்).*

(39044)(39-11-14-26)

# மினிபஸ் தடம்புரண்டு ஒருவர் காயம்

யாழ்ப்பாணம்,நவ.28

அல்லைப்பிட்டிப் பகுதியில் மினிபஸ் ஒன்று தடம்புரண்டதில் பயணிகள் பெரும் அல்லோல கல்லோலப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6.45 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், 780ஆம் பாதையில் யாழ்ப்பாணத்தில் இருந்து ஊர்காவற்றுறை நோக்கிச் சென்ற மினிபஸ்ஸே குடைசாய்ந்து தண்ணீருக்குள் வீழ்ந்தது.

இச்சம்பவத்தில் படுகாயமடைந்ததாகக் கூறப்படும் ஒருவர் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

வேலணையைச் சேர்ந்த மலைமாணிக்கம் மனோரஞ்சன் (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார். பலர் சிறுகாயங்களுக்குட்பட்டு தனியார் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுச்சென்றதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-12)


இன்று மங்களகரமான திறப்புவிழா!

நாள் : இன்று (28.11.2004)
நேரம் : காலை 9.30 மணி முதல் 11.00 மணிவரை
இடம் : 627, பருத்தித்துறை வீதி, முத்திரைச் சந்தி, நல்லூர்.

யாழிலும் எமது சேவை

வானவில் டிஜிட்டல் கோம்

Vanavill Digital Home

எம்மிடம் பழைய, புதிய, இடைக்கால Audio, MP3 CDக்கள் மிக மலிவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

High Quality Audio, Video, VHS to CD, DVD Recording, Designing, Computer Repairing & Software Development செய்து கொடுக்கப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

-ஸ்தாபனத்தினர்

(C/3983)


## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணில் 05 - 12 - 1946

விண்ணில் 15 - 10 - 2004



### அமரர் பொன்னுத்துரை சிவலிங்கம்

கடந்த 15.10.2004இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவன் பொன்னுத்துரை சிவலிங்கம் அவர்களின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று (28.11.2004) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

முக்கிய குறிப்பு:

*இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.*

*G.P.S. வீதி, கல்வியங்காடு.*

சி.லோகாம்பிகை (இந்திரா - மனைவி).

(39038) (24-13-14)


இன்னும் நீங்கள் தாமதிக்கின்றீர்களா !

A/L தகைமைகளுடன் மாத்திரம் வெளிநாட்டு உயர்கல்வியினைப் பெற முயற்சி செய்கின்ற மாணவர்களில் அனேகமானோர் பிரபல பல்கலைக்கழகங்களில் அனுமதிபெறுவதிலும் ( Admission ) உயர்கல்விக்கான Visa க்களைப்பெறுவதிலும் தவறிவிடுகின்றனர். சர்வதேச அங்கீகாரமுள்ள EDEXCEL, UK வழங்கும் BTEC HND தகைமை உலகின் பிரசித்தி பெற்ற பல பல்கலைக்கழகங்களில் BSc.(Hons) பட்டப்படிப்பின் இறுதியாண்டிற்கான நேரடி அனுமதியைப்பெற்றுத்தருவதோடு உயர்கல்விக்கான Visa க்களையும் உறுதிசெய்கின்றது.



F.C. நிருஷன்
யாழ்ப்பாணம்

இடம்பெயர்ந்த பின்னர் நானும் எனது பெற்றோரும் மீண்டும் யாழ்ப்பாணத்தில் மீள்குடியேறினோம். அந்தவேளையில் எனது எதிர்காலம் கேள்விக்குறியாகவே இருந்தது. IIS நிறுவனத்தில் இவ் HND கற்கை நெறியில் இணைந்ததன் மூலமாக நிச்சயமான எதிர்காலம் ஒன்றினை உறுதிப்படுத்தியுள்ளேன்.

BTEC HND
World Class Qualifications
Delivered Locally....... Recognised Globally

BSc ( Hons ) / BEng ( Hons )
1 year at leading Universities in UK,USA,Australia,Canada etc

BTEC HND
Computing / Software Engineering / Business Information Technology ( 1 ½ years )

GCE A/L
with 2 Subjects



S. மிதுனாளினி
மீசாலை

உள்நாட்டு பல்கலைக்கழகங்களில் அனுமதிகிடைப்பது கடினமாக இருக்கின்ற இந்தவேளையில் சர்வதேச தரம் வாய்ந்த Degree யை HND கற்கைநெறி மூலமாக யாழ்ப்பாணத்திலேயே பெறமுடிந்துள்ளது. இது எமக்கு IIS நிறுவனம் உருவாக்கித்தந்த மிகப் பெரிய வாய்ப்பு ஆகும்.

IIS நிறுவனம் தற்போது மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியுள்ளது

edexcel INTERNATIONAL
Approved Training Centre

INSTITUTE OF INFORMATICS STUDIES
# 100, Clock Tower Road, Jaffna.
P No.: 021 222 2831 / 021 222 6933


## அறிவுறுத்தல் கூட்டம்

தென்மராட்சி,நவ.28

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான பாடசாலை மட்டக் கணிப்பீடு தொடர்பான அறிவுறுத்தற் கூட்டம் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்குச் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்குப் பாடசாலை அதிபர்களையும், ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான பாடசாலை மட்டக் கணிப்பீட்டுக்குப் பொறுப்பான ஆசிரியரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (8-117-202)

## நூல்களின் வெளியீட்டுவிழா

வலி.தெற்கு,நவ.28

தெல்லிப்பழை பாலஞானோதய சபையினரின் 37 ஆவது, 38 ஆவது நூல்களின் வெளியீட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை காசிவிநாயகர் தேவஸ்தான சிவகடாட்சக் குருக்கள் இசையரங்கில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை வகிப்பார்.

37ஆவது நூலாக விநாயகர் திருப்பள்ளி எழுச்சி, 38ஆவது நூலாகப் புலியூர்ப் புராணம் ஆகிய நூல்கள் வெளியிடப்படவுள்ளன.(8-152)

## கொடுப்பனவு அதிகரிப்பு

வலி.தெற்கு,நவ.28

டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சையில் அலுவலர்களாகக் கடமையாற்றவுள்ள அலுவலர்களுக்கான நாளாந்தக் கொடுப்பனவை இவ்வருடம் பரீட்சைத் திணைக்களம் அதிகரித்துள்ளது.

புதிதாக வழங்கப்படவுள்ள புதிய கொடுப்பனவு விவரங்கள் நாளொன்றுப்படி வருமாறு:

இணைப்பு அலுவலர்கள் 525 ரூபா, உதவி இணைப்பாளர்கள் 450 ரூபா, இணைப்பு அலுவலக உதவியாளர் 325ரூபா, பரீட்சை மேற்பார்வையாளர்கள் 425 ரூபா, நிரந்தர நோக்குநர்கள் 375 ரூபா, நோக்குநர்கள் 350 ரூபா, உதவிப் பணியாளர்கள் 250 ரூபா. (8-152)

## வழிகாட்டல் கருத்தரங்குகள்

யாழ்ப்பாணம்,நவ.28

இணுவில் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கம் நடத்தும் ஜி.சீ.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு இணுவில் பொதுநூலகக் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (8-202)

★★★

யாழ்ப்பாணம்,நவ.28

மானிப்பாய் பரிஷ் லியோக் கழகத்தின் ஏற்பாட்டில் எதிர்வரும் ஜி.சீ.ஈ. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்குகள் இன்று ஞாயிற்றுக்கிழமையும் நாளை திங்கட்கிழமையும் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

இக்கருத்தரங்குகளில் பங்குபற்றும் மாணவர்களுக்கு இலவச பாடக்கையேடுகள் வழங்கப்படும். (8-202)

## பிரசவ விடுதி திறப்பு விழா

வலி.தென்மேற்கு,நவ.28


பண்டத்தரிப்பு அரசினர் கிராமிய வைத்தியசாலையில் 'றான்' உதவியுடன் மூன்று வருடங்களுக்கு முன்னர் நிறுவப்பட்ட பிரசவ விடுதியின் (மகப்பேற்று நிலையம்) திறப்பு விழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு நடைபெறவுள்ளது.

வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் ஏ.செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம அதிதியாக யாழ். பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் இ.தெய்வேந்திரன் கலந்துகொண்டு பிரசவ விடுதியைத் திறந்துவைப்பார்.

யாழ். சுகாதார சேவைப் பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனையின் நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சிவலிங்கம் உட்பட மற்றும் பலர் இதில் கலந்துகொள்வார்கள். (எ-315)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
03 - 11 - 1917



மறைவு
12 - 10 - 2003

அமரர் செல்லர் கணபதிப்பிள்ளை *(குழந்தை)*

(இளைப்பாறிய தபால் ஊழியர்)

திதி: 28.11.2004

ஓராண்டு ஓடி மறைந்தாலும்
நீங்கள் எங்கள் மீது வைத்திருந்த பாசமும் நீங்காது!
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

*"சரஸ்வதி பவனம்",*
*அச்சுவேலி வடக்கு,*
*அச்சுவேலி.*

பிரிவால் துயருறும்:
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

(38968) (24-14-13)

## அபிவிருத்தி வேலைகள் பற்றி ஆராயக் கூட்டம்

வலி.தென்மேற்குப் பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின பிரிவில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிப் பொது அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பட்டின உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச சபையின் செயலாளரினால் நடத்தப்படும் இக்கூட்டத்தில் இப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.(135)








பரிசில்கள்
விலைக்கழிவுகள்
குறைந்த வட்டி விகிதத்தில் தவணைக் கட்டணவசதிகள்

**இவை மட்டுமல்ல.....**
உங்களில் ஒருவருக்கு

*அதிர்ஷ்டமோ அதிர்ஷ்டம்!*

**சிங்கர்** வழங்கும்
கொழும்பு - யாழ்ப்பாணத்துக்கான
Expo-Air இன் இருவழிப் பயணச்சீட்டு!

EXPOAIR
*your friend in the skies...*

மேலதிக விவரங்களுக்கு :

**சிங்கர்** காட்சியறை
01, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ☎:021 222 5408

**SINGER**
At Home World Wide



## இதோ யாழ்.மக்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்!



யாழ். இந்துக் கல்லூரிக்கு அருகிலுள்ள
சைவபரிபாலனசபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்
(நீராவியடி
இப்பொழுது விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.



★ கதிரைகள் ★ மேசைகள் ★ அலுமாரிகள் ★ கட்டில்கள்
★ சாப்பாட்டு மேசைகள் ★ சாய்வு நாற்காலிகள்
★ T.V. மேசைகள் ★ புகைப்பட மேசைகள்
★ கொம்பியூட்டர் மேசைகள்
★ கண்ணாடி மேசைகள்

முதலியன இன்னும் பல...

**விற்பனை இன்றிலிருந்து 30.11.2004 வரை மட்டுமே!**


**மொரட்டுவவில் கைதேர்ந்த பயிற்சி பெற்றவர்களால் உருவாக்கப் பெற்றவை.**

இவை அனைத்தையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள இன்றே விஜயஞ் செய்து முற்கூட்டியே உங்களுக்குத் தேவையான தளபாடங்களை ஒதுக்கிக்கொள்ளுங்கள்!

(38809) (29-14-13-24)

**பார்வையிடும் நேரம்: தினசரி காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை.**


# ஆறாவது மாத நினைவலைகள்



அமரர்
## முத்துச்சாமி பத்மநாதன்
(றிக்கோ ஹோட்டல் உரிமையாளர்)

தோற்றம் **05.04.1945**

உதிர்வு **20.05.2004**

அன்புக்கும் பாசத்திற்கும் பிரகாச ஒளியாய் இருந்த
எங்கள் அண்ணா! பாயும் நதிக்கும் பறக்கும் பறவைக்கும்
ஓடும் ரயிலுக்கும் கூட ஜாதிகள் அமைத்தவன் நீ அண்ணா!
நினைத்துப் பார்க்க முடியவில்லை நீர் எம்மை விட்டுப்பிரிந்தது
நிஜந்தானா என்று! உமது புன்னகை பூத்த முகம் பொலிவிழந்து
போனதென்ன? மெல்லச் சிரித்து எங்களை
மேனி சிலிர்க்க வைத்தீர் அண்ணா! உமது உடன் பிறப்புக்கள்
சிந்திய இரத்தம் உமது மனைகளில் ஆறாக
ஓடுகின்றது அண்ணா! நீர் எமக்குக் கொடுத்தருள்வீர் என்று
ஏங்கி நின்றோம் அண்ணா!
கும்பிட்ட எம் கைகளை முறித்துவிட்டீர் அண்ணா!
உம் அன்பு உள்ளங்களை ஆறாத்துயிலாழ்த்தி
நீர் மீளாத்துயில் கொண்டீரோ? உங்கள் ஆத்மா
சாந்தியடைய எல்லாம் வல்ல ஈச்சமோட்டை
கலட்டிப்புலம் ஸ்ரீ ஞானவைரவரை வேண்டி நிற்கின்றோம்.

22/3A விதானையார் வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் இரத்தத்துடன் கலந்த
சகோதரர்கள், மைத்துனர்கள், மைத்துனிகள்,
றிக்கோ குடும்பம், தம்பி ஈசா (கனடா).

# சிலி மாநாட்டின் கருப்பொருளை திசை திருப்பிய அதிபர் புஷ்

உலக வலம்

எப்பொழுதுமே பொருளாதார விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து விவாதிக்கும் ஆஸிய - பசுபிக் பொருளாதார மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் "பயங்கரவாதம் மீதான போர்" என்ற தனக்கு மட்டுமே முக்கியமான விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்கச் செய்திருந்தமையானது அந்த நிறுவனத்தின் உறுப்புநாடுகள் மத்தியில் அதிருப்தியையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

'எபெக்' (APEC) என்றழைக்கப்படும் ஆஸிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்புக்கான இந்த நிறுவனம், 1989ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. ஆஸிய பசுபிக் எல்லைப்புற நாடுகளின் வர்த்தகம், முதலீடுகள் பற்றியே இந்த மாநாட்டில் விவாதிக்கப்படுவது வழமையாக இருந்துவந்துள்ளது. ஆனால், 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி அமெரிக்கா மீது அல்கெய்டாத் தீவிரவாதிகள் நடத்திய தற்கொலைத் தாக்குதலையடுத்து பாதுகாப்பு ஒத்துழைப்புக்களைப் பற்றிய விடயங்களை விவாதிக்கும் ஒருபோக்கு உருவாகி வந்துள்ளது.

**புஷ்ஷின் மேலாதிக்கம்**

சிலி நாட்டின் தலைநகர் சந்தியாகோவில் நடைபெற்ற இந்த மாநாட்டில் அமெரிக்க அதிபர் புஷ், மேலாதிக்கத் தோரணையில் தமக்கும் தமது நாட்டுக்குமே முக்கியமான 'பயங்கரவாதம் மீதான போர்' என்ற விடயத்தையே முக்கியத்துவம் கொடுத்து விவாதிக்கச் செய்துள்ளார் என்று இந்த மாநாட்டின் உறுப்பு நாடுகளின் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது.


வர்த்தகம், கப்பல் வர்த்தகப் பாதுகாப்புச் செலவுகள் அதிகரிப்பு மற்றும் உலக வர்த்தக விவகாரங்கள் பற்றியெல்லாம் விவாதிக்கப்படுவதற்கு ஏராளமான விடயங்கள் இருந்த வேளையில், மாநாட்டின் கவனத்தைப் பாதுகாப்பு விவகாரங்களுக்கு, குறிப்பாக வடகொரிய அணு ஆயுத உற்பத்திப் பிரச்சினை பக்கமாகவே திருப்பப்பட்டுவிட்டது.

மாநாட்டு விவாதங்களின்போது பிரதிநிதிகள் மீண்டும் பொருளாதார விவகாரங்களுக்குத் திரும்பவேண்டும் என்று ஆஸ்திரேலியப் பிரதமர் ஜோன் ஹவேர்ட் வற்புறுத்தினார்.

இதேவிதமான கருத்தை இந்தோனேஷிய பொருளாதார அமைச்சர் அபுறிசால் பெக்ரியும் வலியுறுத்தினார்.

பொருளாதார விடயங்களுக்குப் புறம்பான விடயங்கங்களும் முக்கியமானவையாக இருக்கலாம். ஆனால், அது விவாதிக்கப்படவேண்டிய இடம் இதுவல்லவென்று இந்தோனேஷியப் பிரதிநிதி கூறியதாகப் பத்திரிகைகளில் செய்திகள் வந்துள்ளன.

மாநாட்டை, அனுசரணையாளராகவிருந்து நடத்துகின்ற சிலி நாட்டின் பிரதிநிதியொருவர் இதுபற்றிக் கருத்து வெளியிடுகையில், ஒபெக் பொருளாதார வர்த்தக விடயங்களையே பிரதானமாக விவாதிப்பது வழக்கமானாலும், வர்த்தக அமைச்சர்களுடன் வெளிநாட்டு அமைச்சர்களும் இம்மாநாட்டில் கலந்துகொள்வதால் மாநாட்டில் வேறு விடயங்களையும் பேசுவது தவிர்க்கப்படவில்லையேன்று கூறினார்.



**மெய்க்காவலர் விவகாரம்**

அதிபர் புஷ்ஷின் ஆதிக்க மனப்பான்மை சிலியில் இடம்பெற்ற ஒபெக் மாநாட்டில் மட்டுமல்ல வேறு ஒரு சம்பவத்திலும் வெளியாகியிருப்பதாக விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த அதிபர் புஷ், உள்ளூர் பொலீஸாருடன் ஒரு சிறு சம்பவத்தில் தனது முரட்டுத்தனத்தைக் காட்டிக்கொண்டார் என்று கூறப்படுகின்றது. வழக்கமாகவே மிகவும் சட்ட ஒழுங்குடன் நடந்துகொள்ளும் சிலி நாட்டு மக்களுக்கு இச்சம்பவம் ஆச்சரியத்தை விளைவித்துள்ளது.

**ஊடகங்களில் முதலிடம்**

ஆஸி. - பசுபிக் பொருளாதார மாநாட்டுக்கு வந்திருந்த அதிபர் புஷ், ஏனைய இருபது நாடுகளின் தலைவர்களோடு இரவு விருந்து மண்டபத்தை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார். அவருடன் வந்திருந்த மெய்ப்பாதுகாவலர் ஒருவரை சிலி பொலீஸார் தடுத்துநிறுத்த முயன்றனர். இதனை அவதானித்த புஷ், உடனே அவ்விடத்திற்குச் சென்று தமது காவலரை மீட்டுக்கொண்டு திரும்பிச்சென்றார்.

புஷ் தனது தலையை ஆட்டிக்கொண்டு அப்பால் நடந்துசெல்லும் காட்சி, அன்றைய உள்ளூர் செய்தி ஊடகங்களில் முக்கிய இடத்தைப் பிடித்துக்கொண்டன.

உச்சி மாநாட்டின் முக்கிய தீர்மானங்கள் எல்லாம் இரண்டாம், மூன்றாம் இடத்துக்குத் தள்ளப்பட்டிருந்தன.

தென்அமெரிக்காவில் மிகத் தூரத்திலுள்ள சிலி நாடு, உலகப் பயங்கரவாதத்தினாலோ அம்மாதிரிப் பிரச்சினைகளாலோ பாதிக்கப்படாதது.

பாதுகாப்பு விடயங்களைக் கையாள்வதில் சிலி நாட்டுக்கும் அமெரிக்காவுக்குமிடையில் உள்ள வித்தியாசத்தை இந்த நிகழ்வு எடுத்துக் காட்டுவதாகச் சில நாட்டவர்கள் கருதுகிறார்கள்.

"இங்கு பாதுகாப்பு மிகவும் நன்றாகவேயுள்ளது. இங்குள்ள பொலீஸார் சிறப்பாகச் செயற்படுகிறார்கள்; உயர் தொழிலாகக் கருதுகிறார்கள். இங்கு நடைமுறையிலுள்ள பாதுகாப்பு விதிகள் அனைத்தையும் அமெரிக்கப் பாதுகாவலர்கள் மீறி நடக்கப்பார்க்கிறார்கள். இது முரட்டுத்தனம், வேறொன்றுமில்லை" என்று கருத்துவெளியிட்டார் ஒரு தொழிலாளர்.

## மத்திய கிழக்கில் மீண்டும் சமரச முயற்சி

இந்தச் சம்பவம் பற்றி உள்துறை அமைச்சர் ஜொஸே மிகுவல் இன்சுல்ஸா, மிகவும் உறைப்பாகவே கருத்து வெளியிட்டார். "சிலி பொலீஸாரிடமிருந்து அமெரிக்கர்களுக்குப் பாதுகாப்பு விடயத்தில் பல சிக்கல்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், சிலியில் ஆட்சிப்பொறுப்பில் நாங்கள்தான் இருக்கிறோம்" என்றார் அவர்.

புஷ்ஷின் மெய்ப்பாதுகாவலர்கள் ஏற்கனவே ஒப்புக்கொண்டிருந்த ஏற்பாடுகளை மீறி நடந்துள்ளார்கள். ஒவ்வொரு தலைவரோடும் ஒரு மெய்ப்பாதுகாவலர் மட்டுமே உட்செல்லலாம் என்று முன்கூட்டியே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது என்று சிலி அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதுபற்றிச் சிலி வெளியுறவு அமைச்சர் இக்னேஷியஸ் வோக்கா தொலைக்காட்சிப் பேட்டியொன்றில் -

"அதிபர் புஷ்ஷின் மெய்ப்பாதுகாவலர்கள் ஒழுங்குவிதிகள் எதனையும் கொஞ்சமும் மதிக்கவில்லை" என்று கூறினார்.

**விருந்துபசாரம் இரத்து**

அமெரிக்க காவலர்களின் செயற்பாட்டின் காரணமாக சிலி அரசு ஏற்கனவே தீர்மானித்திருந்த வழமையான விருந்துபசாரமொன்றை சிலி அரசு இரத்துச் செய்தது. இந்த விருந்துக்கு புஷ் உட்பட சகல வெளிநாட்டுத் தலைவர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

## வடகொரியா—ஈரானுக்கு எச்சரிக்கை

ஏற்கனவே ஒப்புக்கொண்டிருந்த பாதுகாப்பு ஏற்பாடுகளில் அமெரிக்கப் பாதுகாவலர்கள் குறைகூறியதால் இந்த விருந்துபசாரம் இரத்துச் செய்யப்பட்டதாக சிலி அதிகாரிகள் கூறியுள்ள அதேசமயம், ஜனாதிபதி மாளிகைக்குள் நுழையும்போது உலோகக் கண்டுபிடிப்பு சாதனம் ஒன்றுக்கூடாக நடந்துசெல்வதை விருந்தினர்கள் சிலர் விரும்பவில்லையென்றும், அதன் காரணமாகவே விருந்து கைவிடப்பட்டதாகவும் வேறு சில வட்டாரங்கள் தெரிவித்தன.

**மத்திய கிழக்கில் கொலின்பவல்**

பதவி விலகவிருக்கும் அமெரிக்க ராஜாங்க அமைச்சர் கொலின்பவல் தமது கடைசி முயற்சியாக பலஸ்தீனப் பிரச்சினைகளுக்கு ஒரு முடிவு கண்டுவிடும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார். பிரிட்டிஷ் பிரதமர் பிளயரின் அமெரிக்க விஜயம் நிகழ்ந்த சமயத்தில் பலஸ்தீன அதிபர் யஸீர் அரபாத்தின் மறைவும் இடம்பெற்றது. அந்தவேளையில், அமெரிக்க - பிரிட்டிஷ் தலைவர்களின் யோசனைகளின் பிரகாரம் கொலின்பவல் மத்திய கிழக்கில் பிரசன்னமாகி பலரையும் சந்தித்து ஆலோசனைகள் நடத்தியுள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஏரியல் ஷெரோனைச் சந்தித்துள்ள கொலின்பவல், பின்னர் ஜெரிக்கோ நகரில் பலஸ்தீனத் தலைவர்களையும் சந்தித்துள்ளார்.

யஸீர் அரபாத்தின் மறைவு அருமையான சந்தர்ப்பத்தை இப்பொழுது ஏற்படுத்தித் தந்துள்ளது. இதனைத் தவற விட்டுவிடக்கூடாது என்று பவல் கூறியுள்ளார்.

ஜனவரி 9ஆம் திகதி நடக்கவிருக்கும் பலஸ்தீன அதிபர் தேர்தல் அமைதியாக நடந்து முடிய அமெரிக்கா சகலவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று பவல் கூறியுள்ளார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஷெரோனுடன் மட்டுமன்றிப் பலஸ்தீனத் தலைவர்களான பிரதமர் அஹமத் ஹுரியா மற்றும் அராபாத்தின் இடத்திற்குத் தெரிவுசெய்யப்படக்கூடும் என்று பெரிதாக எதிர்பார்க்கப்படும் முஹமது அப்பாஸ் முதலியவர்களுடனும் பவல் ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.

இந்தச் சந்திப்புக்களின் காரணமாகப் பலஸ்தீனத்தில் ஒரு புது திருப்பம் உருவாகக்கூடிய சூழ்நிலை தென்படுவதாகக் கூறப்படுகின்றது.

பவலுடன் பேச்சுக்களை நடத்தியதன் பின்னர் கருத்து வெளியிட்டுள்ள இஸ்ரேலிய முன்னாள் பிரதமர் சில்வன் ஷலோம், பலஸ்தீனத் தேர்தல்தான் முதல் முக்கியத்துவம், இதன் மூலம் பலஸ்தீனத் தலைமையொன்று உருவாகும். அவர்களுடன் நாம் ஒன்றாக அமர்ந்து எல்லாப் பிரச்சினைகள் பற்றியும் ஆலோசிக்க முடியும் என்று தெரிவித்துள்ளார்.

★ ★ ★

பலஸ்தீனப் பிரச்சினைகளுக்கு யஸீர் அரபாத்தே தடைக்கல்லாக இருந்துவருகிறார் என்றுகூறி அமைதி முயற்சிகளிலிருந்து முன்னர் விலகிக்கொண்டிருந்த அமெரிக்கா, மீண்டும் அந்த விவகாரத்தில் தலையிடத் தொடங்கியிருப்பது பயனை ஏற்படுத்துமா என்று பலவாறும் கேள்விகள் எழுந்துள்ளபோதிலும், அரபாத்தின் மறைவு அந்த நாட்டுக்கு ஊக்கத்தைக் கொடுத்திருப்பதுபோல் தோன்றுகின்றது.

**கொள்கையில் பற்றுறுதி**

என்றாலும், யஸீர் அரபாத்திற்குப் பிறகு பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டிருப்பவரும் பத்தா அமைப்பின் சார்பில் அதிபர் பதவிக்குப் போட்டியிடுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டிருப்பவருமான முஹம்மது அப்பாஸ், முன்னாள் அதிபர் யஸீர் அரபாத்தின் வழிகளையே உறுதியுடன் பற்றிநிற்கப்போவதாக அறிவித்துள்ளார்.

இதற்கிடையில், பலஸ்தீனத்தில் அமைதியை ஏற்படுத்தவும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உதவவும் ரஷ்யாவும் தன் தரப்பில் சில பல நடவடிக்கைகளை எடுக்கத் தொடங்கியிருக்கிறது. அந்தவகையில், ரஷ்ய வெளிநாட்டமைச்சர் சொகேய்லாவ்ரோவ் மத்திய கிழக்கிற்கு விஜயம் செய்து இருதரப்பு உயர் தலைவர்களோடு ஆலோசனைகளை நடத்தியுள்ளார்.

அதன்பிறகு அவர் பத்திரிகையாளர்களிடம் பேசியபொழுது -

அரபாத்தின் மறைவையடுத்து பேச்சுக்களை முன்னோக்கி நகர்த்துவதற்கு இருதரப்பும் மிகுந்த ஆர்வம் கொண்டிருப்பதாகத் தாம் கண்டுபிடித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அரபாத்தின் மறைவுக்கு அஞ்சலி செலுத்துவதற்கு விசேடமாகக் கூட்டப்பட்ட ஆட்சிச் சபைக்கூட்டத்தில் அப்பாஸ் பின்வருமாறு கூறி பிரதிக்ஞை செய்தார். "நீங்கள் எப்பொழுதுமே இலட்சியமாகக் கொண்டிருந்த, ஜெருஸலேமைத் தலைநகராகக் கொண்ட பலஸ்தீன நாட்டை நிறுவுவதற்காக நீங்கள் அமைத்துச் சென்ற பாதையைப் பின்பற்றுவதற்கு நாங்கள் உறுதிகொள்கின்றோம்.

"மீளவும் திரும்புவதற்கு எமக்குள்ள உரிமையை வென்றெடுக்கும்வரை - அகதிகளின் துன்பங்கள் களையப்படும்வரை - நாம் ஓயப்போவதில்லை" என்று அவர் கூறினார்.

**அணுத்திட்டமிருந்தால் கைவிடுக!**

அணு ஆயுதங்களைத் தயாரிக்கும் யோசனை ஏதும் இருந்தால் அதை உடனடியாகக் கைவிடவேண்டும் என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் வடகொரியாவுக்கும் ஈரானுக்கும் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிலி நாட்டில் நடைபெற்ற ஆஸிய - பசுபிக் நாடுகளின் பொருளாதார மாநாட்டில் உரை நிகழ்த்தியபோதே புஷ் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

வடகொரியாவின் பகுதியிலுள்ள நாடுகள் யாவும் ஒன்றாக அதன் அணு ஆயுதக் கொள்கைக்கு மாறாகவிருக்கின்றனவென்று அதிபர் தெரிவித்தார்.


வடகொரியாவின் அணு ஆயுத முயற்சிகளைக் கைவிடச் செய்வதற்காக கடந்தகாலங்களில் மூன்று முறை பன்நாட்டுப் பேச்சுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. ஆனால், கடந்த செப்ரெம்பரில் பீய்ஜிங்கில் நடைபெறவிருந்த நான்காவது சுற்றுப்பேச்சில் கலந்துகொள்ளாமல் வட கொரியா பகிஷ்காரம் செய்தது. என்றாலும், சமீபகாலமாக மீண்டும் பேச்சுக்களில் கலந்து கொள்ள வடகொரியா விரும்புவதாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேசமயம், ஈரான் அணு ஆயுதம் செய்ய உதவக்கூடியதான யுரேனியத்தைச் செறிவூட்டுவதைக் கைவிடவேண்டும் என்று அதிபர் புஷ் எச்சரிக்கை செய்தார்.

"இது ஒரு பாரதூரமான செயற்பாடு, உலகம் இதை நன்கு அறியும். இதனை ஒரு முடிவுக்குக்கொண்டுவர நாங்கள் முயற்சிசெய்து வருகின்றோம்" என்று புஷ் கூறினார்.

**முழுமையாகக் கைவிடமுடியாது**

இதேசமயம், ஈரான் ஒருபோதும் தனது



அணு ஆய்வுத் திட்டத்தை முழுமையாகக் கைவிடப்போவதில்லையென்றும் ஆனால், அணு ஆயுதப்பரவல் ஒப்பந்தத்துக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்ளும் என்றும் சர்வதேச அணு சக்தி முகவர் அமைப்புக்கான ஈரானியப் பிரதம பிரதிநிதி ஒருவர் கூறியுள்ளார்.

"ஈரான் ஒருபோதும் தனது அணுசக்தித் திட்டத்தை ஆயுத உற்பத்திக்குப் பயன்படுத்தவில்லை. எமது அணு ஆய்வுத் திட்டமெதையும் களையப்போவதில்லை. இது பேச்சுக்குரிய விடயமல்ல. இது கேள்விக்கு அப்பாற்பட்ட விடயம். இது குறித்து அமெரிக்காவுக்கும் கேள்வி எழுப்ப உரிமையில்லை" என்று அவர் தெரிவித்தார். கடந்தவாரம் ஐரோப்பிய யூனியனுக்கு அளித்த ஒரு வாக்குறுதியில் யுரேனியத்தைச் செறிவூட்டும் செயற்பாடுகளைக் கைவிடுவதாக ஈரான் வாக்களித்திருந்தது. இதனை ஐ.நா. அணு ஆயுதக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மொஹம்மது எல்பாடேயும் உறுதிப்படுத்தியிருந்தார்.

ஈரான் தனது அணு ஆயுத உற்பத்தி செய்யக்கூடிய யுரேனியத்தைச் செறிவூட்டும் திட்டத்தைக் கைவிடுவதாயின் ஐரோப்பிய நாடுகளின் ஊக்குவிப்புகள் வழங்கப்படும் என பிரான்ஸ், பிரிட்டன் ஜேர்மனி ஆகிய நாடுகள் தெரிவித்திருந்ததையடுத்து ஈரான் இந்த முடிவையெடுத்திருந்தது. இது தொடர்பாக ஐ.நா. ராஜதந்திரிகள் மத்தியில் விநியோகிக்கப்பட்ட நகல் தீர்மானம் ஒன்று வாஷிங்ரனுக்கும் தெஹ்ரானுக்கும் ஏற்புடையதாக இல்லையென்று கூறப்படுகின்றது. இத் தீர்மானம் மிகவும் பலவீனமானதாகவிருப்பதாக அமெரிக்கா கூறியுள்ளது. செறிவூட்டல் மற்றும் எரிபொருள் சக்தியாக்குவதற்கு யுரேனியத்தைச் சுத்தமாக்குதல் போன்ற செயற்பாடுகள் தோன்றும் சாத்தியமேற்படும் சமயங்களில் ஐ.நா. பாதுகாப்புச் சபையினால் ஈரான்மீது தடைவிதிக்கப்படுவதற்கான அம்சத்தை அத்தீர்மானம் கொண்டிருக்கவேண்டும் என்று அமெரிக்கா விரும்புகின்றது.

**கொமெய்னி உறுதிமொழி**

ஈரான் ஒருபோதும் அணுகுண்டைத் தயாரிக்காது என்று ஈரானிய பிரதி வெளிநாட்டமைச்சர் கோலாமலி கோஷ்ராவ் ஐரோப்பிய நாடாளுமன்ற வெளியுறவுக் குழுவில் சில தினங்களுக்கு முன் பேசுகையில் உறுதிபடக் கூறினார்.

ஈரானின் சமயத்தலைவரான அயத்தெல்லா காமெனி, பல தடவைகள் இதை உறுதியுடன் கூறியுள்ளார் என்று அவர் குறிப்பிட்டார்.

அணுகுண்டை உற்பத்தி செய்வதைத் தடைசெய்து, அவர் தமது சமயத்தீர்ப்பாக அறிவித்துள்ளார் - என்றார் அமைச்சர்.

★

தானைத் தலைவன் தேசியத் தலைவர்
மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன்
அவர்களை, அவரது 50 ஆவது அகவையில் நீடூழி வாழ வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். மாவீரர் களின் தியாகங்களை உன்னதமாக மதித்து நினைவுகூர்வது...: வடமராட்சி கல்விச் சமூகம்.
(சி-39344) (26-13-14)

# கியுபிட் போட் KUPID FORT
(இது ஓர் இந்தியன் தயாரிப்பு)
Capsules



பிரசித்தி பெற்ற, ஆயுர்வேத மூலிகைகளைக் கொண்டு இந்தியாவில் தயாரிக்கப்பட்ட ஒரு மாத்திரை, சர்வதேச உலகில் எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சிறந்த ஔஷதம். கியுபிட் போட் கீழ்க்காணும் பிரச்சினைகளைச் சீர்செய்யும்.

- ஆண் வீரியமின்மை, மலட்டுத் தன்மையைப் போக்க
- வயது முதிர்ந்தோரின் பாலியல் பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு
- சாதாரண பாலியல் குறைபாடுகளைச் சரிப்படுத்த

ஒன்றோ இரண்டு மாத்திரைகளைத் தொடர்ந்து ஒரு மாதம் பாவித்து சிறந்த பயனைப் பெறுங்கள்.

100% ஆயுர்வேத மூலிகைகளால் தயாரிக்கப் பட்டது.

எதுவித பக்கவிளைவுகளும் கிடையாது.

கியுபிட் போட் வில்லைகள் தாம்பத்திய வாழ்வில் ஒரு மறுமலர்ச்சி.

கியுபிட் போட் என்று பெயர் சொல்லிக் கேட்டு வாங்குங்கள்.

**நாடெங்கிலும் உள்ள சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.**

வைத்திய ஆலோசனையைப்பெற்று சிறந்த பயனை அடையுங்கள்.
(C/39191)(42-13-14-26)

# விற்பனைக்கு உண்டு
ஸ்ருடியோ சாமான்கள்
மற்றும்
வீட்டுத் தளபாடங்கள்
விற்பனைக்கு உண்டு.

**சித்திரகலா படப்பிடிப்பாளர்**
3, செட்டித் தெரு ஒழுங்கை,
நல்லூர்.
(38966)

## எழுவைதீவில் கரை ஒதுங்கும் முதலாம் தர தேயிலைப் பொதிகள்

ஊர்காவற்றுறை,நவ.28

எழுவைதீவுப் பிரதேசத்தில் பொதிசெய்யப் பட்ட முதலாம் தரத் தேயிலைத் துகள்கள் அடங் கிய பொதிகள் கரையொதுங்கி வருகின்றன.

இவ்வாறு கரையொதுங்கிய மூன்று பொதி கள அண்மையில் பொதுமக்களால் கண்டெடுக் கப்பட்டுள்ளன.

இவை பிளாஸ்ரிக் போத்தல்களில் காற் றுப் உட்புகாதவாறு நன்கு பொதிசெய்யப்பட்டுக் காணப்படுகின்றன. கடலில் வித்தியாசமான பொதிகள் கரை ஒதுங்கி வருவதை அவதா னித்த சிலர், சந்தேகத்துடன் அதனை எடுத்துப் பார்த்தபோது அவற்றி னுள் மெல்லிய கறுப்பு நிறத்திலான பெரிய துகள்கள் காணப்பட் டன.

எனினும், அவை போதைவஸ்துகளாக இருக்கலாம் என எண் ணிய அவர்கள், இத னைப் பலரிடம் காட்டி விசாரித்தபோதே அவை முதலாந்தரத் தேயி லைத் துகள்கள் என அடையாளம் கண்டு கொள்ளப்பட்டன.

வாழ்நாளில் முத லாந்தரத் தேயிலைப் பானத்தைத் தாங்கள் அருந்தியதில்லை எனத் தெரிவித்த அவர் கள், அவற்றைக் கொண்டு சுவையான தேநீர் தயாரித்து வரு வதாகத் தெரிவித்த னர்.

எனினும் இப் பொதிகள் எவ்வாறு கரையொதுங்கின என் பது சந்தேகமாகவுள் ளது. சிலவேளைகளில் அவை கப்பல்களில் இருந்து தவறி வீழ்ந் திருக்கலாமென அவர் கள் தெரிவித்தனர்.

(எ-16)

# அறிவித்தல்
**வடமராட்சி சிற்றூர்தி சேவைச் சங்கம், பருத்தித்துறை கிளை - (ஹைஏஸ்) சொகுசு வான் சேவை**

மேற்குறிக்கப்பட்ட சங்கத்தால் வடமராட்சி - கொழும்பு இடையான சொகுசு வான் சேவை 01.12.2004 முதல் ஆரம்பமாகும். 28.11.2004 முதல் வடமராட்சியில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களில் ஆசனப் பதிவுகள் மேற்கொள்ளப்படும்.

1. பருத்தித்துறை – சிற்றூர்திச் சேவைச் சங்க பருத்தித்துறைத் தரிப்பிட பணிமனை.
2. நெல்லியடி – டினா றைக்கோடிங் பார், பரு/வீதி, நெல்லியடி.
3. வல்வெட்டித்துறை – கௌரி தொலைத் தொடர்பகம், வாடி வீதி, ஆதிகோவிலடி. T.P.: 2263326

மேற்குறிக்கப்பட்ட சேவையில் இணைந்துகொள்ள விரும்பும் ஹைஏஸ் உரிமையாளர்கள், விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து அங்கத்துவத்தைப் பெற்றுக்கொளளலாம்.

இச்சங்கத்தில் பதிவுசெய்யப்படாத ஹைஏஸ் வான்கள் தனிப் பட்ட வாடகை (வெளி மாவட்டம்) அல்லது ஆசனப் பதிவில் மூலமோ சேவையில் ஈடுபட அனுமதிக்கப்படமாட்டாது.

*உரிமையாளர்கள் உடன் தொடர்புகொண்டு பதிவுசெய்யவும்.*

வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்கம்,
வடமராட்சி.
(சி-39313)(34-13-14-26)

# ஆடை விற்பனைக்கு



*இறக்குமதி செய்யப்பட்ட ஆடவர், மகளிர், சிறுவர்களுக்கான சகல விதமான, தரமான,*

- ★ நவீன ஆடைகளும்,
- ★ உதைப் பந்தாட்ட உடைகளும்,
- ★ தொப்பிகளும்(எல்லா அளவிலும்)

விற்பனைக்கு உண்டு.

மொத்த வியாப்பாரிகளுக்கு விசேட கழிவு கொடுக்கப்படும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி
**MC TEX**
Millenium Super Market
61/10, Keyzer Street, Colombo -11
T.P.: 2335689, 2423985, 4736003

# Foundation Degree Programme for Higher Education / Career

உடனடித் தொழில் வாய்ப்பொன்றை பெற வேண்டும் ஆனால் போதிய தகைமையில்லை.

பல்கலைக்கழக வாய்ப்பினை இழந்த நீங்கள் கணனி, வணிகம் போன்ற துறைகளில் உள்நாட்டில் பட்டப்படிப்பினை தொடர வேண்டும். ஆனால் அடிப்படை ஆங்கில, கணனி பற்றிய அறிவு போதுமானதாக இல்லை.

UK, Canada, Australia, Newzealand போன்றநாடுகளில் உயர் கல்வியை தொடர வேண்டும். ஆனால் இந்நாடுகளுக்கான Student Visa க்களை பெற்றுக்கொள்ள போதிய தகுதியில்லை.

நிச்சயமாக நீங்கள் இவற்றுள் ஏதாவது ஒரு பிரச்சினைக்கு முகம் கொடுப்பீர்கள். கவலை வேண்டாம். Foundation Degree Programme for Higher Education / Career எனும் 3 மாத கால பாட நெறியை பயில்வதன் மூலம் உங்களை ஒரு தகைமை வாய்ந்தவராக மாற்றிக்கொள்ள முடியும்.

கற்கை நெறிக்கான அடிப்படை தகைமை: G.C.E. O/L

பாடப்பரப்பு: ஆங்கிலம், ஆளுமை விருத்தி, கணனி ஆகிய துறைகளில் அடிப்படை முதல் மிக விரிவான கற்கை நெறி முறை.

பாட நெறி காலம்: 3 மாதங்களைக்கொண்ட முழு நேர பாட நெறி.



**Diploma in Business Management**
(Duration 4 Months)
*Course Structure*
*Corporate Strategy, Managing Human Resources, Management Accounting, Marketing.*

**Certificate in Business Management**
(Duration 2 Months)
*Course Structure*
*Understanding- General Management, Strategy and Organizations, Planning and Control, Managing People.*

**Advanced Certificate in Website Development**
(Duration 3 Months)
*Course Structure*
*HTML, DHTML, Ms Frontpage, Macromedia Dream Viewer (MX), Macromedia Flash (MX), Adobe Photoshop CS.*

**International Computer Driving License (ICDL)**
(Duration 2 Months)
*Course Structure*
*Introduction of IT, Computer Management and Files, MS Office XP, Internet Email Application.*

**Diploma in English**
(Duration 3 Months)
Specially designed for beginners from the basic level

LIFE
LONDON INSTITUTE OF FURTHER EDUCATION
27, Hospital Road, Dehiwela. Tel: 011 5518666, 0777 715788
Fax: 011 5515387 E-mail: edulife@sltnet.lk

# சத்தமும் — சந்தடியும்

# வீரப்பனும் றொபின் ஹூட் போன்று ஒருகாலத்தில் காவியப் புருஷனாகலாம்

உயிருடன் இருக்கும்போது ஆட்சியில் இருப்பவர்களால் வெறுத்து ஒதுக்கப்படுப



வர்கள் பிற்காலத்தில் வீரர்தீரர்களாகப் பொதுமக்களால் போற்றப்படுவது ஒரு பாரம் பரியம் போல் இருந்து வந்துள்ளது.

20 வருடங்களுக்கும் மேலாக இந்திய ஆட்சியாளர்களுக்குக் குறிப்பாக தென்னிந்திய மாநில அரசுகளுக்கு பெரும் தலையிடியாக இருந்து வந்த சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனும்கூட பின்னொரு காலத்தில் ஒரு வீரனாகப் போற்றப்படக்கூடும்.

அவரைப் பற்றிய கவிதைகள், காவியங்களும் தோன்றலாம். காரணம் என்னவென்றால் வீரப்பன் அரச சட்டதிட்டங்களுக்கு எதிராக செயற்பட்டாரே தவிர, தன்னைச் சார்ந்தவர்களுக்கும் காட்டுப்புறத்து ஏழை மக்களுக்கும் மிகத் தாராளமாக உதவி வந்துள்ளார். அதனால், அவர் மரணமான போது அந்த மக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு அஞ்சலி செலுத்தியிருக்கிறார்கள். அவரது சடலம் புதைக்கப்பட்ட இடத்திற்கும் கூட வெளியூர்களிலிருந்து மக்கள் யாத்திரை தலத்துக்கு வருவதுபோல் வந்துபோகிறார்களாம்.

### வால்மீகி முனிவர்

இராமாயணத்தை முதன்முதலில் சமஸ்கிருத மொழியில் எழுதியவரான வால்மீகி முனிவரும்கூட பூர்வாச்சிரமத்தில் வனத் திருடனாகவே வாழ்ந்தவர் என்பது பாரம்பரியமான கதையாகும். செல்வந்தர்களிடம் கொள்ளையடித்து, ஏழை, எளியவர்களுக்கு உதவியவர் என்று கூறப்படுகின்றது. பூர்வ ஜன்மப் பலனாகப் பிற்காலத்தில் முனிவராக மாறினார் என்றும் இராமாயணத்தைப் பாடினார் என்றும் கூறப்படுகின்றது.

கொள்ளைக்காரனாக இருந்த காலத்தில் வால்மீகியை உலகம் வெறுத்து ஒதுக்கியிருக்கும், அவரால் பயனடைந்தவர்களைத் தவிர.

சில காலத்துக்கு முன்னர் 'மலைக் கள்ளன்' என்றொரு படம் வெளிவந்திருந்தது. தமிழ்நாட்டின் பிரபலக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையாரால் எழுதப்பட்டிருந்த நாவல் ஒன்றைத் தழுவி இக்கதை படமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. கதை வசனத்தை கலைஞர் கருணாநிதி எழுதியிருந்தார். மக்கள் திலகம் எம்.ஜி.ஆரும் பிரபல நடிகை பானுமதியும் பிரதான பாத்திரங்களில் நடித்திருந்தார்கள்.

மலைக்கள்ளனும் இவ்வாறுதான் பணக்காரர்களிடம் கொள்ளையடித்து ஏழைகளுக்கு வழங்குவார்.

தி.மு.க. பாணியில் அடுக்குத் தொடர்களுடன் பேசுவதும் எழுதுவதும் அந்தகாலத்தில் பிரபல்யமாகவிருந்ததால், கலைஞரின் வசனங்களை எம்.ஜி.ஆர். கணீரெனப் பேசி வெளுத்து வாங்கியிருந்தார். படம் சக்கைபோடு போட்டது.

## வால்மீகி முனிவரும் கொள்ளையடித்தவரே

ஒரு காதல்காட்சியில் தலைவனும் தலைவியும் மறைவாகச் சந்தித்து உரையாடிக் கொண்டிருப்பார்கள், தலைவி தன்னை மறந்து தலைவனின் இனிமையான வார்த்தைகளில் மயங்கி, 'நீங்கள் என்ன பேசுகிறீர்கள்' என்று கேட்கும் ஒரு கட்டம்.

'தலைவன் நான் தமிழ் பேசுகிறேன்' என்பார்.

இந்த உரையாடல் நடக்கும் சூழலும் சந்தர்ப்பமும் பேசுகிறவர்களின் பாவங்களும் இரசிகர்களைப் பெரிதும் கவர்வதாகவிருந்தன.

அந்த மாதிரியான காட்சிகள் இன்றைய படங்களில் இடம்பெறுவதில்லை.

காதல் காட்சிகளை எவ்வளவு நாகரிகமாக அந்தக் காலத்தில் படங்களில் கையாண்டிருந்தார்கள். இக்காலப் படங்களில் - ஆம், தமிழ்ப் படங்களில்தான் இப்படி அமைக்கிறார்கள்.

காதலன் ஒரு பத்து பதினைந்து பேரைத தன்னுடன் வைத்துக்கொண்டு துள்ளுவார், குதிப்பார் - வேகமாக கைகால்களை அசைப்பார் -அதேவிதமாக காதலியும் தன் தோழிகளை வைத்துக்கொண்டு ஆடுவார், பாடுவார், சகிக்கமுடியாத விதத்தில் முகத்தை, இடுப்பையெல்லாம் வெட்டிக் காட்டுவர். இதில இன்னொரு விடயம் என்னவென்றால் காதலனும் நண்பர்களும் பெரும்பாலும் நீட்டாக உடை உடுத்தியிருப்பார்கள். பெண்கள் அரையும் குறையுமான ஆடைகளில் ஆடுவார்கள். பெண்கள் பெரும்பாலும் மறைத்துக் கொள்ள விரும்பும் பகுதிகளை கமராவின் அருகில் வைத்துக் காட்டுவார்கள்.

ஆங்கிலப் படங்களில் அருவருப்பாக அக்காலத்தில் நம்மவர்கள் பார்க்க விரும்பாத முத்தக்காட்சிகளும்கூட இன்று தமிழ்ப் படங்களில் வந்துவிட்டன. தங்களைப் பெரிய நடிகர்கள் என்றும் தமிழ்ப் பண்பாட்டில் அக்கறையுள்ளவர்கள் போலும் காட்டிக் கொள்ளும் நடிகர்களே, இவ்வாறான காட்சிகளில் நடிக்கிறார்கள் என்றால் கேட்பானேன்.

அதற்கேற்றாற்போல் பாட்டுகள் அவை இருக்கட்டும்.

மேல்தட்டுச் சமூகங்களை எதிர்த்துக் கொண்டு பணக்காரர்களைக் கொள்ளையடித்து ஏழை எளியமக்களுக்கு நன்மைகள் செய்யும் புகழ்பெற்ற திருடர்கள் இலங்கையிலும் இருந்திருக்கிறார்கள். அந்த வகையில் சிங்களவர்கள் மத்தியிலும் காதல் காட்சிகள் இன்றைய படங்களில் இடம்பெறுவதில்லை. 'சரதியல' என்றொரு வீரன் இருந்துள்ளான். இவனைப் பற்றி இன்றும்கூட சிங்களக் கிராமங்களில் கதை கதையாகக் கூறுவார்கள்.

றொபின் ஹூட் (Robinhood) என்பவர் இங்கிலாந்தில் வாழ்ந்த ஒரு கள்வர் தலைவன். இவரைப் பற்றிய பல்வேறு புராதனக் கதைகள் உண்டு. அவைகளில் பல நீண்டகதைப் பாடல்களாகவும் உள்ளன.

பாரம்பரியமாக வழக்கிலிருக்கும் இக் கவிதைகள் பெரும்பாலும் ஆதிகால ஆங்கில வழக்கு மொழியில் எழுதப்பட்டு உள்ளது. அதில் ஒரு பாடலில் பின்வரும் கதையுள்ளது.

றொபின் ஹூட் மலையிலிருந்து இறங்கி வந்தான். சாலையின் ஓரத்தில் அமர்ந்து அழுதுகொண்டிருந்த கிராமத்துக் கிழவியைக் கண்டு குசலம் விசாரித்தான். 'ஏ கிழவி ஊரில் என்ன விசேஷம் சொல்லு' சில நாள்களாகவே நான் ஊரில் இருக்கவில்லை என்று கூறினான்.

கிழவி சொன்னாள் என் இரண்டு புதல்வர்களையும் றொபின் ஹூட்டின் ஆள்கள் என்ற சந்தேகத்தில் காவலர்கள் பிடித்துக் கொண்டுபோய் ஊர் ஷெரீப்பிடம் கொடுத்து விட்டார்கள். இன்று மாலையில் அவர்கள் இருவரையும் தூக்கிலிட்டுக் கொல்லப்போகிறார்கள் - என்று கூறி கிழவி அழுதாள்.

கவலைப்படாதே உன்மக்கள் சுகமாகத் திரும்பிவருவார்கள் என்று கூறிவிட்டு றொபின் ஹூட் பயணத்தைத் தொடர்ந்தான்.

வழியில் நாடோடிக் கிழவன் ஒருவனைச் சந்தித்தான்.

'கிழவா ஊரில் என்ன விசேஷம்' என்று கேட்டான். கிழவனும் அன்று நடக்கப்போகும் தூக்குத்தண்டனையைப் பற்றி கூறிக் கவலைப்பட்டான்.

கிழவனின் உடுப்புக்களை வாங்கித்தான் உடுத்திக்கொண்டு தனது நல்ல உடுப்புக்களை அவனுக்குக் கொடுத்தான். அவன் வைத்திருந்த கைப்பையையும் ஊதுகுழலையும் வாங்கிக் கொண்டு அவற்றுக்குப் பணமும் கொடுத்தான்.

பின்னர், ஒரு நாடோடி போன்று ஆடிப் பாடிக்கொண்டு ஊரை நோக்கி புறப்பட்டான். வழியில் நகரின் ஷெரீப் (காவல் தலைவன்) மேளதாள ஆரவாரங்களோடு முன்னால் வந்து கொண்டிருந்தான். அவருக்குப் பின்னால் கிழவியின் மகன்மார் இருவரும் கைவிலங்குகளுடன் காவலர்களால் அழைத்துவரப்பட்டனர்.

அவர்கள் யார், எதற்காகக்கொண்டு போகப்படுகிறார்கள் என்று விசாரித்தான். அவர்கள் றொபின் ஹூட் என்ற கொள்ளைக்காரனின் ஆள்கள் என்றும் மரணதண்டனை விதிக்கப்படுவதற்காக கொண்டு போகப்படுகிறார்கள் என்றும் ஷெரீப் கூறினார்.

அவர்களைத் தூக்கிலிடும் வேலையைச் செய்ய ஆள் தேடிக் கொண்டிருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

அந்த வேலையைத் தான் கச்சிதமாகச் செய்துமுடிப்பதாக நாடோடியாகவிருந்த றொபின் கூறினான்.

ஷெரீப் ஒப்புக்கொண்டதையடுத்து தன் குழலையெடுத்து ஒரு தரம் ஊதினான் நாடோடி. தூரத்திலிருந்த மலைகளின் பின்னால் 40 தலைகள் தெரிந்தன.

நாடோடியாகவிருந்தாலும் குழலை மிக நன்றாகவே ஊதுகிறாய் என்று ஷெரீப் பாராட்டினார். நாடோடி மீண்டும் ஒரு தரம் ஊதினான். மலைகளின் சரிவுகளில் 40 வீரர்கள் குதிரைகள் மீது ஏறி புறப்பட்டு

**நந்தன் எழுதுவது**

வந்தனர். வருபவர்கள் யார் என்று ஷெரீப் வினவினான்.

'யாருமில்லை நமக்கு வேண்டியவர்கள் தான் என்று நாடோடி கூறினான். பிறகு மூன்றாவது தடவையும் குழலை ஊதி கவலைப்படாதீர்கள், 'அவர்கள் தூக்கிலிடும் காரியத்தை மிகக் கச்சிதமாக முடிப்பார்கள் என்றான்.

குதிரைகளில் வந்தவர்கள் கைதாகியிருந்தவர்களை மீட்டெடுத்து, ஷெரீப்பையும் அவரது ஆள்களையும் தூக்கில் இட்டார்கள். பின்னர், வெற்றிக்களிப்புடன் புறப்பட்டுச் சென்றார்கள். இம்மாதிரி றொபின் ஹூட் பற்றிய பல கதைகள் ஆங்கில நாட்டில் உண்டு. அவன் புகழ்பாடும் பாரம்பரியக் கதைகளும் கவிதைகளும்கூட உண்டு. ★

**சூரியகாந்தி இன்று இல்லை**

தவிர்க்கமுடியாத காரணத்தால் உதயனின் 'சூரியகாந்தி' ஞாயிறு இணைப்பு இன்று வெளிவரவில்லை என்றாலும் வழக்கமாக சூரியகாந்தியில் இடம்பெறும் சில விடயதானங்கள் இன்றைய உதயனில் வெளியிடப்பட்டுள்ளன. (ஆ)

# யாரொடு நோவோம்...?

ஓட்டோக்கள் எனப்படும் முச்சக்கர வண்டிகள் இலங்கையில் தவிர்க்க முடியாத போக்குவரத்துச் சாதனமாகிவிட்டன. ஒப்பீட்டுரீதியில் மலிவாக சிறிய குடும்பங்களை, சிறுவீதிகளுக்கு ஊடாகக் கூட ஏற்றிச்செல்லும் வசதிக்கொண்ட எளிமையான போக்குவரத்துச் சாதனமாக அது விளங்குவதால் அநேகமானவரின் தெரிவாக ஓட்டோக்கள் விளங்குகின்றன.

பலரது குடும்ப வருமானத்தை உறுதிப்படுத்தும் தொழிலாகவும் ஓட்டோச் சேவை விளங்குகின்றது. பல்வேறு தேவைகளுக்கும அது பயன்படுவதால் அதற்கு அதிக சவாரி வாய்ப்புகள் உள்ளதுடன், தரிப்பிடத்திற்குப்பால் வீதிக்குவீதி, சில வீடுகளுக்கு ஒன்றாகக்கூட அதன் பெருக்கம் உள்ளது.

இந்த ஓட்டோக்கள் நன்மை பலவறைச் செய்தபோதிலும், அது சென்று சேருபவர்களின் கைகளைப் பொறுத்து பல்வேறு பிரச்சினைகளும் நேருகின்றது. கொழும்பிலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் அதிகம் ஓட்டோக்களே விபத்துக்களில் சிக்குகின்றன. அதிக சவாரிகளைப் பிடிக்கும் நோக்குடன் மிக வேகமாகச் செல்வதோடு, போக்குவரத்து விதிகளையும் மீறிச்சென்று விபத்துக்களை ஏற்படுத்துகின்றனறர் சில ஓட்டோச் சாரதிகள்.

அதுமட்டுமன்றி, கொழும்பில் நடைபெறும் பல குற்றச்செயல்களுடன் ஓட்டோக்களே அதிகம் ஈடுபடுகின்றன. போதைவஸ்து கடத்தல், ஆள்கடத்தல், கொலைகள் போன்ற பாரிய குற்றச்செயல்களுடன் இவை தொடர்புபடுவதுடன், குழுச்சண்டைகள் பலவற்றில் ஈடுபடுவதிலும் ஓட்டோச் சாரதிகளும் அவர்களது சகபாடிகளும் பங்கெடுத்தமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. பாதாள உலகத்தவர்களிலும் இவர்கள் உள்ளடங்கியுள்ளனர். நமது பிரதேசத்தில் அண்மைக் காலத்தில் ஓட்டோக்கள் அதிகம் பெருகியுள்ளன. தமது வாழ்வாதாரத் தொழிலாக பலர் இதனை மேற்கொள்கின்றனர். மிகக்கண்ணியமான முறையில் மக்களோடு பழகி தமது சேவையினை வழங்கிவரும் ஓட்டோச்சாரதிகள் பலர் உள்ளனர்.

ஆனால், இளைஞர்கள் 'குழு'க்களின் கவர்ச்சிகரமான தொழிலாகவும் இத்தொழில் மாறிவிட்டது. தமது படிப்பை இடைநடுவில் கைவிட்டு தொழில் தேடமுனையும் இளைஞர்கள் பலர், ஓட்டோச் சாரதிகளாக மாறிவிட்டனர். வெளிநாட்டு உதவிகளுள்ள குடும்ப இளைஞர்கள் பலரும் ஓட்டோக்களை வைத்துள்ளனர். எனவே, இளைஞர்கள் பலரும் குழுச் சேர்ந்து மகிழ்வதும் குழுச்சண்டைகளில் ஈடுபடுவதும் என நடைபெறும் நிகழ்ச்சிகளில் ஓட்டோக்களும் பங்கெடுப்பதாகச் சொல்லப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் ஆள்கடத்தல், குழுச் சண்டைகளில் ஓட்டோக்கள் ஈடுபட்டமை வெளிப்படையானதே. எனினும், புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து கலாசாரத்தைப் பேணுபவர்களினதும், எல்லாளன் - சங்கிலியன் படைகளதும் 'கடைக்கண்' பார்வையைத் தொடர்ந்து, இவை இல்லாமலோ குறைந்தோ போயின.

கொழும்பில் ஓட்டோத் தொழில் செய்த சிலரும் இங்கு வந்து தொழில் செய்வதும் கூட இவ்வாறான பிரச்சினைகளுக்குக் காரணமாயிருக்கலாம்.

'இளம்' ஓட்டோச் சாரதிகள் பலரும் ஒன்று சேர்ந்து, இளம் பெண்களுடன் 'பகிடி' களில் ஈடுபட்டு எச்சரிக்கப்பட்ட சம்பவங்களும் அண்மைக்காலத்தில்கூட இங்கு நடந்துள்ளன.

அதைவிட வீதிகளில் அசுர வேகத்தில் பயணித்து விபத்துக்கள் ஏற்படுவதற்குக் காரணமாகவும் இவை இருந்துள்ளன. விபத்துக்கள் நேரும் சந்தர்ப்பங்களில் தமது பிழைகளை மறைத்து வன்மமான அடாவடித்தனங்களில் ஒருசில ஓட்டோச் சாரதிகள் ஈடுபட்டமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஒரு விபத்து: வீதியில் சடுதியாகத் திரும்பிய ஓட்டோ ஒன்றுடன் மோதாமலிருப்பதற்காக பின்னால் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞன் மோட்டார் சைக்கிளைச் சரித்து வீழ்ந்து விபத்துக்குள்ளானான். வீழ்ந்த இளைஞன் எழுந்து 'நீதி' கேட்டபோது ஓட்டோ சாரதி சண்டித்தனத்தில் ஈடுபட்டதுடன் குழுவாக அடிதடியில் இறங்கவும் முற்பட்டனர். இளைஞன் தலைதப்பியது என்று புறப்பட வேண்டியதாயிற்று. அத்துடன், இளைஞன் சார்பாகக் கதைத்தவர்களும் மிரட்டும்பாணியில் கடின வார்த்தைகளால் திட்டித் தீர்க்கப்பட்டனர்.

இவ்வாறு ஆங்காங்கு நடந்து கொண்டுதானுள்ளன. ஆனால், இவற்றில் ஈடுபடுபவர்கள் மிகவும் சொற்ப அளவினர்தான். சரி - பிழைகளுக்கு அப்பால் மனிதர்களுக்கு உதவும் சேவையைச் செய்கின்றோம் என்ற உணர்வுடன் நடந்து கொண்டால் இவ்வாறான கண்டனங்கள் ஓட்டோச் சாரதிகளுக்கு வராதது. அன்றியும் நல்ல பணி புரியும் ஏனையவர்களையும் இவ்வாறான ஒரு சிலருக்குள் பொதுமைப்படுத்திக்காட்ட வேண்டியும் தேவைவராது.

நல்ல பணியில் இடையிடையேயுள்ள சில 'பதர்'களைக் களைவது - ஒழுங்கு நடவடிக்கைக்கு உட்படுத்துவது - முச்சக்கர வண்டி ஓட்டுநர் சங்கத்துக்கே உரியது.

- ஏகலைவன் ★

# கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் வர்த்தக ஆசிரியர்
திரு.மா.பிரபாகரன் அவர்களின் அன்புத் தந்தை
**அமரர் செல்லையா மார்க்கண்டன்** (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்)
அவர்கள் 25.11.2004 இல் இயற்கையெய்தியமையை இட்டுத் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*உடுப்பிட்டி,* (39042) (24-13-14) ஆசிரியர் நலன்புரிச் சங்கம்.
*வல்வெட்டித்துறை.* யா/இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம்.

**சைவவித்தியா விருத்திச் சங்கம்**

# கேள்வி கோரல்

சைவவித்தியா விருத்திச் சங்க சிறுவர் இல்லத்தில் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ள கீழ்மாடிக் கட்டடத்துக்கு மேல் மாடி கட்டுவதற்கான கேள்வி கோரல் பதியப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கோரப்படுகின்றது.

ஒப்பந்தகாரர்கள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

01. தேசிய நிருமாண பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின்கீழ் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
02. கடந்த ஐந்து வருடங்களுள் குறைந்தது இரு ஒப்பந்தங்களை யாவது திருப்திகரமாக முடித்திருத்தல் வேண்டும்.
03. ஒப்பந்தத்தின் பிரகாரம் குறித்த வேலையை நியமிக்கப்பட்ட திகதிக்குள் முடிக்கக்கூடிய தகுதி உடையவராக இருத்தல் வேண்டும்.

மேல்மாடி சம்பந்தமான ஆவணங்கள் காரியாலயத்தில் ரூபா 100/ செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் சங்கத் தலைவருக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமோ 15.12.2004 பி.ப.3.00 மணிக்கு முன் கிடைக்கச் செய்தல் வேண்டும்.

இவ்விடயம் சம்பந்தமாக மேலும் தகவல்கள் தேவைப்படின் காரியாலயத்தில் தொடர்புகொள்ளவும்.

சைவவித்தியா விருத்திச் சங்கம்,
கலாசாலை வீதி, திருநெல்வேலி,
யாழ்ப்பாணம். (சி-39356)(39-13-14-24) **சு.பசுபதி, செயலாளர்.**

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 27 - 01 - 1943



உதிர்வு 02 - 12 - 2001

# துரையப்பா நவரத்தினம்

*(முன்னாள் உரிமையாளர், முனீஸ்வரன் கராஜ்)*
திதி: 28.11.2004

**தோற்றம் மறைந்தாலும் துயரமோ மறையவில்லை
காலங்கள் கரைந்தாலும் கவலைகள் ஆறவில்லை
ஆயிரம் உறவு உண்டு - ஆனால்
'அப்பா' என்ற சொல்லுக்கு யாருமில்லை.
உங்கள் ஆத்மசாந்திக்காக வேண்டுகின்றோம்.**

*இல.11, 2ஆம் குறுக்குத் தெரு,
கொழும்புத்துறை.* (39037)(39-13-14-24) தகவல்: **குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்

## குமாரசாமி கனகசிங்கம்

(முன்னாள் அலுவலர், Hongkong Bank, Colombo)



யாழ்நகரைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தை புகையிரத நிலைய வீதியை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி கனகசிங்கம் அவர்கள் கடந்த 25.11.2004 வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா குமாரசாமி - பூரணம் குமாரசாமி தம்பதிகளின் அன்பு மகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் அரவிந்தன் (கனடா), சுகந்தி (லண்டன்), துஷ்யந்தன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் புஷ்பராணி, மகேந்திரராஜா ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் மற்றும் சரவணமுத்து (கனடா), தையல்நாயகி (கனடா), பொன்னம்பலம் (**Lourds Medical Centre, Jaffna**), சரஸ்வதிதேவி, பத்மாதேவி, விஸ்வநாதன் (**Manipay Medi clinic**), சுசீலாதேவி (**Sub Post Mistress, Eachchamoddai**), புஷ்பாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2004) ஞாயிற்றுக் கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 5 மணியளவில் கனத்தை இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*15, யாழ். வீதி,
யாழ்ப்பாணம்.* (39048) (24-14-13) தகவல்: சகோதரர்கள்.

# கட்டுரைப் போட்டியில் பதக்கம் பெறுவோர்

யாழ்ப்பாணம்,நவ.28

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 125ஆவது குருபூசை தொடர்பில் கடந்த 21ஆம் திகதி யாழ். சைவபரிபாலன சபையினரால் நடத்தப்பட்ட கட்டுரைப் போட்டியில் பரிசில் பெறுவோர் விவரம் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் விவரம் முறையே வருமாறு:-

துவாரகா சிவலிங்கம் (கிளிநொச்சி இராமநாதபுரம் மகா வித்தியாலயம்), யமுனா நாகராஜா (கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), ரிஷிகா யோகநாதன் (மானிப்பாய் மகளிர் கல்லூரி).

போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுக்கொள்வர்.

இவர்களுக்கான பதக்கம் சூட்டும் நிகழ்வு எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும் ஆறுமுகநாவலர் குருபூசை தினத்தன்று நிகழும் எனச் சைவபரிபாலன சபையின் தலைவரும் பரீட்சைச் செயலாளருமான சைவப்புலவர் வ.கந்தசாமி அறிவித்துள்ளார். (எ)

## மாரீசன்கூடலில் மிதிவெடி அகற்றும் பணிகள்

வலி.தென்மேற்கு,நவ.28

மாரீசன்கூடல் கிராம அலுவலர் பிரிவிலுள்ள உயரப்புலம் கிராமத்தில் "ஹலோ ட்ரஸ்ட்" நிறுவனத்தினால் மிதிவெடி அகற்றும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மிதிவெடிகள் இருப்பதாக இனங்காணப்பட்ட இடங்களில் இந்த நிறுவனத்தினால் நடுகை செய்யப்பட்ட அடையாளக் கம்பங்களை சில விஷமிகள் அகற்றிவருவதாகவும் -

அப்பகுதியிலுள்ள கிணறு ஒன்றில் இந்த அடையாளக் கம்பங்கள் வீசப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டதாகவும் - மாரீசன்கூடல் கிராம அலுவலர் பே.இராசரத்தினம் தெரிவித்தார்.

இதேவேளை - மிதிவெடிகள் இருப்பதாகப் பரிசோதிக்கப்பட்டுக் கண்டறியப்பட்ட சில காணிகளில் அத்துமீறிச் சிலர் குடிசை வீடுகளை அமைத்து வருவதாகவும் - அவர் மேலும் தெரிவித்தார். மிதிவெடி அகற்றும் திட்டத்திற்கு இப்பகுதி மக்கள் தங்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கவேண்டும் என்றும் - அவர் கேட்டுள்ளார். (எ-135)

## மட்டுவில் மழுவன்கேணி மதகு இளைஞர்களால் துப்புரவு

சாவகச்சேரி, நவ.28

மட்டுவில் வடக்கில் வண்ணாத்திப் பாலத்திற்கு அருகில் மழை வெள்ளம் பாய்ந்து ஓடுவதற்குத் தடையாக அடைபட்டிருந்த மழுவன்கேணி மதகு இளைஞர்களின் முயற்சியால் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

மட்டுவில் வடக்குக் கிராம சேவையாளர் சி.கனகரத்தினத்தின் வேண்டுகோளின் பேரில் மட்டுவில் வடக்கு இளைஞர்கள் இந்தப் பணியினை பல்வேறு சிரமங்களின் மத்தியில் மேற்கொண்டிருந்தனர்.

2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் இங்கு காவலரண் அமைத்திருந்த படையினர், மேற்படி மதகுக் கண்களைப் பரல்களின் உதவியுடன் அவற்றினுள் கற்கள் இட்டு அடைத்திருந்தனர்.

மதகு துப்புரவு செய்யப்பட்டதை யடுத்து மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோயிலடி, முடிசுறி மட்டுவில் வடக்கு ஆகிய பகுதிகளில் தேங்கி நின்ற மழை வெள்ளம் வழிந்தோடத் தொடங்கியுள்ளது. (எ-31)

## இலவச சீருடை விநியோகம்

பண்டத்தரிப்பு பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் நடத்தி வரும் ஏழு முன்பள்ளிகளின் மாணவர்களுக்கும், அங்கு பணிபுரிந்துவரும் ஆசிரியர்களுக்கும் இவ்வாண்டுக்கான இலவச சீருடைகள் கடந்த வாரம் வழங்கப்பட்டன. வலிகாமம் பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் இந்த இலவச சீருடைகளை மேற்படி சங்க அலுவலகத்தில் வைத்து வழங்கியது. (8-125)


# உடனடி தொழில் வாய்ப்பு

*பின்வரும் தொழில்களில் தேர்ச்சியும் அனுபவமும் உள்ளவர்களுக்குத் தகுதிக்கேற்ற சம்பளத்துடன் தொழில் வழங்கப்படும்.*

1. உருக்கிணைப்பாளர்கள் (Welders)
2. தகட்டு வேலையாள்கள் (Sheet Metal Workers / Fabricators)
3. தச்சுவேலையாள்கள்
4. உதவியாளர்கள்
5. தொழில் பயிலுநர்

தொடர்பு: **புறோமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிடெட்,**
844, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
021 2225780, 07773225545
(சி-39350)(39-13-14-24)


# இரண்டாவது பிறந்ததின வாழ்த்து

28.11.2004



## மரியதாஸ் மரியறெஜினா

வளன்புரம், துண்டியைச் சேர்ந்த
**மரியதாஸ் - ரதி**
தம்பதிகளின் செல்வப் புதல்வி
**மரியறெஜினா**
தனது இரண்டாவது பிறந்தநாளை
இன்று (28.11.2004)
ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில்
வெகு குதூகலத்துடன்
கொண்டாடுகின்றார்.
இவரை அப்பா, அம்மா,
அண்ணன்மார், அக்காமார்,
சித்தப்பாமார், சித்தி, மாமாமார்,
அத்தைமார், மச்சிமார், மச்சினன்மார்,
அப்பப்பா, அப்பம்மா அனைவரும்
அன்னை மரியாவின் அருள் பெற்று
வாழ்க பல்லாண்டு என்று
வாழ்த்துகின்றனர்.

தகவல்:
அப்பப்பா - க.மரியநாயகம்,
அப்பம்மா - ம.செல்வமணி.

*262/6, துண்டி,
கொழும்புத்துறை.* (38888) (24-14-13)

# 10ஆவது பிறந்த தின வாழ்த்தும் பாராட்டும்



வலவன் தோட்டம், கரணவாய் தெற்கு,கரவெட்டி,
தொ.பே.: 077 6081666
(39035)

வலவன் தோட்டம், கரணவாய் தெற்கு,
கரவெட்டியைச் சேர்ந்த
**திரு-திருமதி ச.ஞானசம்பந்தன்-நகுலகுமாரி**
(நகுலா) தம்பதிகளின் செல்வப் புதல்வி

## பிரவீனா

(வீனு)

தனது பத்தாவது பிறந்த தினத்தை இன்று (2004.11.28) ஞாயிற்றுக்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். யா/நெல்லியடி மெ.மி.த.க.பாடசாலையில் தரம் 5இல் கல்வி பயிலும் இவர் 2004 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் உயர் புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ளார். இவரை அன்பு பப்பா, அம்மா, தங்கைகளான பிரதீபா, பிரனீத்தா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, சுவிஸில் வசிக்கும் பெரியமாமா குடும்பம், சுவிஸில் வசிக்கும் பஞ்சு சித்தப்பா குடும்பம், லண்டனில் வசிக்கும் குட்டிமாமா குடும்பம், லண்டனில் வசிக்கும் சோதி அத்தை குடும்பம், அல்வாயில் வசிக்கும் பவானி அத்தை குடும்பம், பிரான்சில் வசிக்கும் பாசு சித்தப்பா குடும்பம், வவுனியாவில் ஆசிரியையாக இருக்கும் கௌரி அத்தை மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்றுப் பல்லாண்டு காலம் சீரும் சிறப்புமாக வாழ்கவென எல்லாம்வல்ல இறைவனை வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றனர்.

தகவல்: **பப்பா, அம்மா, சகோதரர்கள்.**


# ஆங்கிலம் கற்க வேண்டுமா?

**இலகுவாக ஆங்கிலம் கற்க சிறந்த வழி
E.L.I. யின் இலவச தபால் மூலம் பாடநெறிகள்**

சரளமாக ஆங்கிலம் எழுத, பேச, வாசிக்க 90 நாட்களில் பயிற்சி

தமிழ் விளக்கத்தில் கூடிய பாடத் தொகுதிகள்

**இலவச Dialog G.S.M. தொடர்பை வெல்லுங்கள்.**

* 2005ம் ஆண்டுக்கான இலவச தினக்குறிப்பேடு (Diary)
* தொலைபேசி பதிவை உள்ளடக்கிய கீடெக்

இலவச 30 day's Easy Way English புத்தகம்
என்பன அனைத்து மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படும்




மேலதிக விபரங்களுக்கு 5.00 பெறுமதியான 3 முத்திரைகள் அனுப்பி பெறலாம்.

**THE ENGLISH LANGUAGE INSTITUTE** P.O. BOX 83, KANDY.
Tel: 0777-220002, 802849

# விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடை செய்த நாடுகள் பேச்சுக்களுக்கு ஆலோசனை வழங்குவது பொருந்துமா?

## கேள்வியெழுப்புகிறார் கடற்புலிகளின் தளபதி சூசை



முல்லைத்தீவு,நவ.28

சில நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்துவிட்டு இப்போது அரசுக்கும் - புலிகளுக்கும் இடையே நடைபெறவுள்ள பேச்சுகளுக்கு ஆலோசகர்களாகச் செயற்பட முற்படுகின்றன. இது எப்படிப்பொருத்தமாகும்? சாத்தியமாகக் கூடிய விடயமா?

- இவ்வாறு கேள்வியெழுப்புகின்றார் கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை.

தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் இரவு 7 மணிக்கு முல்லைத்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற தேசியத் தலைவரின் பிறந்த நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

கடற்புலிகளின் மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளர் அறிவழகியின் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கேணல் சூசை மேலும் தெரிவித்ததாவது:-

முதல் மாவீரன் சங்கரைச் சிகிச்சைக்காகத் தமிழ்நாடு கொண்டுசென்றோம். சிகிச்சை பயனளிக்காமல் அங்கேயே அவர் வீரச்சாவைத தழுவிக்கொண்டார். உண்மையில் அவரோடு ஆரம்பிக்கப்பட்ட எமது விடுதலைப் போராட்டத்திற்கான தியாகம் - இன்று வரை 17 ஆயிரத்து 800 மாவீரர்களை விடுதலைக்காக அர்ப்பணித்துத் தொடர்கின்றது.

இரண்டரை ஆண்டுகளாக யுத்தம் நிறுத்தப்பட்டு, சமாதானம் நிலவிக் கொண்டிருக்கிறது. ஆனால், யுத்தநிறுத்தம் நிலவுகின்ற இந்தக் கால கட்டத்திலும் மாவீரர்களின் பட்டியல் தொடர்ந்து கொண்டே செல்கிறது. இது ஏன்? சமாதான ஒப்பந்தந்திற்கு ஊடாக அவர்கள் எம்மீது தாக்குதல்களைத் தொடரலாம். எமது வணிகக் கப்பல்களை அழிக்கலாம். ஆனால், நாங்கள் திருப்பித்தாக்க முடியாது அதுதான் இந்த ஒப்பந்தம்.

யுத்தநிறுத்த காலப்பகுதியில் இராணுவ சமனிலை பேணப்படும் என சமாதானத்தை ஏற்படுத்த வந்தவர்கள், ஒப்பந்தம் கைச்சாத்திடும் போது தெரிவித்தார்கள். ஆனால், அண்மைக் காலமாகத் தற்பொழுதும் கூட சீனாவில் இருந்து 2 ஆயிரம் கோடி பெறுமதியான யுத்தத தளபாடங்களை அரசு கொள்வனவு செய்துள்ளது. இது இராணுவ சமநிலையைப் பேணும் நோக்கமா?

வடக்கு - கிழக்கு மட்டுமல்ல, இலங்கையின் சகல பகுதிகளிலுமே அரிசிக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய வேண்டிய அரசு, அதனை விடுத்து வெளிநாடுகளில் இருந்து யுத்த தளபாடங்களை இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது.

சந்திரிகா அம்மையாரின் இந்த முனைப்பு யுத்தத்தை மீண்டும் ஆரம்பிக்கும் உள் நோக்கத்தையே கோடிட்டுக் காட்டுகின்றது.

நேற்றும், நேற்றுமுன்தினமும் திருகோணமலை, மன்னார் மற்றும் வவுனியாவிலும் அரச படைகள் தமது காட்டு மிராண்டித் தனமான நடவடிக்கைகளை அரங்கேற்றத் தொடங்கியுள்ளன. எப்போதும் இல்லாதவாறு இந்த ஆண்டு மாவீரர்களின் நிகழ்வுகளைக் குழப்பும் வகையில் படையினர் தமது அரக்கத்தனமான நடவடிக்கைகளை அரங்கேற்றத் தொடங்கியுள்ளனர். இதற்குரியவர் யார்? இந்த நாட்டினுடைய தலைவியான சந்திரிகா, விடுதலைப் புலிகள் சமாதானமாகப் பேசவருவதாக இருந்தால் பேசவரட்டும் என்று கூறி அதற்கு ஒரு மாத கால அவகாசத்தைக் கொடுத்திருக்கின்றார். அதனையடுத்தே இந்தக் காடைத்தனமான நடவடிக்கைகள் எம்மக்கள் மீது திணிக்கப் படுகின்றன.

சமாதானப் பேச்சுகளின் அனுசரணையாளர்களாக விளங்கும் நோர்வேத் தரப்பினருக்கு அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா போன்ற நாடுகள் ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருக்கின்றன. இவர்கள் எல்லோரும் தத்தமது நாட்டில் விடுதலைப் புலிகள் அமைப்பைத் தடைசெய்துள்ளார்கள். ஏன், எம்மைத் தடை செய்தவர்கள்தான் ஆலோசனை வழங்க வேண்டுமா?

போர்நிறுத்தம் ஏற்பட்ட காலத்திலிருந்து இன்று வரை ஆட்சிசெய்த ரணில் விக்கிரம சிங்கவாக இருக்கலாம் அல்லது ஆட்சி செய்து கொண்டிருக்கும் சந்திரிகா அம்மையாராக இருக்கலாம் அரச படைகளின் இராணுவ சமநிலையை சிங்களத் தேசத்தின் நலன்கருதி உயர்த்துவதற்காகத்தான் முனைப்பாகச் செயற்பட்டார்கள்.

இன்றைக்கு நாங்கள் அனுபவிக்கும் உரிமைகள் எல்லாம் பேசிக்கிடைத்தவையல்ல, இந்த மாவீரர்களால் துப்பாக்கி முனையால் அடித்துப் பெறப்பட்டவை. அதுமட்டுமல்ல, நீண்ட காலமாக நீடித்துவந்த பயங்கரவாதத் தடைச் சட்டம்கூட எமது படைப் பலத்தைக் கண்டுதான் தற்காலிகமாக நீக்கப்பட்டிருக்கிறது. இந்தப்பலம் இல்லாவிட்டால் என்ன நடந்திருக்கும்.

1987 ஆம் ஆண்டு யுத்தம் மோசமாக இடம பெற்றுக்கொண்டிந்தவேளை எமது தலைவர் யாழ்ப்பாணத்திலிருந்து புதுடில்லிக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அங்கு ஒப்பந்தத்தின் நகலைக் கொடுத்து அதனை ஏற்றுக்கொள்ளுமாறு இந்திய அரசினால் வற்புறுத்தப்பட்டார். ஆனால், எமது தலைவர் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இருந்தாலும் அவர்கள் போட்ட நிர்ப்பந்தம் காரணமாக எமது ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டிய தேவை விடுதலைப் புலிகளுக்கு இருந்தது.

ஆனால், இன்று அந்தநிலை இல்லை. இந்த மண்ணின் விடுதலைக்காக இரத்தம் சிந்திய மாவீரர்களின் தியாகத்தால் ஒரு பலம் பொருந்திய அமைப்பாக விடுதலைப் புலிகள் வளர்ந்து நிற்பதற்கு எமது தலைவர் காட்டிய துணிச்சலான வழிநடத்தலும் பாதையுமே காரணம். அதனால்தான் நாம் மரபுவழி இயக்கமாக எம்மை வளர்த்துக்கொள்ள முடிந்தது.

சில நாள்களாக யாழ்.குடாநாட்டிலுள்ள இராணுவ முன்னரங்க நிலைகளுக்கு அமெரிக்க பசுபிக் பிராந்திய இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி ஆகியோர் வந்து செல்கின்றனர். அதனைவிட, இந்தியாவிலிருந்தும் உயர் தளபதிகள் வந்து செல்கின்றனர். சமாதானம் நிலவும் இந்தக் காலகட்டத்தில் இவர்கள் வந்து செல்வதற்கான நோக்கம் என்ன? இந்தக்கால கட்டத்தில் எமது மக்களுடைய இயல்பு வாழ்க்கைக்கும் பொருளாதார ரீதியான மேம்படுத்தலுக்குமான ஆலோசகர்களே இந்த மண்ணிற்கு வரவேண்டும். ஆனால், வருபவர்கள் எல்லாம் இராணுவத் தளபதிகளாகத்தான் இருக்கின்றார்கள். இது எதனைக் காட்டுகிறது?

பேச்சை மீளவும் ஆரம்பிப்பதற்குப் பின்னிற்பது புலிகளா அல்லது சந்திரிகாவின் அரசா?

நாங்கள் இடைக்காலத் தன்னாட்சி அதிகார வரைவின் அடிப்படையில் பேச்சைத் தொடருவோம் என்றோம். அதற்குச் சந்திரிகா அரசுடன கூட்டுச் சேர்ந்துள்ள ஜே.வி.பி. எதிர்ப்புத் தெரிவித்து வந்தது.

விடுதலைப் புலிகளால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் அடிப்படையில் பேசுவதாக இருந்தால், அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் என்று எதிர்க்கட்சி கூறுகின்றது. ஆனால், ஜனாதிபதி விரும்பினால் பேச்சுக்களைத் தொடங்கட்டும். அதற்கு நாம் தடையில்லை என்று ஜே.வி.பி. கூறுகின்றது. இப்படியான சூழலில் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்குத் தடையாக இருப்பவர்கள் யார் சந்திரிகாவா? புலிகளா?

இந்த நாட்டில் ஆட்சிக்கு வரும் அரசியல் தலைவர்கள் சமாதானத்தின் மூலம் எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதனைவிட தமது பதவிக் கதிரையை யார் வெல்வது என்ற நோக்கத்திலேயே செயற்பட்டு வருகிறார்கள். இதுதான் அவர்களின் குறிக்கோள்.

கருணாவின் விடயத்தில் சாதகமான பலனை ஆளும் கட்சியின் அரச படைகளால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. மாறாக, அது தோல்வியைத்தான் தழுவியது கிழக்கில் அரங்கேறி வரும் படுகொலைகளை, அந்தக் கோரத்தனத்தை வடக்கிலும் அரங்கேற்றத் தொடங்கியுள்ளனர். அதன் முதற்கட்டந்தான் வல்வெட்டித்துறை இளைஞர் படுகொலை.

நாங்கள் அவர்களைத் திருப்பித் தாக்க முடியாதவாறு ஒப்பந்தம் எமது கைகளைக் கட்டிப் போட்டுள்ளது.

எம்மைப் பயங்கரவாத இயக்கம் என்று கூறியவர்களும், தடை செய்தவர்களும் கைகொடுத்து வரவேற்றுத் தமது நாடுகளுக்கு அழைத்துச் சமாதானத்தை முன்னெடுப்பதற்கான கருத்துக்களையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர். இந்த நிலைமையை எமது தலைவர் சமாதான காலத்தினூடாக ஏற்படுத்தியுள்ளார். அதுதான் எமக்குக கிடைத்த ஒரேயொரு வெற்றியாகும்.

எமது மண்ணின் விடுதலையைப் பெற்றுக் கொள்வதற்கு எமது தலைவரின் கரத்தைப் பலப்படுத்த அனைவரும் முன்வரவேண்டும். அப்பொழுதுதான் எமக்குரிய நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் - என்றார்.(8-5)







தமிழ் ஊடக அறிவியல் கல்லூரிக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கிளிநொச்சி அறிவியல் நகரில் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

அறிவியல் கல்லூரிக்கான அடிக்கல்லை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், மூத்த பத்திரிகையாளர் கோபு ஆகியோர் நட்டு வைப்பதையும் தமிழீழ அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் சிறப்புரையாற்றுவதனையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம். (8-5)




## வெளிவாரிக் கற்கை மாணவன் குளத்தில் மூழ்கிப் பரிதாப மரணம்!

### ஊர்காவற்றுறையில் வெள்ளி மாலை சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.28

குளத்தில் மூழ்கி இறந்ததாகத் தெரிவித்து யாழ்.போதனா வைத்தியசாலையில் இளைஞன் ஒருவரின் சடலம் நேற்றுப் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டது.

ஊர்காவற்றுறையில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வண்ணார்பண்ணையைச் சேர்ந்தவரும், புதுக்குடியிருப்பில் வசிப்பவருமான பாலையா நிர்மலகாந்தன் (ஜுலி வயது-22) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

புதுக்குடியிருப்பில் இருந்து வந்து யாழ்ப்பாணத்தில் வெளிவாரிக் கற்கை நிலையம் ஒன்றில் கல்வி பயிலும் இவர், வழமையாக வெள்ளி பிற்பகல் வந்து ஊர்காவற்றுறையில் சகமாணவன் ஒருவரின் வீட்டில் தங்கி திங்கள் காலை புதுக்குடியிருப்புச் செல்வது வழக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறே இவ்வாரமும் வந்தவர், நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மாலை அங்கிருக்கும் 'அக்காதங்கை' குளத்தில் உடுப்புத் தோய்க்கச் சென்றதாகவும் - இருண்ட பின்பும் அவர் திரும்பாததை அடுத்து குளத்தில் தேடிப் பார்த்த போது குளத்தில் சடலமாக இருப்பது தெரியவந்ததாகவும் - உடன் பொலீஸாருக்கு முறைப்பாடு செய்து சடலம் குளத்தில் இருந்து மீட்கப்பட்டதாகவும் - சகமாணவனின் தந்தையார் தெரிவித்தார்.

விசாரணையை மேற்கொண்ட ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதியின் உத்தரவிற்கமைய, சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. (எ-15)

## வடமராட்சிப் பகுதியில் டெங்குக் காய்ச்சல் அபாயம்

யாழ்ப்பாணம்,நவ.28

வடமராட்சிப் பகுதியில் டெங்குக் காய்ச்சல் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால் மக்களை விழிப்பாக இருக்குமாறு அப்பகுதி பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கரவெட்டி இராஜகிராமம் பகுதியைச் சேர்ந்த 6 பேர் இந்நோயின் தாக்கத்துக்குள்ளாகி மந்திகை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

தற்போது பெய்து வரும் அடைமழை காரணமாக டெங்குக் காய்ச்சல் மேலும் பரவக்கூடிய அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும், இதனைக் கட்டுப் படுத்தும் வகையில் சுகாதாரப் பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்குமாறும் அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (8-5)

# இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் 2004 ஆம் ஆண்டு விருது பெறுவோர் விவரம்

கொழும்பு,நவ.27

இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வருடாந்த விருது வழங்கும் விழா இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இவ்வருடம் விருது வழங்குவதற்கென பதினொரு ஊடகவியலாளர்கள் தெரிவுசெய்யப்பட்டிருக்கின்றார்கள். அவர்களது விவரங்கள் வருமாறு:-

### எஸ்.எட்வேட்

*(வீரகேசரி, சுடர்ஒளி முன்னாள் செய்தி ஆசிரியர்)*



பத்திரிகைத் தொழிலையே தனது வாழ்வாகக் கொண்டு சுமார் 31 ஆண்டுகள் பத்திரிகையாளனாகப் பணியாற்றி ஓய்வுபெற்றிருப்பவர் இவர். 1962 ஆம் ஆண்டு நடுப் பகுதியில் பயிற்சிப் பத்திரிகையாளராக *வீரகேசரியில்* கால்பதித்தார். அப்போது இவருக்கான சம்பளம் 75 ரூபா மட்டுமே. பின்னர் *'தவச'* நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட *'தினபதி'* பத்திரிகையில் சேரும் வாய்ப்புக் கிடைத்தது. ஆனாலும் மூன்று ஆண்டுகள் மட்டும் தினபதியில் நீடித்தார். 1970 ஆம் ஆண்டு *'தவச'* நிறுவனம் கதவடைப்புச் செய்ததால் இவர் தொழில் இழந்தார்.

1971 ஆம் ஆண்டு இறுதிப்பகுதியில் இவருக்கு வீரகேசரியில் மீண்டும் இணையும் வாய்ப்புக் கிடைத்தது. அதுவரை 10 வருட தொழில் அனுபவம் பெற்றிருந்த இவர் செய்திச் சேவையின் பல பிரிவுகளிலும் கேசரியில் சிறப்பாக பணியாற்றினார். ஆங்கிலம், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளிலும் நன்கு பாண்டித்தியம் பெற்ற எட்வேட் வீரகேசரியின் வெளிநாட்டுச் செய்திச் சேவையில் மிகச்சிறப்பாகப் பணி புரிந்துள்ளார். வெளிநாட்டுச் செய்திகளைத் தொகுத்து தமிழ் வாசகர்களுக்கு வழங்கும் பாங்கு இவருக்கு பெரும் பெயரையும் மன நிறைவையும் பெற்றுக்கொடுத்திருந்தது.

இந்தியாவில் 1974 ஆம் ஆண்டில் பிரதமர் இந்திரா காந்தியினால் அவசரகால நிலை பிரகடனம் செய்யப்பட்டது முதல் அது தொடர்பான செய்திகளை சுமார் ஒரு மாதகாலம் வரை தலைப்புச் செய்தியாக எழுதி பலரதும் பாராட்டுக்களைப் பெற்றவர். நவீன வசதிகள் எதுவுமற்ற அக்காலப் பகுதியில் சிறப்பாக செய்திகளை தன்னால் எழுத முடிந்தமைக்கு காரணம தமக்கு வழங்கப்பட்ட பயிற்சியே என அடிக்கடி கூறுவார். 1996 ஆம் ஆண்டு செய்தி ஆசிரியராகப் பதவி உயர்த்தப்பட்ட இவர் அன்றிலிருந்து 2000 ஆம் ஆண்டு வரை வீரகேசரியின் செய்தி ஆசிரியராகத் திறமையாக அர்ப்பணிப்புடன் சேவையாற்றினார்.

2000 ஆம் ஆண்டு இருதய நோயினால் பாதிக்கப்பட்ட இவர் அந்த ஆண்டே சேவையிலிருந்து ஓய்வுபெற்றார். ஓய்வுபெற்றாலும் பத்திரிகைத் தொழில் அவரை விடவில்லை. மீண்டும் அழைத்தது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட *'சுடர்ஒளி'* வாரப்பத்திரிகை.

இருந்தபோதும் தனது இருதயநோய் காரணமாகத் தொடர்ந்தும் பணியாற்ற முடியாமல் 2004 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் தொழிலுக்குப் பிரியாவிடை அளித்தார்.

பத்திரிகையாளன் எப்பொழுதும் மரியாதையை வாங்குபவனாக இருக்கவேண்டும்; விற்பவனாக இருக்கக்கூடாது என்ற தனது தாரக மந்திரத்தை இவர் அடிக்கடி உச்சரிப்பார். தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியத்தின் மூத்த பத்திரிகையாளன் விருதை அவருக்கு வழங்குவதில் ஒன்றியம் கௌரவம் பெறுகிறது.

### சிவசுப்பிரமணியம் சிவபாலன்

*(செய்தி ஆசிரியர், ஈழநாதம்)*



1991 இல் *'ஈழநாதம்'* பத்திரிகை யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்துகொண்டிருந்தபோது, அதில் தகவல் சேகரிப்பாளராக இணைந்துகொண்ட இவர், போர்க் காலத்தில் பல்வேறு நெருக்கடிகள், சோதனைகளின் மத்தியிலும் ஊடகத்துறையிலேயே தொடர்ந்திருந்து, தன்னுடைய பதின் மூன்று வருடகாலச் சேவையை இப்போது பூர்த்தி செய்துள்ளார்.

1992 ஆம் ஆண்டுமுதல் ஈழநாதத்தின் செய்தி ஆசிரியராக நியமிக்கப்பட்ட இவர், 'ஈழநாதம்' நல்லூரிலிருந்து 1995 இல் சாவகச்சேரிக்கும். 1996 இல் கிளிநொச்சிக்கும் 1997 இல் புதுக்குடியிருப்புக்கும் 2001 இல் மீண்டும் கிளிநொச்சிக்கும் என இடம்பெயர்ந்த காலத்தில் அனைத்து இடங்களிலும் கடமையாற்றியவர். போர்ச்சூழலால் ஏற்பட்ட பாதிப்புகள், இடம்பெயர்வுகள் போன்றவற்றுக்கு மத்தியிலும், தன்னுடைய சிரமங்களைப் புறக்கணித்து, பத்திரிகையை வெளிக்கொணர்வதற்காகவும், செய்திகள் மக்களிடம் போய்ச் சேரவேண்டும் என்பதற்காகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர். பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் இருந்து செய்திகளைச் செவ்வனவே சேகரித்துவருவதில் மிகுந்த கவனம் கொண்டவர். 44 வயதான சிவபாலன் விஞ்ஞானம், கணனி, அரசியல் கட்டுரைகள் எனப் பல்வேறு விடயங்களையும் எழுதியுள்ளார்.

### முஹம்மத் ஆரிப் முஹம்மத் நிலாம்

*(பிரதம செய்தியாளர், தினக்குரல் ஆசிரியர் பீடம்)*



1977 இல் சுயாதீன ஊடகவியலாளராகக் குறிப்பாகத் தினகரனில் தன் பணியை ஆரம்பித்த இவர் 1983 முதல் 1992 வரை *வீரகேசரிப* பத்திரிகையில் நிருபராக இருந்து 1997 முதல் இன்று வரை தினக்குரல் பத்திரிகையில் பிரதான செய்தியாளராக இருந்து வருகிறார். இவரது அனுபவத்தினூடு இவருக்கு இருக்கும் சிங்கள மொழியாற்றலும், செய்திகளைப் பெற்றுக்கொள்ள எடுத்துக்கொள்ளும் அணுகுமுறைகளும் சிறந்த செய்திகள் பல வெளிப்பட ஏதுவாயிற்று.

பல்வேறுபட்டவர்களுடனும் தன் பத்திரிகையாளர் தொடர்பைப் பேணி செய்திக்கான மூலங்களைச் சரியாக இனம் காண வல்லவர். செய்தி சேகரிப்பதுடன் மட்டுமல்லாது அச்செய்தியைப் பத்திரிகை நோக்கிற்கமைய தெளிவாகவும், சிறப்பாகவும் எழுதுவதில் கைதேர்ந்தவர். தற்போது 58 வயதைப் பூர்த்தி செய்துள்ள இவர் செய்திகளைத் தேடிச் செல்வதில் பின்னிற்காதவர். ஆக்க இலக்கியத்துறையிலும் ஈடுபாடு கொண்ட இவர் 'ஈழத்துநூன்' என்ற புனைபெயரில் 1963 முதல் எழுதி வருகிறார்.

### இராஜேஸ்வரி சண்முகம்

*(இலங்கை வானொலி – பகுதிநேர அறிவிப்பாளர்)*



1952 இல் வானொலி நாடக நடிகையாக வானொலியுலகில் பிரவேசித்தார். பின்னர் அறிவிப்பாளராகிக் கடந்த 52 வருடங்கள் தனது வசீகரக் குரலால் ஆயிரக்கணக்கான ரசிகர்களைத் தன் வசப்படுத்தி வைத்திருப்பவர். 1964 இல் வர்த்தக சேவை பகுதிநேர அறிவிப்பாளராக நியமிக்கப்பட்ட இவர் 1971 இல் தயாரிப்பாளராகவும் 1974 இல் நிரந்தர அறிவிப்பாளராகவும் ஆனார். பின்னர் 1982 இல் முதல்தர அறிவிப்பாளராகவும், 1995 இல் பிரதம அறிவிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்றார்.

இவர் தொகுத்து வழங்கிய பூவும் பொட்டும், மங்கையர் மஞ்சரி, பொதிகைத் தென்றல், நினைவூட்டுகிறோம், விடுமுறை விருப்பம், நீங்கள் கேட்டவை, பொங்கும் பூம்புனல் போன்ற நிகழ்ச்சிகள் இவர் பெயரை அடிக்கடி பேச வைத்த நிகழ்ச்சிகளாகும். தவிரவும் நாடகங்கள், இசைச் சித்திரங்கள், சிறப்புச் சித்திரங்கள், சகலதுறை விளம்பர நிகழ்ச்சிகள், சிறுவர் நிகழ்ச்சிகள், பெண் உலகம், வனிதர் மண்டலம், இசையும் கதையும், ஒலிமஞ்சரி, கவிதைச்செண்டு, நெஞ்சிலாடும் இசைச்செண்டு போன்ற நிகழ்ச்சிகளை இவர் தயாரித்து வழங்கிப் பாராட்டுக்களைப் பெற்றவர்.

64 வயதடைந்துள்ள இராஜேஸ்வரி சண்முகம் சிறந்த குரல் வளமும், நிறைந்த ஆளுமையும் கொண்டு இன்றுவரை ஓர் ஒலிவள வசகரத்தைக் கொண்டியங்குபவர். நேயர்களை ஈர்த்து செவிகொடுக்க வைப்பதில் இவர் குரல் மட்டுமல்ல சொல்வளமும் காரணம்.

### என்.குருபரன்

*(சூரியன் எவ்.எம். செய்திப் பிரிவு பொறுப்பாளர், பிரதம செய்தி ஆசிரியர்)*



1991 ஆம் ஆண்டு *'சரிநிகர்'* பத்திரிகையினூடாக ஊடகத்துறைக்குள் பிரவேசித்தவர். 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 1996 ஆம் ஆண்டு வரை *சரிநிகா* ஆசிரியர் பீடத்தில் துணை ஆசிரியராக கடமையாற்றினார். பின்னர் 2000 ஆம் ஆண்டு முதல் ஆசிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆசிரியராக இணைந்து கொண்டார்.

செய்தி ஆசிரியராக இருந்த குருபரன் 2002 ஆம் ஆண்டு *சூரியன் எவ்.எம்.* இன் செய்திப் பிரிவின் பிரதம செய்தி ஆசிரியராகினார். உடனடிச் செய்திகளையும், வரலாற்றுப் பின்னணியுடனான தகவல்களைக்கொண்ட செய்திகளையும் வழங்குவதில் தனக்கென தனியிடத்தைப் பெற்றுக்கொண்டவர் இவர். பல செய்திகளைக் களத்திலிருந்தே நேரடி ஒலிபரப்பாக உடனுக்குடன் வழங்குவதிலும் சிறப்புப்பெற்றவர்.

யுத்தம் நிலவிய காலப்பகுதியில் நடைமுறையிலிருந்த தணிக்கைச் சட்டங்களின் இடையேயும் வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற முக்கிய சம்பவங்களை நாசூக்காக வெளிக்கொணர்ந்ததில் முக்கிய பங்குவகித்தவர். சூரியன் வானொலியில் ஒலிபரப்பாகின்ற வாராந்த செய்தித் தொகுப்பான 'சூரியப் பார்வைகள்' மற்றும் சனிக்கிழமைகளில் ஒலிபரப்பாகும் 'விழுதுகள்' என்ற அரசியல், சமூகம் சார்ந்த நிகழ்ச்சிகளை வழங்குபவர்களில் இவரும் ஒருவர். 'வானொலிச் செய்திகள் யாருக்காக? எப்படி?' என்ற நூலை வெளியிட்டுள்ள குருபரன் வானொலிச் செய்தியில் உடனுக்குடன் முக்கிய செய்திகளை மிகச்சிறந்த முறையில் வெளிக்கொணர்வதில் அவதானம் மிக்கவர். உறுதிப்படுத்தப்பட்ட செய்திகளை விரைந்து கொடுப்பதிலும் தன் கவனத்தைச் செலுத்தியுள்ளார்.

### இரவீந்திரன் கனக. ரவி

*(சுயாதீன ஊடகவியலாளர்)*



1990களில் *சரிநிகர், தினகரன்* பத்திரிகைகளில் கரவீந்திரன், கனகரவி என்ற பெயர்களிலும் வேறு புனைபெயர்களிலும், விமர்சனக்கட்டுரைகள், செய்திக் கட்டுரைகளை எழுத ஆரம்பித்தார். *வீரகேசரி, தினக்குரல்* பத்திரிகைகளிலும் இவரின் சமூக, அரசியல் கட்டுரைகள் பல வெளிவந்தன. தற்போது அனைத்துலக ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் *ஐ.பி.ஸி.* முழுநேரச் செய்தியாளராகவும் பணியாற்றுவதுடன் *கனேடிய தமிழ் வானொலியில் 'அரசியல் களம்'* என்ற நிகழ்ச்சியில் நேயர்களின் கேள்விகளுக்கு பதிலளித்துவருகின்றார். கிழக்கிலிருந்து வெளிவந்த *'தினக்கதிர்'* பத்திரிகையின் வவுனியா செய்தியாளராகவும் பணியாற்றியவர்.

வவுனியா மக்களினதும், வன்னி மக்களினதும் பிரச்சினைகளை, அவர்கள் எதிர்நோக்கும் நெருக்கடிகளை, அவர்களது தேவைகளை, ஏக்கங்களை, திறமைகளை உயிர்த்துடிப்புடனும், துணிச்சலுடனும் வெளிப்படுத்திவருபவர், போரின் பின்னான காலப்பகுதியில் வன்னி மக்களின் பல்வேறு வடுக்களை இனம்கண்டு வெளிப்படுத்தியவர். அதற்கான தீர்வுக்காக சம்பந்தபட்டவர்களை உலுப்பிவிட்டவர்.

### எஸ்.ஸ்ரீதரன்

*(சுயாதீன ஊடகவியலாளர்)*



பத்து ஆண்டுகளாக சுயாதீன ஊடகவியலாளராக இருந்து ஊடகத்துறைக்குச் சிறப்பான பங்களிப்புச் செய்து வருகின்றார். *வீரகேசரி, தினக்குரல்* ஆகிய பத்திரிகைகளுககும் சூரியன் எவ்.எம். வானொலிக்கும் மலையகச் செய்தியாளராக செயற்பட்டு வரும் இவர், மலையக மக்களின் சமூக, அரசியல் பிரச்சினைகளை செய்திகளாகவும், கட்டுரைகளாகவும் வெளிப்படுத்தி வருபவர்.

மலையகத்தில் இடம்பெறும் சம்பவங்களை உடனுக்குடன் வானொலி ஊடாக வெளிப்படுத்துவதில் முனைப்புடன் செயற்படுபவர். ஆசிரியத் தொழில் புரியும் இவர், மலையக மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அதை அவர்கள் மூலமே வெளிப்படுத்துவதில் சிறந்து விளங்குபவர். கட்டுரைகளை தன் சிந்தனையில் மட்டுமல்லாது பொதுமக்களின் அபிப்பிராயங்கள் மூலமும் நெறிப்படுத்துவதில் வல்லவர்.

### எம்.கே.ஜீவகதாஸ்

*(வீரகேசரி, யாழ். அலுவலகச் செய்தியாளர்)*



1980 ஆம் ஆண்டு *'ஈழநாடு'* பத்திரிகையின் சாவகச்சேரி நிருபராக ஊடகத்துறைக்குள் நுழைந்தார். 1985 - 1987 காலப்பகுதியில் பாரிஸ் *ஈழநாடு* நிருபராகவும், 1996-2002 காலப்பகுதியில் *வீரகேசரி* தென்மராட்சி நிருபராகவும், 1998-2002 காலப்பகுதியில் *தினகரன்* பத்திரிகையின் சாவகச்சேரி நிருபராகவும் பணியாற்றியுள்ள ஜீவகதாஸ் 2002 ஆம் ஆண்டிலிருந்து வீரகேசரியின் யாழ்.அலுவலக நிருபராக பணிபுரிந்து வருகிறார்.

ஆங்கில மொழியில் நன்கு பரிச்சயமுடைய இவர் **Weekend Express** பத்திரிகையின் தென மராட்சி நிருபராக பணிபுரிந்த காலத்தில் யாழ். மக்களின் பிரச்சினைகளையும், துன்பங்களையும் ஆங்கில மொழிமூல வாசகர்களுக்கு குறிப்பாக சிங்கள கல்விமான்களிடம் கொண்டு சென்ற பெருமைக்குரியவர்.

இவர் ஒரு நிருபராக மட்டுமல்ல செய்தி ஆசிரியராகவும் பல சந்தர்ப்பங்களில் தொழிற்பட்டுள்ளார். 1987-1989 காலப்பகுதியில் லண்டனிலிருந்து வெளிவந்த *'செங்கதிர்'* பத்திரிகையின் தாயக ஆசிரியராக இருந்து தாயகச் செய்திகளை சிறப்பாக வழங்கியுள்ளார். ***Chava Lions*** இன் ஆசிரியராக 1991 - 1993 வரை பணியாற்றியுள்ள இவர், 1990 - 1995 வரை *புனர்வாழ்வு மடலின்* ஆசிரியராகவும் கடமையாற்றியுள்ளார். இனக்கலவர காலங்களிலும், தொடர்ந்து யுத்தம் நடைபெற்ற காலப்பகுதிகளிலும் இடம்பெயர்ந்த வடபகுதி மக்களினதும், அகதி முகாம்களில் அல்லலப்பட்ட மக்களினதும் துன்பங்களையும், தேவைகளையும் பத்திரிகை வாயிலாக உலகறியச் செய்ய பாடுபட்டவர்களில் பெரும் பங்கு இவருக்குண்டு.

### நீக்கலஸ் ஜோய் ஜெயக்குமார்

*(வீரகேசரி, சிரேஷ்ட படப்பிடிப்பாளர்)*



1981 ஆம் ஆண்டு *வீரகேசரி* பத்திரிகையின் படப்பிடிப்பாளராக இணைந்துகொண்ட இவர், **Photo Journalisem** தொடர்பான மேலும் பல நுட்பங்களை கற்றுக்கொண்டதுடன் பத்திரிகைத் துறையில் சிறந்த படப்பிடிப்பாளராகத் திகழ்கிறார். முக்கிய நிகழ்ச்சிகள் பலவற்றை *வீரகேசரிப்* பத்திரிகைக்காக படப்பிடிப்புச் செய்தார். அவ்வாறு பிரசுரமான படங்களில் அநேகமானவை வாசகர்களின் பாராட்டைப் பெற்றவை ஆகும். அச்சம் நிறைந்த சூழலில் எலலாம் மிகத் துணிவாக களத்தில் இறங்கி படம் பிடித்தவர் இவர். அத்துடன், யுத்தசூழல்நிலை நிலவிய காலப்பகுதியில் தமிழ்மக்கள் எதிர்நோக்கிய பல பிரச்சினைகளை தனது படப்பிடிப்பின் மூலமாக வெளிக்கொணர்ந்தவர். 1997 இல் தினக்குரலிலும் தன் சிறப்பான படப்பிடிப்பின் மூலம் இணைந்த இவர் மீண்டும் 2000 ஆம் ஆண்டு வீரகேசரியில் படப்பிடிப்பாளராக இணைந்து கொண்டார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையும் அதன் எழுச்சித் தன்மைக்கும் ஏற்றவாறு வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற தமிழ்ப் பகுதிகளுக்குச் சென்று படப்பிடிப்புச் செய்த இவர் அதன் மூலம் பல சிந்தனைகளை தமிழ்மக்கள் மத்தியில் தூண்டியுள்ளார்.

### அம்மைப்பிள்ளை யோகமூர்த்தி

*(கருத்தோவியர், தினக்குரல் ஆசிரியர் பீடம்)*



1967 இல் இருந்து *'சிரித்திரன்'* சஞ்சிகையில் தொடர் நகைச்சுவைக் கருத் தோவியங்களை (காட்டூன்) வெளியிட்டு தன் பணியை ஆரம்பித்தார். 1984 இல் *'ஈழமுரசு'* பின்னர் 1995 இல் *'ஈழநாதம்'* ஆகிய பத்திரிகைகளில் மொழிபெயர்ப் புக் கட்டுரைகளை எழுதிவந்தார். 1996 இல் *வீரகேசரியிலும்* தன் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார். 1997 இல் தினக்குரல் பத்திரிகையில் கருத்தோவியராக இணைந்து கொண்ட இவா *தினக்குரலின* நாளிதழில் தொடர்ந்து இன்று வரை கருத்தோவியம் மூலம் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்தி வருகிறார்.

தமிழ் பத்திரிகைத்துறையில் இக்கட்டான கால கட்டங்களில் தணிக்கைக்குட்பட்ட காலங்களில் எல்லாம் கருத்தோவியத்தின் மூலம் பல விடயங்களை வெளிப்படுத்தி வந்தவர். செய்தியில் கட்டுரையில் கூறமுடியாத பல விடயங்களைக் கருத்தோவியத்தில் வரைந்து செய்தி சொன்னவர். 60 வயதுடைய இவர் இதுவரை 2500 இற்கும் மேற்பட்ட கருத்தோவியங்களை வரைந்துள்ளார். கேலிச் சித்திரத்தினூடாக தமிழ மக்களின் பல்வேறு பிரச்சினைகளை வெளிப்படுத்தியவர். முதன்முறையாக இலங்கைத் தமிழ் பத்திரிகையுலகில் ஒவ்வொரு நாளும் கருத்தோவியத்தின் மூலம் செய்தி சொன்ன பெருமை இவருக்குண்டு.

### தாந்தியான் வேதநாயகம்

*(சுயாதீன பத்திரிகையாளர்)*



1998 ஆம் ஆண்டில் மட்டக்களப்பு மாவட்ட *'தினகரன்'* நிருபராக ஊடகத்துறையில் பிரவேசித்த இவர் அதனைத் தொடர்ந்து, *தினக்குரல், சுடர்ஒளி* மற்றும் *சக்தி* வானொலி ஆகியவற்றின் செய்தியாளராகக் கடமையாற்றியிருக்கின்றார். ஆபத்தான யுத்த நிலைமைகளுக்கு மத்தியிலும் செய்திகளைச் சேகரித்து, அவற்றை உறுதிப்படுத்தி தான் சார்ந்த ஊடகங்களுக்கு அனுப்பி வைப்பதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார். அண்மைக்காலங் களில் மட்டக்களப்பில் பல அச்சுறுத்தல்கள், நெருக்கடிகளின் மத்தியில் உண்மை நிலைமைகளை வெளிக்கொணர்வதில் இவரது பங்களிப்பு மிக முக்கியமானது.

34 வயதான இவர், தன்னுடைய உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டிருந்த ஒரு சூழ்நிலையிலும், சரியான தகவல்கள் மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதில் அக்கறை காட்டிச் செயற்பட்டார். அதனால் தொடர்ந்தும் மட்டக்களப்பில் தங்கியிருக்க முடியாத நிலை அவருக்கு ஏற்பட்டது. அச்சுறுத்தல் களுக்கு மத்தியில் சில காலம் கொழும்பிலும் வேறு இடங்களிலும் தங்கியிருந்த இவர், தன் னுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதத்தைத் தேடி வெளிநாடு செல்வதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டார். இவருக்கு இவ்வருடத்துக்கான 'நடேசன் ஞாபகார்த்த விருது' வழங்கப்படுகிறது.

★


# தமிழர் தாயகம் எங்கும் மாவீரர்தினம் உணர்ச்சிப் பிரவாகத்துடன் அனுஷ்டிப்பு

யாழ்ப்பாணம்,நவ.28

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம் இன்னுயிர்களை ஈந்த மாவீரர்களின் நினைவு நாள் நேற்று தமிழர் தாயகம் எங்கும் மிகுந்த உணர்ச்சிப் பிரவாகத்துடன் எழுச்சி பூர்வமாகக் கொண்டாடப்பட்டது.

குடாநாடு அடங்கலாக வடக்கு - கிழக்கில் மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்றுக்காலை கொடியேற்றலுடன் ஆரம்பமான நிகழ்வுகளில் பெரும் எண்ணிக்கையான பொதுமக்களும், போராளிகளும் கலந்துகொண்டனர்.மாவீரர் நாளையொட்டி மஞ்சல், சிவப்புக் கொடிகள் எங்கும் பட்டொளி வீசிப்பறந்து எழில் பரப்பின.

வாகனங்கள், பொது இடங்கள், பாடசாலைகள், முகாம்கள், அரசியல்துறை அலுவலகங்கள் எங்கும் எழுச்சிக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.



நகரம் முதல் கிராமம் வரை மாவீரர் வளைவுகளும் மாவீரர் எழுச்சிப் பதாதைகளும் காட்சி அளித்தன.

சந்திகள் தோறும் நினைவுப் பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் படங்கள் வைக்கப்பட்டிருந்தன. பொது மக்கள் சென்று மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தினார்கள். எழுச்சிப் பாடல்கள் முழுநாளும் ஒலிபரப்பப்பட்டன. ஒவ்வொரு சந்திகளிலும் ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்டு எழுச்சிக்கீதங்கள் இசைக்கப்பட்டன.

### யாழ்ப்பாணத்தில்

குடாநாட்டில் மாவீரர் எழுச்சி நிகழ்வுகள் பரவலாக சகல இடங்களிலும் இடம்பெற்றன.

வர்த்தக நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மூடப்பட்டுக் கிடந்தன. பஸ் சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம்பெற்றன.

கோப்பாய், வடமராட்சி, தென்மராட்சி, தீவகம் ஆகிய இடங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களுக்குச் சமீபமாக பொது இடங்களில் மாவீரர்களின் பெற்றோர்கள் ஒன்றுகூட்டப்பட்டு கௌரவிப்புக்கள் இடம்பெற்றன.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நேற்றுப் பிற்பகல் நல்லூர்ப் பிரதேச எழுச்சிப் பேரவைச் செயலாளர் இ.பாலகுமார் தலைமையில் நடந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வை நல்லூர்க் கோட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் பூமகள், கலாசாலை அதிபர் எஸ். ஸ்ரீகந்தராசா ஆகியோர் பொதுச்சுடர் ஏற்றி ஆரம்பித்துவைத்தனர்.

சிறப்புரைகளும், கௌரவிப்பும் இடம்பெற்றன.

### மட்டக்களப்பில்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தாண்டியடி, தரவை, மாவடிமுன்மாரி, கண்டலடி ஆகிய மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்றுக் காலை கொடியேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

பெரும் எண்ணிக்கையான பொதுமக்கள், போராளிகள் இந்த நிகழ்வுகளில் கலந்து கொண்டு மாவீரர்களை நினைவு கூர்ந்தனர்.

மட்டக்களப்பு நகரப் பகுதியிலும் அமைதியாக - அசம்பாவிதம் இன்றி - மாவீரர்தின நிகழ்வுகள் எழுச்சியுடன் இடம்பெற்றன.


தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டு. - அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் பானுவும், தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டு. - அம்பாறை மாவட்டத் தளபதி கேணல் ராம், மாவடிமுன்மாரி துயிலும் இல்லத்தில் அப்பிரதேச கோட்டத்துணைத் தளபதி யோகராசா, கண்டலடி துயிலும் இல்லத்தில் ஆண்டான்குளம் பிரதேசத் தளபதி இனியவன் ஆகியோர் ஈகச்சுடர்களை ஏற்றினார்கள்.

### அம்பாறையில்


அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறுப் பகுதியில் அமைந்துள்ள மாவீரர் துயிலும் இல்லத்தில் ஜெயந்தன் படையணிப் பொறுப்பாளர் நளன் தேசியக் கொடியை ஏற்றினார்.

அதன்பின் அகவணக்கம், நினைவுரைகள் இடம்பெற்றன. தொடர்ந்து மாவீரர்களின் பெற்றோருக்குப் பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் ஜெயந்தன் படையணித் தளபதி கேணல் ஜனார்த்தனன் ஈகச்சுடரேற்றினார்.(ஜ-3-15-17-30-31-75-112-11-182-95-70-118-12-75-74-72)







கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நேற்று மாலை இடம்பெற்ற நிகழ்வுகளில் எடுக்கப்பட்ட படங்கள்.

*(படங்கள் : எஸ்.சிவரூபன், கொடிகாமம் செய்தியாளர்)*

## திறப்பு விழா

தென்மராட்சி கிழக்கு, கொடிகாமம் ப.நோ.கூ.சங்கத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா நாளை திங்கட் கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

நவஸ்பிரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக தமிழீழ நிர்வாக சேவையின் யாழ். மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன், தென மராட்சிப் பிரதேச செயலர் செஸ்ரீநிவாசன், கூட்டுறவு உதவி ஆணையாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். கனகசபாபதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (3-202)


**21ஆவது பிறந்தநாள் வாழ்த்து**

இருபாலை கிழக்கு, கோப்பாயைச் சேர்ந்த

**சாந்திராஜ் டிறோஷன்**

தனது 21ஆவது பிறந்தநாளை

இன்று (28.11.2004) ஞாயிற்றுக்கிழமை

தனது இல்லத்தில் வெகு குதூகலத்துடன்

சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

எரிக்கனோஸ்
564, 566, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். T.P.: 222 2486

(சி-39359)

இவரை மனமார வாழ்த்தி மகிழ்பவர்கள்
உரிமையாளரும்,
ஊழியர்களும்.


**கண்ணீர் அஞ்சலி**

**அமரர் தி.சிவசாமி** (கவிஞர் தில்லைச் சிவன்)



எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளைச் செயலாளர் *திரு.சி.தயாபரன்* அவர்களது தந்தையார் **தி.சிவசாமி** அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*யா/வேலணை மத்திய கல்லூரி,*
*வேலணை.*

(39055)

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்,
பழைய மாணவர் சங்கத்தினர்.

**மரண அறிவித்தல்**

**தாமோதரம்பிள்ளை தம்பிமுத்து**

நீர்வேலி மத்தியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை தம்பிமுத்து அவர்கள் 26.11.2004 வெள்ளிக் கிழமை இரவு 8.00 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகக் கொண்ட அமரர்கள் தாமோதரம்பிள்ளை - வள்ளிப்பிள்ளை அவர்களின் புதல்வனும் அமரர் நாகமுத்து அவர்களின் அன்புக் கணவரும் துரைராஜா, இராஜேஸ்வரி, இரவிச்சந்திரன் (கனடா) அவர்களின் அன்புத் தந்தையாரும், கமலாதேவி (கைதடி), அமரர் கண்ணலிங்கம் (வாதரவத்தை), நந்தினி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் மதீசன், கஜீன், கோகுல்ராஜ், குகப்பிரணவி, ரபிந்தன், ரபிஸ்னா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா, அருளம்பலம், நாகமுத்து மற்றும் முத்துவேல், சின்னத்தம்பி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2004) ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு மயானத்திற்கு பி.ப. 2மணிக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீர்வேலி மத்தி,*
*நீர்வேலி.*

(39057)

தகவல்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.


ஸ்ரீ மகா கணபதி துணை
மீனாட்சி அம்மன் துணை

**திருமண அழைப்பு**

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான தாரண வருடம் கார்த்திகைத் திங்கள் 13ஆம் நாள் (28.11.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 9.10 மணிமுதல் 10.30 மணிவரையுள்ள மிருகசீரிட நட்சத்திரமும் அமிர்த சித்தயோகமும் கூடிய சுபமுகூர்த்த சுப வேளையில்

எமது புத்திரன்
திருநிறை செல்வன்
**ஜெயசீலன்**
(உரிமையாளர் சானுகா நகைமடம்)
அவர்களுக்கும்



எமது கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**சத்தியப்பிரியா**
(B.A.)
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு நெல்லிப்பழை துர்க்கையம்மன் கல்யாண மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து, அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:**

திரு. திருமதி வீரசிங்கம்
198/5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(இருவீட்டார் அழைப்பு)

திருமதி.மா.கதிர்காமத்தம்பி
நீதிமன்ற வீதி,
மல்லாகம்.

# முல்லைக் கடலில் படகுகள் அணிவகுப்பு

கிளிநொச்சி, நவ.28

முல்லைத்தீவு கடற்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விசேட படகில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சுடரினை கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார்.

நேற்று மாலை 4 மணியளவில் முல்லைத்தீவு பிரதான சந்தியில் ஆரம்பமான கடற் புலிகளின் அணிவகுப்பில், கடற்கரும் புலிகள் அணி, நளாயினி கடற்படையணி, சாள்ஸ் அன்ரனி கடற்படையணி ஆகிய அணிகள் கலந்துகொண்டன.

இவை முல்லைத்தீவு கடற்கரையை வந்தடைந்ததும் கடற்புலிகளின் படகு அணிவகுப்பு கடலில் நடைபெற்றது. இந்த அணிவகுப்பில் 7 டோறா வகைகளைச் சேர்ந்த பல்வேறு யுத்தப்படகுகள் கடலில் சாகசங்களைக் காண்பித்தன. தொடர்ந்து கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை, தளபதிகள் சகிதம் கரையிலிருந்து 200 மீற்றர் தொலைவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சுடர் வைக்கப்பட்ட படகிற்குச் சென்று சுடரை ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வை பல்லாயிரக்கணக்கான மக்கள் கடற்கரையில் நின்று பார்வையிட்டனர்.

(ஐ-12)



வல்வெட்டித்துறை, கம்பர்மலை வீதியில் முதல் மாவீரர் லெப்டினன்ட் சங்கரின் நடுகல்லை கரவெட்டிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் கருணா திரைநீக்கம் செய்கிறார்.

# கிளிநொச்சியில் நேற்று நினைவுத்தூபி திறப்பு

கிளிநொச்சி,நவ.28

கிளிநொச்சியை மீட்பதற்காக மேற்கொள்ளப்பட்ட 'ஓயாத அலைகள்' நடவடிக்கையின் போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட 398 மாவீரர்களின் நினைவாக நினைவுத் தூபியும், நினைவுக் கல்வெட்டும் நேற்றுக் காலை திறந்துவைக்கப்பட்டன.

கிளிநொச்சியில் ஏ-9 வீதியில் காக்கா கடைச் சந்தியில் கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.காண்டீபன் தூபியைத் திறந்துவைத்தார்.

கிளிநொச்சி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆ.தனபாலசிங்கம் கல்வெட்டைத் திறந்துவைத்தார்.

தமிழீழ மாவீரர் பணிமனைப்பொறுப்பாளர் பொன்.தியாகம் மங்கள விளக்கேற்றினார்.

தமிழீழ கல்விக்கழகப் பொறுப்பாளர் வெ.இளங்குமரன் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றினார்.

தமிழீழ அரும் பொருள் காப்பு நடுவகப் பொறுப்பாளர் சி.ஆதித்தவர்மன் தலைமையில் நிகழ்ச்சி இடம்பெற்றது. (ஐ-3)

# தலைவர் பிரபாகரனின் ...

(03ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் உண்மையான அக்கறை கொண்டவர் போன்று சர்வதேச சமூகத்திற்கு ஏமாற்றுவித்தை காட்டுவதற்காக இருக்கலாம். மூன்றாவதாக, தமிழரின் சிக்கலான இனப் பிரச்சினை பற்றி விவாதிப்பது என்ற சாக்கிற் பேச்சுக்களை முடிவின்றி இழுத்தடிப்பதற்காகவும் இருக்கலாம். இப்படிப் பல காரணங்களை நாம் சுட்டிக்காட்டலாம். எப்படியான காரணங்களாக இருந்தாலும் ஒன்றைமட்டும் நாம் திட்டவட்டமாகச் சொல்ல விரும்புகின்றோம். அதாவது, சந்திரிகா அமமையாரின் முரண்பட்ட - ஒன்றுக்கொன்று மாறுபட்ட - நிலைப்பாடுகளைப் பார்க்கும்பொழுது, அவரது அரசானது தமிழ் மக்களுக்கு ஓர் இடைக்காலத் தீர்வையோ நிரந்தரமான தீர்வையோ வழங்கப்போவதில்லை என்பது புலனாகும்.

## கடந்தகால கசப்பான வரலாறு

தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு வேண்டிக் கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக நாம் சிங்கள அரசியல் தலைமைகளுடன் பேச்சுக்களை நடத்திய கசப்பான வரலாறு பற்றி நான் இங்கு விவரிக்க விரும்பவில்லை. காலத்தாற் சாகாது, ஈழத்தமிழ் இனத்தின் கூட்டு அனுபவத்தில் புதைந்துகிடக்கும் அரசியல் உண்மை இது. மொழியுரிமை என்றும் சம உரிமை என்றும் பிரதேச சுயாட்சி என்றும் சமஷ்டிக் கூட்டாட்சி என்றும் காலங் காலமாக நாம் பேச்சுக்களை நடத்தி, உடன்பாடுகள் ஒப்பந்தங்கள் செய்து, ஏமாற்றப்பட்டு வஞ்சிக்கப்பட்ட வரலாற்றுப் பாதையில் மீளநடைபோட எமது விடுதலை இயக்கம் தயாராக இல்லை.

சிங்களப்பௌத்தப் பேரினவாதச் சக்திக்குள் புதைந்து கிடக்கும் அரசியல் அமைப்புகளும் அவற்றின் தலைமைகளும் தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளை ஒருபொழுதும் புரிந்துகொள்ளப்போவதில்லை. சிங்களத் தேசத்தின் பிரதான அரசியல் கட்சிகள் எவையுமே தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைக்கூட அங்கீகரிக்கத் தயாராக இல்லை. வடக்கு - கிழக்கு மாநிலமானது தமிழ் பேசும் மக்களின் வரலாற்றுத் தாயகம் என்பதையோ, தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனக் கட்டமைப்பைக்கொண்ட மக்கள் சமூகம் என்பதையோ, தமிழீழ மக்களுக்குப் பிரிந்துசெல்லும் உரிமையுடனான சுயநிர்ணய உரிமையுண்டு என்பதையோ எந்தவொரு சிங்கள அரசியல் இயக்கமும் ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. தமிழரின் தேசிய இனப்பிரச்சினையின் அடிப்படைகளைப் புரிந்துகொண்டு, அவற்றை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமும் பெருந்தன்மையும் மதிநுட்பமும் இல்லாதது ஒருபுறமிருக்க, தென்னிலங்கை அரசியல் இயக்கங்கள் மத்தியில் ஒத்திசைவற்ற, ஒன்றுக்கொன்று மாறுபட்ட, முரண்பாடுகள் நிறைந்த கருத்துக்களையும் கொள்கைகளையுமே காணக்கூடியதாக இருக்கிறது. இப்படிக் குளறுபடியான கொள்கைகளை வரித்துக்கொண்டு, அப்பட்டமான இனவாதம் பேசும் கட்சிகளின் கூட்டணிக்குத் தலைமைவகிக்கும் சந்திரிகா அம்மையார், இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண்பதுபற்றி அக்கறை காட்டுவது எமக்கு ஆச்சரியத்தைத் தருகிறது. ஜனாதிபதி சந்திரிகாவிடமும் அவர் கூட்டாட்சி அமைத்திருக்கும் கட்சிகளிடமும் எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியிடமும் எமது விடுதலை இயக்கம் ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறது. அதாவது, தமிழ் மக்களது இனப்பிரச்சினையின் அடிப்படைகள் குறித்து, அவர்களது மூலாதாரக் கோரிக்கைகளான தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை குறித்து, உங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டினை அதிகாரபூர்வமாகப் பகிரங்கப்படுத்துங்கள்.

தென்னிலங்கை அரசியலரங்கில் தமிழரின் அடிப்படை அரசியல் அபிலாசைகள் குறித்துத் தெளிந்த பார்வையும் நேரிய தரிசனமும் ஒத்திசைவான நிலைப்பாடும் நிலவுமானால் எமது மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுபற்றிப் பேச்சு நடத்துவதில் அர்த்தமுண்டு. அல்லாதபட்சத்தில், நிரந்தரத் தீர்வு குறித்துப் பேசுவதில் அர்த்தமில்லை. தமிழர் பிரச்சினை குறித்துப் பிளவுபட்டு, முரண்பட்டுக் குழம்பி நிற்கும் சிங்கள அரசியல் தலைமைகளிடமிருந்து எமது மக்களுக்கு நியாயமான நிரந்தரத் தீர்வு கிடைக்கப்போவதில்லையென்ற உண்மையை உணர்ந்துதான் நாம் இடைக்காலத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்தோம். எமது மக்களின் வாழ்க்கைத் தேவைகளுக்காவது நிவாரணம் பெற்றுக்கொடுக்கும் நோக்கத்துடனேயே நாம் இத்திட்டத்தை முன்வைத்து, பேச்சுகளை ஆரம்பிப்பதற்கு விருப்பம் தெரிவித்தோம். ஆனால், சந்திரிகாவின் அரசு எமது நியாயமான நிலைப்பாட்டை நிராகரித்து, நிரந்தரத் தீர்வு என்ற சாக்குச் சொல்லி, சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவருகிறது. சமாதானத்தின் விரோதிகளையும் இனவாத சக்திகளையும் அவர்களது குளறுபடியான கொள்கைகளையும் தனது கூட்டாட்சித் திரைக்குள் மூடி மறைத்து, விடுதலைப் புலிகள் மீது வீண்பழி சுமத்த முனைகிறார் சந்திரிகா அம்மையார். சமாதான முகமூடி அணிந்து நடிக்கும் சந்திரிகா அரசின் உண்மையான முகத்தைச் சர்வதேச சமூகம் அடையாளங்கண்டுகொள்ளும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

## பொறுமைக்கும் எல்லை உண்டு

இடைக்காலத் தீர்வுமின்றி, நிரந்தரத் தீர்வுமின்றி, நிலையான அமைதியுமின்றி, நிம்மதியான வாழ்வுமின்றி, நாம் அரசியல் வெறுமைக்குள் தொடர்ந்தும் சிறைபட்டுக் கிடக்க முடியாது. சிங்களத் தேசமானது தமிழினத்தை அரவணைத்து, இணைத்து வாழவும் விரும்பவில்லை. அதேசமயம், பிரிந்து சென்று தனித்து வாழவும் விடுவதாக இல்லை. இரண்டுங் கெட்டான் நிலையில் விடிவின்றி, விடுதலையின்றி, எதிர்காலச் சுபீட்சமின்றி சூனியமான அரசியல் இருட்டுக்குள் நாம் தொடர்ந்து வாழமுடியாது. பொறுமைக்கும் எதிர்பார்ப்புக்கும் எல்லைக கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம். இந்த நெருக்கடியான சூழ்நிலையில் சிறீலங்கா அரசுக்கு நாம் அவசரமான அழைப்பு ஒன்றை விடுக்க விரும்புகின்றோம். அதாவது, நாம் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் திட்டத்தின் அடிப்படையில், நிபந்தனையற்ற முறையில், காலந்தாமதிக்காது பேச்சுக்களை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுக்கின்றோம். எமது இந்த அவசர வேண்டுகோளை நிராகரித்து, காலத்தை இழுத்தடித்து, எமது மக்களின் துயர வாழ்வை நீடித்துச் செல்ல சிங்கள அரசு முற்படுமானால், நாம் எமது தேசத்தின் சுதந்திரப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. எமது இந்த இக்கட்டான நிலையை, தமிழரின் இனப்பிரச்சினையில் அக்கறையுடைய உலக நாடுகள் கருத்தில் எடுத்து, எமது நியாயமான நிலைப்பாட்டின் அடிப்படையில் சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படி சிறீலங்கா அரசிற்கு அழுத்தம்கொடுக்குமாறு வேண்டிக்கொள்கிறோம்.

எமது மண்ணின் விடிவிற்காகவும் எமது மககளின் விடுதலைக்காகவும் களமாடி வீழ்ந்த எமது மாவீரர்களை நினைவுகூரும் இப்புனித நாளில், தேச விடுதலை என்ற அவர்களது இலட்சியக்கனவை, எத்தகைய இடர்கள், சவால்களை எதிர்கொண்டபோதும் நிறைவுசெய்வோமென நாம் உறுதிபூணுவோமாக.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்.


(ஐ)



சங்கரின் உருவப் படத்துக்கு அவரது சகோதரியும் கேணல் சூசையின் துணைவியாருமாகிய திருமதி சத்தியாவதி மலர்மாலை அணிவிக்கிறார்.



கப்டன் பண்டிதரின் படத்துக்கு அவரது தாயார் ஈகச்சுடர் ஏற்றுகிறார்.



கம்பர்மலை வீதியில் உள்ள நினைவாலயத்தின் தோற்றம்.

படங்கள் : சி. சுந்தரலிங்கம்
கரவெட்டிச் செய்தியாளர் .

# புலிகளின் தளபதிகள், பொறுப்பாளர்கள் துயிலும் இல்லங்களில் சுடர் ஏற்றினர்

யாழ்ப்பாணம்,நவ.28

தாயகப்பிரதேசம் எங்கும் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்களில் நேற்று மாலை இடம் பெற்ற அஞ்சலி நிகழ்வுகளில் விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர்கள், தளபதிகள் சுடர்களை ஏற்றினர்.

தமிழீழத் தேசியத் தலைவர் தனது மாவீரர்தின உரையை 6.10 மணியளவில் ஆற்றினார். 6.35 மணிக்கு ஆலயங்களில் நினைவொலி எழுப்பப்பட்டது. 6.36 மணிக்கு அகவணக்கம் செலுத்தப்பட்டு மாவீரர்கள் நினைவு கூரப்பட்டனர். 6.37 மணிக்கு நினைவுச்சுடர் ஏற்றப்பட்டது.

தமிழீழ விடுதலைக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணித்து ஆகுதியான மாவீரர் அனைவரையும் ஒன்று சேர்த்துத் துதிக்கும் புனித வேளையில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள் பிரதான ஈகச்சுடரை ஏற்றிவைத்துத் தமது வணக்கத்தைச் செலுத்தினார். தமிழீழத் தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையினைத் தொடர்ந்து 6.35 மணிக்கு மணி ஒலி எழுப்பப்பட்டது. ஆலயங்களில் மணிகள் ஒலி எழுப்பின.

6.36 மணியளவில் மாவீரர்கள் அனைவரையும் ஒன்று சேரத் தமிழ் மக்கள் அனைவரும் போற்றும் அகவணக்கம் இடம்பெற்றது.

6.37 மணிக்குப் பிரத்தியேகமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் தளபதிகள், போராளிகள் கலந்துகொண்டிருக்க தமிழீழத் தேசியத் தலைவர் பிரபாகரன் பிரதான ஈகச் சுடரை ஏற்றி வணக்கம் செலுத்தினார்.

இதேவேளை - சகல மாவீரர் துயிலும் இல்லங்களிலும் பிரதான ஈகச்சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன. மாவீரர் கல்லறைகளின் முன்பாக உரித்துடையவர்கள் சுடர்களை ஏற்றினர். தமிழர் தாயகப்பிரதேசங்கள் எங்கும் மாவீரர் மண்டபங்களிலும் மக்களின் இல்லங்களிலும் ஈகச் சுடர்கள் ஏற்றப்பட்டன.

ஒரே சமயத்தில் ஏற்றப்பட்ட இச்சுடர்களினால் எங்கும் ஒளிப்பிரவாகம் ஏற்பட்டது.

துயிலும் இல்லங்களில் சுடர் ஏற்றியோர் விவரம் வருமாறு:-

**மட்டக்களப்பில்**

மாவடி முன்மாரி மாவீரர் துயிலும் இல்லத்தில் மாவடி முன்மாரிக் கோட்டத் துணைத் தளபதி யோகராஜ், தாண்டியடி மாவீரர் துயிலும் இல்லத்தில் மட்டு, அம்பாறை மாவட்ட துணைத்தளபதி ராம், தரவை மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் பானு - வாகரை கண்டலடி மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் பால்ராஜ்-

**அம்பாறையில்**

கஞ்சிக்குடிச்சாறு ஒருங்கன்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் அம்பாறை மாவட்டத் தளபதி ஜனார்த்தனன்-

**திருகோணமலையில்**

திருகோணமலை ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் திருகோணமலை கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம், பெரியகுளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் திருகோணமலை வடக்கு இராணுவப் பொறுப்பாளர் குணம், தியாகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் திருகோணமலை மத்தி இராணுவப் பொறுப்பாளர்வரன், உப்பாறு மாவீரர் துயிலும் இல்லத்தில் மத்தி இராணுவப் பொறுப்பாளர் விமல்ராஜ் -

**முல்லைத்தீவில்**

அலம்பில் மாவீரர் துயிலும் இல்லத்தில் கடற் புலிகளின் மகளிர் சிறப்புத் தளபதி விடுதலை, வன்னி விளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் நில அளவைப் பொறுப்பாளர் சசிக்குமார், ஆலங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் மாலதி படையணிச் சிறப்புத் தளபதி விதுஷா, விசுவமடு மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி ரமேஸ், நிஷாம்வெட்டை மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் ஆதவன், முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழக் காவல் துறைப் பொறுப்பாளர் பூ.நடேசன் -

**வவுனியாவில்**

ஈச்சங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழ அரசியல்துறை மகளிர்பொறுப்பாளர் தமிழினி-

**மன்னாரில்**

ஆட்காட்டிவெளி மாவீரர் துயிலும் இல்லத்தில் வடமுனைக்கட்டளைத் தளபதி கேணல் ஜெயம், பெரிய பண்டிவிரிச்சான் மாவீரர் துயிலும் இல்லத்தில் நிதித்துறைப் பொறுப்பாளர் தமிழ்க்குமரன் -

**கிளிநொச்சியில்**

கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தளபதி கேணல் தீபன், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லத்தில் கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் -

**யாழ்ப்பாணத்தில்**

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழ அரசியல்துறைத் துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன், கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழ விளையாட்டுத் துறைப் பொறுப்பாளர் கி.பாப்பா, எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி, சாட்டி மாவீரர் துயிலும் இல்லத்தில் தீவகக் கோட்ட சிறப்புப் பொறுப்பாளர் கண்ணன் ஆகியோர் சுடர் ஏற்றினர்.

(ஐ-5-7-12-70-173-31-11-13-17-15-74-86-30)

# 34 மேலதிக வாக்குகளால் பட்ஜெட் அங்கீகரிப்பு!

## ஹெல உறுமய, இ.தொ.கா.ஆதரித்தன

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முதலாவது வரவு - செலவுத்திட்டம் நேற்று 34 மேலதிக வாக்குகளால் அங்கீகரிக்கப்பட்டது.

வரவு - செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக 126 வாக்குகளும், எதிராக 92 வாக்குகளும் கிடைத்தன.

கடந்த 18 ஆம் திகதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசின் முதலாவது வரவு-செலவுத்திட்டத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

நிதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட வரவு-செலவுத்திட்ட சிபார்சுகள் தொடர்பான இரண்டாவது வாசிப்பின் மீதான விவாதம் 19 ஆம் திகதி முதல் நேற்றுவரை ஏழு தினங்கள் நடைபெற்றது.

இத்தினங்களில் ஆளும்தரப்பைச் சேர்ந்த அமைச்சர்களும், உறுப்பினர்களும், ஜே.வி.பியினரும் வரவு - செலவுத்திட்டத்தை வெகுவாகப் பாராட்டி வரவேற்றனர்.

அதேவேளை, எதிர்க்கட்சி அணியைச் சேர்ந்த ஐ.தே.க., ஸ்ரீல. முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பனவற்றின் உறுப்பினர்கள் வரவு - செலவுத்திட்டத்தைக் கண்டித்து விமர்சனம் செய்தனர்.

வரவு - செலவுத்திட்ட விவாதத்தின்போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சபையில் தொடர்ச்சியாக ஒரு 10 நிமிடமாவது ஆசனத்தில் இருக்கவில்லை; உரையாற்றவும் இல்லை.

எதிர்க்கட்சிகளின் சார்பில் பந்துல குணவர்த்தனவே இறுதி உரையை நிகழ்தினார். ஆளும் கட்சியின் தரப்பில் பிரதமர் உட்பட அனைத்து சிரேஷ்ட அமைச்சர்களும் விவாதத்தில் கலந்துகொண்டனர்.

நிதி அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம இறுதியாகப் பதில் அளித்துப் பேசியபின் வரவு - செலவுத்திட்டம் மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. வாக்கெடுப்பின்போது ஆதரவாக ஆளும் கட்சியினருடன், ஜாதிக ஹெல உறுமய, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்பனவும் வாக்களித்தன.

அதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு, ஸ்ரீல.மு.காங்கிரஸ் என்பன வரவு - செலவுத் திட்டத்திற்கு எதிராகவும் வாக்களித்தன.

இ.தொ.க.தலைவர் ஆறுமுகன் தொண்டமான் சபையில் சமுகமளித்திருக்கவில்லை. (ஐ-க)

# கருணாவும் உரை

கொழும்பு,நவ.28

விடுதலைப் புலிகள். இயக்கத்திலிருந்து துரத்தப்பட்டு தப்பியோடி தென்னிலங்கையில் பதுங்கியிருக்கின்றார் எனக் கருதப்படும் கருணாவும் மாவீரர்தின உரை என்ற பெயரில் உரையாற்றியிருக்கிறார். அவரது கும்பலின் சார்பில் இயங்கும் இணையத்தளத்தில் அவர் உரையாற்றும் வீடியோக் காட்சி நேற்று மாலை ஒளிபரப்பானது.

ஆனால், அதற்கு முன்னரே நேற்றுக் காலை தென்னிலங்கையில் வெளியான ஆங்கிலப் பத்திரிகையில் அதன் விவரம் பிரசுரமாகியிருந்தது.

தலைவர் பிரபாகரனைத் தாறுமாறகத் தூற்றியும் திட்டித் தீர்த்தும். இந்தியாவைப் புகழ்ந்தும் அந்த உரையை நிகழ்த்தினார் கருணா. (ஐ-க)

# கண்ணீர் அஞ்சலி



எமது சக நண்பரும் யா/கொக்குவில் இந்துக் கல்லூரி 2001 வர்த்தகப் பிரிவு மாணவனுமான

**பாலையா நிர்மலகாந்தன் (யூலி)**

அவர்களின் திடீர் மறைவையிட்டு ஆழ்ந்த அதிர்ச்சியடைவதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்துயரில் பங்கெடுத்து அவரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(39058) நண்பர்கள் - (கொக்குவில் இந்துக் கல்லூரி - 2001)

# மரண அறிவித்தல்கள்

## பாலையா நிர்மலகாந்தன (யூலி)

(யா/கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவன் - 2001 வர்த்தகம்)



இல 20, அரசடி லேன், தட்டாதெரு, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பாலையா நிர்மலகாந்தன் அவர்கள் நேற்றுமுன்தினம் (26.11.2004) வெள்ளிக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான் ஏகாம்பரம் பாலையா - கிருஸ்ணகுமாரி தம்பதிகளின் அன்பு மகனும் இந்துமதி (யாழ்.), சுதாஜினி (ஜேர்மனி), சாந்தினி (புதுக்குடியிருப்பு), உமா கணேசன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவகுமாரன் (யாழ்.), விக்னராஜா (ஜேர்மனி), முரளிதரன் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் அன்பு மைத்துனரும் யாழமுதன், அமிர்தசாகரன், சஹானா, சங்கீத், வினேஸ், கலையறிவன், சுடரோவியன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28-11-2004) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 4 மணிக்கு கோம்பையன் மணல் மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.20, அரசடி லேன்,*
*தட்டாதெரு, யாழ்ப்பாணம்.* (39049)(38-15-18)
தகவல்
குடும்பத்தினர்.

## C.K.மகாதேவன்

(முன்னாள் முகாமையாளர், சிகரெட் பகுதி, யாழ்.ஐக்கிய வியாபாரச் சங்கம்)

JAFFNA CO- Opercal Stores Ltd.



நவாலியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாய் உடுவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லப்பா கந்தசாமி மகாதேவன் அவர்கள் நேற்று (27.11.2004) சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி- பாக்கியம் ஆகியோரது அன்பு மகனும் மகாலட்சுமியின் அன்புக் கணவரும் இராஜதேவன் (குவைத்), இராஜகாந்தன் (பொறியியலாளர் - John Keels Holdings Colombo), இராஜரூபன் (உரிமையாளர், தேவன் சன்ஸ், சாவகச்சேரி), பிரபா (தகவல் தொழில்நுட்பப் பூங்கா, யாழ்ப்பாணம்), தர்சினி (விஞ்ஞானபீட மாணவி 4 ஆம் வருடம், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பிரபாகரனின் (பிரதேச செயலகம், தெல்லிப்பழை) அன்பு மாமனாரும் கமலராணி (இளைப்பாறிய ஆசிரியை), சகாதேவன் (இளைப்பாறிய முகாமையாளர்) ஆகியோரது சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2004) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*2 ஆவது ஒழுங்கை,*
*உடுவில் வீதி, மானிப்பாய்.* (39062)(38-15-18)
தகவல்
மனைவி, பிள்ளைகள், மருமகன்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி முத்துப்பிள்ளை மார்க்கண்டு (முத்து ரீச்சர்)

உசன், மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துப்பிள்ளை மார்க்கண்டு (ஓய்வுபெற்ற ஆசிரியை) அவர்கள் நேற்று (27.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு - நாகமுத்து தம்பதிகளின் அருமைப் புதல்வியும் வேதவனம் மார்க்கண்டு (ஓய்வுபெற்ற அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும் வாசுகி (பிரான்ஸ்) அவர்களின் அன்புத் தாயாரும் நவரத்தினம் (பிரான்ஸ்) அவர்களின் மாமியாரும் முருகேசு, காலஞ்சென்ற விநாசித்தம்பி மற்றும் சிவயோகநாதன், இராமநாதர் (கனடா) ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.11.2004) ஞாயிற்றுக் கிழமை உசனில் பிற்பகல் 3 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உசன்,*
*மிருசுவில்.* (39060)(38-29-15-18)
தகவல்:
வே.மார்க்கண்டு
(கணவர்).

## வல்லிபுரம் குருசாமி (கலைச்சுடர்)



வீமன்காமத்தைப் பிறப்பிடமாகவும் மயிலிட்டி தெற்கு, கட்டுவனை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் குருசாமி (கலைச்சுடர்) அவர்கள் நேற்று (27.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சிவக்கொழுந்துவின் அன்புக் கணவரும் சிறீதர், புவனேந்திரன் (பிரான்ஸ்), ஜெயகௌரி (சுவிஸ்), சாந்தினி (பிரான்ஸ்). சுகுமார் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஞானேஸ்வரி, சறோஜினி (பிரான்ஸ்), சதானந்தராசா (சுவிஸ்), சிவனேசமூர்த்தி (பிரான்ஸ்), சத்தியபிறேமா ஆகியோரின் அன்பு மாமனாரும் கந்தையா, காலஞ்சென்ற அன்னபூரணம், பொன்னம்மா, காலஞ்சென்ற நாகம்மா, காலஞ்சென்ற வேலாயுதம் ஆகியோரின் சகோதரரும் வேலாயுதம், பரமேஸ்வரி, சிவப்பிரகாசம், பூமலர் ஆகியோரின் மைத்துனரும் சிறீவக்சன், சுகன்யா, சஜீபன், சத்தியா, விதூஷா, விபூசனா, சுஜன், சுஜித்திரா, சுபேந்தினி, சஞ்சிகா, சங்கவி, கோசிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.11.2004) திங்கட் கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணிக்கு மல்லாகம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நீலியம்பனை,*
*மல்லாகம்.* (39061)(38-29-15-18)
தகவல்:
சிறீதர், சுகுமார்
(பிள்ளைகள்).

ராஜா யாழ்ப்பாணம்
அஜித் + அஜித், பூஜா நடித்த
அட்டகாசம்
காட்சிகள்: 10.30, 2.30, 6.30, 9.30. (பு.நே)
(சி-38750)
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாதன்ஸ் சினிமா யாழ்ப்பாணம்
குளிரூட்டப்பட்டது 2 ஆவது வெற்றிவாரம் காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.00 (பு.நே.)
தருஷ், பிரியா நடித்த


ட்ரீம்ஸ்
வெகுவிரைவில் இரவு 9.00 (பு.நே) காட்சியாக RAMBO-3
(சி-39052)

நிறைஞ்சனாஸ் சங்கானை
சத்தியராஜ், வடிவேல் நடித்த
தவுஸ் பார்ட்டி
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே.)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) RAMBO - 3

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்
சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த
டொல்பி ஒலி அமைப்புடன்
சத்ரபதி

தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)








முல்லைக்கடலில் நேற்று கடற்புலிகள் நடத்திய மாவீரர்தின அஞ்சலி மற்றும் அணிவகுப்பு நிகழ்வுகளின் காட்சிகள். படகில் கடலுக்குப் புறப்பட கேணல் சூசை தயாராகுவதையும் நினைவுச்சுடரேற்றும் படகையும் முதலிரு படங்களில் காணலாம். கடலிலும் தரையிலும் இடம்பெற்ற அணிவகுப்புகளை அடுத்துள்ள படங்களில் காணலாம்.





# ஈ.என்.டி.எல்.எவ். மனோ மாஸ்டர் கருணா குழுவினால் கடத்தப்பட்டார்?

கொழும்பு,நவ.28

விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து துரத்தப்பட்ட கருணாவுடன் இணைந்து செயற்பட்டவரும் ஈ.என்.டி.எல்.எவ். கட்சியின் செயலாளருமான மனோ மாஸ்டர் எனப்படும் ரி.ராஜரட்ணம் கருணா குழுவினராலேயே கடத்தப்பட்டுள்ளார் என்று அறியவருகின்றனது.

ஈ.பி.டி.பி. அமைப்பினருடன் கருணா மீண்டும் தொடர்புகளை ஏற்படுத்திக்கொண்டதன் காரணத்தாலும், கருணா தரப்பால் ஈ.என்.டி.எல்.எவ். அமைப்புக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் சில நிறைவேற்றப்படாததன் காரணத்தாலும் ஏற்பட்ட கருத்து முரண்பாடு காரணமாகவே மனோ மாஸ்டர் கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அண்மையில் இந்தியாவில் இருந்து ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பைச் சேர்ந்த விஜயன் என்பவர் கொழும்பு வந்துள்ளார். அவரை விமான நிலையத்தில் இருந்து அழைத்துவருவதற்கு ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த ஒருவரைக் கருணா குழுவினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஈ.பி.டி.பி. அமைப்பினருடனான கருணா தரப்பின் இந்தத் தொடர்பு ஈ.என்.டி.எல்.எவ். அமைப்புடன் கருணா செய்துகொண்ட ஒப்பந்தத்துக்கு முரணானது என்று ராஜரட்ணம் சுட்டிக்காட்டியுள்ளார். இதனை அடுத்தே கருணா தரப்புக்கும் ஈ.என்.டி.எல்.எவ். அமைப்புக்கும் இடையில் உறவுகளில் விரிசல்கள் ஏற்பட்டன என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

கருணா தரப்பினருக்கு ஈ.பி.டி.பி. அமைப்பினருடன் உள்ள தொடர்புகள் அனைத்தும் துண்டிக்கப்படவேண்டும் என்று ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னரே ஈ.என்.டி.எல்.எவ். அமைப்புத் தெரிவித்திருந்தது. இதற்கு கருணா தரப்பும் உடன்பட்டிருந்தது.

1987 ஆம் ஆண்டு புளொட் அமைப்பில் இருந்து விலகிய பரந்தன் ராஜன் அணியினரையும் ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பில் இருந்து வெளியேற்றிய டக்ளஸ் தேவானந்தாவையும் இணைத்தே ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்தக் கட்சி உருவான சில மாதங்களில் டக்ளஸை, ராஜன் குழுவினர் கட்சியில் இருந்து வெளியேற்றினர். தான் நீண்ட காலம் இந்தியச் சிறைகளில் அடைபட்டுக்கிடந்ததற்கும் அவர்களே காரணம் என்று அமைச்சர் டக்ளஸ் தெரிவித்துவருகிறார்.

இத்தகைய ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பின் சார்பில் இலங்கையில் கருணா தரப்பினருடன் இணைந்து இயங்குவதற்காக விஜயன் இந்தியாவில் இருந்து அனுப்பப்பட்டார். இவர் திருகோணமலையைச் சேர்ந்தவர். அவரது சொந்தப் பெயர் கார்த்திகேசு பேரின்பம். முன்னாள் புளொட் உறுப்பினரான இவர், பின்னர் இலங்கையில் ஈ.என்.டி.எல்.எவ். உடன் இணைந்து செயற்பட்டார். பின்னர் இந்தியா சென்று சேலம் தம்பம்பிட்டி அகதி முகாமில் வசித்து வந்தார் என்று கூறப்பட்டது.

விஜயன் இலங்கை வந்ததும் கருணா தரப்புடன் இணைந்து செயற்பட ஆரம்பித்தார். தான் ஒரு மூத்த உறுப்பினர் என்பதனால் அமைப்பின் சில பொறுப்புக்கள் தன்னிடமே தரப்படவேண்டும் என்று அவர் கேட்டார். இதனால் கருணாதரப்பினருடன் அவருக்கு அதிருப்தி ஏற்பட்டுள்ளது.

கொழும்பில் மாளிகாவத்தை, போதிராஜா மாவத்தையிலுள்ள விகாரையிலும் கருணா தரப்பு தங்கிச் செயற்படுவதற்கு சிங்களக் கட்சி ஒன்று ஒழுங்குகளைச் செய்து கொடுத்திருந்தது.

இந்த விகாரையில் வைத்தே கருணா தரப்பினைச் சேர்ந்த இனிய பாரதிக்கும் ராஜரட்ணத்துக்கும் இடையில் அண்மையில் கடும் வாக்குவாதங்கள் இடம்பெற்றன என்று தெரிவிக்கப்படுகின்றது. விஜயனின் செயற்பாடுகள் தொடர்பாகவும் கருணா அணியினருக்கும் ஈ.பி.டி.பியினருக்கும் உள்ள தொடர்புகள் பற்றியும் இந்த வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது. அது முற்றிய நிலையில் ராஜரட்ணம் புதிதாக அமைக்கப்பட்ட அமைப்பில் இருந்து தாங்கள் வெளியேறுவதாகக் கருணாவிடம் கூறியுள்ளார்.

எனவே கருணா தரப்பிற்கு ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பினால் கொடுக்கப்பட்ட பணம் மற்றும் சில பொருள்களை திருப்பித்தரவேண்டும் என்றும் கருணா தரப்பிடம் ராஜரட்ணம் அழுத்திச் சொல்லியிருக்கிறார் என்றும் தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனைத் தொடர்ந்தே ராஜரட்ணம் காணாமற் போனார் என்று தெரிவிக்கப்படுகின்றது. கருணா தரப்பினரே இவரைக் கடத்திச் சென்றிருக்கக்கூடும் என்றும் கருதப்படுகின்றது.

தம்மிடம் பெரும் எண்ணிக்கையான ஆள்கள் இருக்கிறார்கள் என்று கூறி, ஈ.என்.டி.எல்.எவ். அமைப்பிடம் இருந்து கருணா குழுவினர் பெரும் தொகையான பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளனர். ஆனால், கருணா தரப்பால் தரப்பட்ட தகவல்கள் பொய்யானவை என்று விஜயன் இறுதியில் கண்டுபிடித்துவிட்டார் என்றும் கூறப்படுகின்றது. ராஜரட்ணம் கடத்தப்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் கூறப்பட்டது. (ஐ-க)

## புதிய கட்டடம் திறப்பு விழா

யாழ்ப்பாணம்,நவ.28

தென்மராட்சி கிழக்கு, கொடிகாமம் ப.நோ.கூ.சங்கத்தின் புதிய கட்டடத்திறப்பு விழா நாளை திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

ந.வல்லிபுரம் தலைமையில் நடைபெறவுள்ள இவ்விழாவில் பிரதம விருந்தினர்களாக தமிழீழ நிர்வாக சேவையின் யாழ்.மாவட்டப் பொறுப்பாளர் சி.விஜிதரன், தென்மராட்சிப் பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன், கூட்டுறவு உதவி ஆணையாளர் அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ்.கனகசபாபதி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (3-202)

## சம்பந்தன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் வந்துகொண்டிருந்த சமயம் கிரனேட் ஒன்று வீசப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தலையில் படுகாயங்களுக்கு உள்ளான இருவரும் உடனடியாக திருகோணமலை 'வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டது. எனினும் தற்போது அங்கு நிலவும் பதற்ற நிலைமையில் வைத்தியசாலையில் தங்கியிருப்பது பாதுகாப்பானது அல்ல எனக் கருதி இருவரும் நேற்றிரவு அவர்களது வீட்டுக்குக் கூட்டிவரப்பட்டனர்.

மேலதிக சிகிச்சைக்காக அவர்கள் இன்று காலை கொழும்புக்கு அனுப்பப்படவிருக்கின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றுமுன்தினம் ஜே.வி.பியினர் திருமலையில் மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்புவதற்கு மேற்கொண்ட அடாவடித்தனங்கள் குறித்து சம்பந்தன் பொலீஸ் மா அதிபருக்கு முறையிட்டிருந்தார். அதன் எதிரொளியாகவே இச்சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது.

(ஐ-3-12-13-143)

## உண்மை வீரர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையினருக்கு அஞ்சலி செலுத்தும் விதத்திலேயே இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டபோதும் மாவீரர் தினத்தை குழப்புவதே இதன் உண்மையான நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டது.

திருமலை 4ஆம் கட்டையில் இருந்து 20 ஓட்டோக்களில் சுமார் 60 பேர் வரையிலானோர் ஊர்வலமாக கண்காணிப்புக்குழு அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டனர். ஓட்டோக்கள் அனைத்திலும் சிங்கக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

ஊர்வலமாக நகரை நோக்கி வந்த இந்தப் பேரணியை உட்துறைமுக வீதி வழியாகச் செல்வதற்கு அனுமதிக்க பொலீஸார் மறுத்தனர். நிலாவெளிச் சந்தியில் அவர்களைப் பொலீஸார் மறித்தனர். மூன்றாம் கட்டை ஊடாக நகருக்குச் சென்று கண்காணிப்புக் குழு அலுவலகத்துக்குச் செல்லுமாறு பொலீஸார் முதலில் தெரிவித்தனர். எனினும், பின்னர் அதற்கும் அவர்கள் அனுமதிக்கவில்லை.

நிலாவெளிச் சந்தியிலேயே, ஊர்வலம் வந்தவர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர். அதன்பின்னரும் கலைந்து செல்லாமல் அவர்கள் அங்கேயே கூடியிருந்தனர். இதனால் அசம்பாவிதங்கள் ஏதும் ஏற்படுமோ என்ற அச்சம் ஏற்பட்டது.

உட்துறைமுக வீதியில் அமைந்துள்ள இந்து கலாசார மண்டபத்திலேயே மாவீரர் தின நிகழ்வுகள் நடைபெற்றன. இதனாலேயே அந்தப் பகுதியூடாக ஊர்வலம் செல்வதற்கு பொலீஸார் அனுமதி மறுத்தனர்.

இதேவேளை, இந்து கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகளில் கலந்துகொள்வதற்காகச் சென்ற தமிழ் மக்களையும் பொலீஸார் ஆரம்பத்தில் திருப்பி அனுப்பினர். எனினும் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இதேவேளை, திருமலை மாவட்ட கண்காணிப்புக்குழு அலுவலகத்துக்குச் செல்லும் பாதைகள் அனைத்தும் நேற்று பிற்பகலிற்குப் பின்னர் தடைசெய்யப்பட்டிருந்தன.

கண்காணிப்புக் குழு அலுவலகத்திற்குச் செல்லும் அனைத்துப் பாதைகளின் குறுக்கேயும் வாகனங்களை நிறுத்தி, பொலஸார் போக்குவரத்தைத் தடைசெய்திருந்தனர். பொதுமக்கள் கூட அந்தப் பாதைகள் வழியாகப் பயணிப் பதில் பெரும் சிரமங்களை எதிர் நோக்கினர்.

மாவீரர் தினத்தை யொட்டியும் அதனைக் குழப்புவதற்கு சில சக்திகள் முயன்ற காரணத்தாலும் திருமலையில் பொலீஸாரும் படையினரும் குவிக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

(ஐ-290)

## அரசுக்கு இது இறுதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சை ஆரம்பிப்பதற்கான காலத்தை இழுத்தடித்துக்கொண்டுபோனால், போராட்டம் மழுங்கடிக்கப்பட்டுவிடும் என்று வன்னி சென்ற சமயம் தலைவர் என்னிடம் கூறினார். இதையே அவர் நோர்வேத் தரப்பினரிடமும் எடுத்துக்கூறியுள்ளார்.

லண்டன் மாநகரின் மத்திய பகுதிக்கு நெருக்கமாக எக்ஸெல் மண்டபத்தில் லண்டன் நேரடிப்படி மதியம் 12 மணியளவில் (இலங்கை நேரப்படி மாலை 6 மணியளவில) இந்நிகழ்வுகள் ஆரம்பமாகின.

அகவணக்கம், ஈகச்சுடரேற்றல் ஆகியவற்றைத் தொடர்ந்து, தமிழீழத்தில் நேற்று மாலை தலைவர் பிரபாகரன் ஆற்றிய மாவீரர் தின உரை, அதேசமயம் எக்ஸெல் மண்டபத்தில் ஒலிபரப்பானது.

சுமார் 18 ஆயிரம் பேரைக் கொள்ளத்தக்க எக்ஸெல் மண்டபம் நேற்று மாவீரர் தின நிகழ்வுகளுக்கு வந்த ஈழத் தமிழர்களால் நிரம்பி வழிந்தது.

இந்த மாவீரர் தின நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்காக லண்டன் மாநகரில் வர்த்தக நிலையங்களை வைத்திருக்கும் ஈழத்தமிழர்கள், நேற்று முழுநாளும் தமது கடைகளையும் வர்த்தக நிலையங்களையும் மூடியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்றைய மாவீரர் தின நிகழ்வில் சுமார் இருபத்தியைந்து தமிழீழப் பாட்டுக்கள் இசைக்கப்பட்டன. லண்டனில் பிறந்து வளர்ந்த - பிரபலமான - இசைக்கலைஞர்களான துசி - தனு சகோதரிகள் இப்பாடல்களுக்கு இசை அமைத்தனர்.

முன்னணி நடன ஆசிரியையும், லண்டனில் இவ்வாண்டு 'பூபாளராகம் 2004' விருது பெற்றவருமான ராஹினி ராஜகோபாலின் மாணவியர் உட்பட - லண்டனில் பிறந்து வளர்ந்த தமிழ் மாணவியரைப் பெரும்பாலும் கொண்ட - அணிகள் தாயக நடனங்களை இந்நிகழ்வில் நடத்தினர்.

பல்வேறு திசைகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான தமிழர்கள் வாகனங்களில் லண்டன் எக்ஸெல் அரங்கத்தை நோக்கி வந்து குவிந்துகொண்டிருந்தனர்.

(ஐ-3)


IIS
புலமைப்பரிசில் திட்டம்
2005
கல்வியாண்டு 2005/2006 இற்கான புலமைப்பரிசில் திட்டம் 2005 இன் ஊடாக எமது நிறுவனத்தில் கல்வி பயிலவிரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
விண்ணப்ப முடிவு திகதி
30.11.2004
விண்ணப்பப் படிவங்களினை IIS அலுவலகங்களிலும் குடாநாட்டின் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# AMITY OVERSEAS சந்தைப்படுத்தும்

# Butterfly சமயலறை உபகரணங்கள்







இலங்கையில் Butterfly சமயலறை உபகரணங்களை இறக்குமதி செய்து விநியோகித்துவரும் AMITY OVERSEAS நிறுவனம் தனது புதிய பிரத்தியேக காட்சியறையையும், விற்பனை மற்றும் சேவை நிலையத்தினையும் கொழும்பு கொச்சிக்கடை புனித அந்தோனியார் மாவத்தையில் 130 ஆம் இலக்க முகவரியில் அண்மையில் திறந்து வைத்துள்ளது.

தரமான சமயலறை உபகரணங்களை இறக்குமதி செய்து விநியோகிப்பதில் வடிக்கையாளர்களின் நன்மதிப்பைப் பெற்ற AMITY OVERSEAS நிறுவனம் தனது விற்பனை நிலையத்துடன் பொருட்களைத் திருத்தித் தரக்கூடிய சேவை நிலையத்தையும் கொண்டிருப்பது சிறப்




பம்சமாகும்.

AMITY OVERSEAS நிறுவனம் இந்தியாவில் 50 ஆண்டுகளுக்கு மேலாக தரமான உற்பத்திகளுக்கு பிரபலம் பெற்று விளங்கும் Butterfly நிறுவனத்தின் ஏக முகவராக கடந்த இரு ஆண்டுகளாகச் செயற்பட்டு வருகின்றது.


இலங்கை முழுவதும் பிரபல Butterfly தயாரிப்புகளின் கிடைப்பனவை சாத்தியமாக்கும் வகையில் தனது முகவர் வலையமைப்பை இந்நிறுவனம் நாடெங்கும் விஸ்தரித்துள்ளது.

இன்று இலங்கையில் இலாப நோக்கம் கருதி தரமற்ற, பாதுகாப்பற்ற சமயலறை உபகரணங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கும் சூழ் நிலையே காணப்படுகின்றது.

பார்வைக்கு கவர்ச்சிகரமாக குறைந்த விலையில் கிடைக்கும் அநேக சமயலறை உபகரணங்கள் தூய உருக்கிலிருந்து தயாரிக்கப்படுவதில்லை. தரம் குறைந்த மூலப் பொருட்களில் இருந்து தயாரிக்கப்படும் இச் சமயலறை உபகரணங்களில் சமயலை மேற்கொள்ளும் பொழுது உணவு நஞ்சேற்றம் அடைந்து உடல் நலக்கேடுகள் தோன்ற ஏதுவாகும்.

மேலும், பாதுகாப்புக் குறைபாடுகளுடன் மிகக் குறைந்த விலையில் கிடைக்கும் காஸ் அடுப்புகளால் விபத்துக்களை எதிர்கொள்ளும் அபாயமும் ஏற்படுகின்றது. இத்தகைய தரம் குறைந்த பொருட்களினால் நுகர்வோர் எதிர்கொள்ளும் இடர்களை களைவதை இலக்காகக் கொண்டு தரமான தூய உருக்கில் இருந்து தயாராகும் Butterfly தயாரிப்புகளை AMITY OVERSEAS PRIVATE LTD. இறக்குமதி செய்து சந்தைப்படுத்தி வருகின்றது. இப் பொருட்களுக்கு இவ்வருடம் முதல் 5 வருடம் வரை உத்தரவாதமும், விற்பனைக்குப் பின்னரான சேவையும் வழங்கப்படுகின்றது.

தரக்கட்டுப்பாட்டுக்கான சர்வதேச ISO 9002 சான்றிதழைச் சுவீகரித்துள்ள இந் நிறுவனம் நாடுமுழுவதும் தமது நிறுவன விற்பனையாளர்கள் மூலம் தனது உற்பத்திகளையும் சேவைகளையும் சந்தைப்



படுத்தி வருகின்றது என இந் நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரான எஸ். பாலச்சந்திரன் மற்றும் பொது மேலாளர் எம். தனசேகர் ஆகியோர் தெரிவிக்கின்றனர்.











# யாழ்ப்ப




**விசேட சலுகை விலை ரூ.24,900/-** (யாவும் உள்ளடங்கலாக)
**இலவச ஐ.டி.டி. மற்றும் இன்டர்நெட் இணைப்பு**

**உங்கள் இணைப்பு, சேவை மற்றும் கட்டணக் கொடுப்பனவுகளுக்குத் தொடர்புகொள்ளவும்:**
**சண்டெல் நிலையம் - யாழ்ப்பாணம்**
**31, பிள்ளையார் இன் கட்டடம், மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**
**தொலைபேசி: 021 4 590000 - 2**

**இலங்கையில் அதிவேகமாக வளர்ந்**

# ப்பாணத்தில் இடைவிடாத விரிவாக்கம்

## கோப்பாயில் சண்டெல் அதன் செயலாற்றலை விரிவுபடுத்துகிறது




யாழ்ப்பாணத்தில் விரிவடைந்துவரும் எமது செயற்பரப்பு இப்பொழுது 9 புதிய இடங்கள் உட்பட 27 நகரங்களையும் கிராமங்களையும் உள்ளடக்குகின்றது. அதிவிரைவில், யாழ்குடாநாட்டின் அனைத்துப் பிரதேசங்களிலும் சண்டெல்லின் தரமுயர்ந்த சேவைகளைப் பெறக்கூடியதாக இருக்கும்.

Suntel

தொலைத்தொடர்பில் உங்கள் ஆயுட்காலப் பங்காளி

க வளர்ந்துவரும் நிலையான தொலைபேசி வலையமைப்பு

Q&E Advertising

# கணினிக் கல்வியில் புதிய தடம் NIIT அறிமுகப்படுத்தும் பாடநெறி

கணினிக் கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்தத் தக்க வகையில் NIIT நிறுவனம் "Futurz Classic" எனும் கற்கை நெறியை அறிமுகப் படுத்தியுள்ளது.

அதி நவீன e-Commerce இன்ரநெற் தொழில நுட்பங்களை உள்ளடக்கியதான Futurz Clas sicகை முதற் தர Software பயிற்சி நிறுவனமான NIIT அறிமுகப்படுத்துகின்றது. இக் கற்கை நெறியை பயில்பவர்கள் Micro soft, Oracle, Sun Micro system என்பவற்றின் தொழில்நுட்பங்களையும் அறியக் கூடிய வகையில் பயிற்றப்படுவர்.

NIIT இன் சர்வதேச கற்கைகளுக்கான நிர்வாகி வருண் கண்ணா கூறுகையில் "மாணவர்கள் இரண்டு,மூன்றுஆண்டுகளில் தொழில் சந்தைக்குள் நுழைந்து வேலை தேடும்போது இந் Future Classic கினால் மிகப்பெரிய பயனை அடையத்தக்க வகையில் எமது இரு தசாப்தகால கற்பித்தல் வரலாற்றிலும் நிறுவனங்களின் எதிர்பார்ப்புக்களின் அடிப்படையிலும் இது வடிவமைக்கப்பட்டுள்ளது" என்றார்.

மேலும் "இக் கற்கைநெறி தொழில் தருநரின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்யும் அடிப்படையைக் கொண்டதாகக் காணப்படுவதால் ஒரு மாணவனின் தொழில்வாய்ப்புக்கு மிகச்சிறந்த முறையில் அது உதவும் என்பதில் சந்தேகமில்லை" எனவும் கூறினார்.

இந்த Future Classic மைய எண்ணக்கரு Software பொறியியல் மற்றும் பிரதான தொழில நுட்பங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது. Software பொறியியல் எண்ணக்கருவானது அன்றாட வாழ்க்கையில் காணப்படும் Software அபிவிருத்திப் பிரச்சினைகளை எளிமையான, யதார்த்தபூர்வமான உதாரணங்கள் மூலம் விளக்கு கின்றது. மைய எண்ணக் கருவானது புதிய தொழில் நுட்பங்களை உள்வாங் கக்கூடிய பலத்தைக் கொண்டுள்ளது. பிரதான தொழில்நுட்பம் என்பது Desktop மற்றும் Mobile சாதனங்களுக்கான அபிவிருத்தி நுட்பத்திறன்களை கொண்டுள்ளது.

NIIT இன் இந்த Future Classic நவீன மையப் படுத்தப்பட்ட கற்றல் வடிவமைப்பின் (MCLA) தொழில்நுட்ப உதவியுடன் கற்பிக்கப்படுவதால் மாணவர்கள் DOT.Net, J2EE முதலிய தொழில் நுட்பங்களை மிக இலகு வாகக் கற்கமுடியும் NIIT பல வருடகால பன்முக ஆய்வுகளின் பின்னர் அடிப்படை நிலைமாற்று கற்றல் செயலாடுகளை MCLA இன் மூலமே பயிலுநர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க, பெற்ற கல்வியை நினைவில் நிறுத்தி அதில் ஈடுபட, திறன் வெளிப் பாடுகளை வேலைத்தளங் களில் ஏற்படுத்துவதற்குரிய வழிமுறைகளை ஏற்படுத்த முடியும் என்ற முடிவுக்கு வந்தது. MCLA ஆனது பயிலுநர்களை அன்றாட உலகியல் ரீதியில் செயற்படக்கூடிய வகையில் ஒரு புலமையாளனிடம் இருந்து அறிந்தவற்றில் தமக்கு தெரிந்தவற்றை வளர்க்கக்கூடிய வகையான பயிற்சியைப் பெற உதவுவதுடன் அவர்களுக்கு மேலதிக தகவலை வழங்குவதன் மூலம் பயிற்சியை சுமையுடையதாகக் கருதுவதையும் தவிர்க்கச் சொல்கின்றது.

கண்ணா, "தாய் நாட்டிலும் வெளி நாடுகளிலும் NIIT இனால் முன்னெடுக்கப்பட்ட தனித்துவமான Software திட்டங்களில் இருந்து பெறப்பட்ட அனுபவங்களின் மூலம் NIIT இனுடைய சமநிலையான Software ஐயம் பயிற்சி நடவடிக்கைகளையும் திறம்பட மீள் ஒழுங்கு செய்ய முடியும்" எனத் தெரி வித்தார்.

MMBL CyberSkills (Pvt) Ltd நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் NIIT இன் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அனுமதி பெற்ற அதிகாரியுமான சுனிமால் வீரசூரிய பின்வருமாறு கருத்து தெரிவித்தார்:-

"புதிய பாட நெறியாக Future Classicஐ அறிமுகப்படுத்தியதோடு NIIT ஆனது MCSE, MCSD போன்ற Microsoft நிறுவனத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பாடநெறிகளை இலங்கை முழுவதும் உள்ள NIIT கிளைகளில் அறிமுகப் படுத்தி உள்ளது.

"இது தகவல் தொழில்நுட்ப மாணவர் களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பை வழங்கி, தொழில் புலமை சார்ந்த கற்கை நெறிகளிற்கான பரீட்சைகளில் நாட்டின் அனைத்து கிளைகளிலும் பயிலும் மாணவர்கள் பயனடைய NIIT இன் பரந்த நிலயங்களுக்கிடையிலான வலையமைப்பு உதவுகின்றது. அத்துடன் பல புதிய, நவீன தொழில் நுட்பங்களை முதன் முதலாக அறிமுகப் படுத்திய பெருமையை NIIT தனதாக்கி கொண்டது. NIIT தகவல் தொழில் நுட்பத் துறையின் புதிய அபிவிருத்திகளை முதன் முறையில் அறிமுகப்படுத்தி வருகின்றது" என்றார்.

**NIIT இன் பயிற்சி நெறிகள் பற்றி**

1: Futurz:DNIIT மற்றும் NIIT பட்டங்களை பெற ஏதுவாக உள்ள வேறுபட்ட திட்டங்களை உள்ள டக்கியது.

2: CATS:உயர் தொழில் நுட்பத்திற்கான பாட நெறி

3: SWIFT:தகவல் தொழில் நுட்பத்துக்கான குறுகிய நிகழ்சித் திட்டம் இது. கணனி முறைமைகளை அறிய விரும்பும் மக்களிறகானது. உலகின் முதன்மையான 15 தகவல் தொழில் நுட்ப பயிற்சி நிறுவனங்களில் ஆசியாவைச் சேர்ந்த தனி நிறுவனமாக NIIT விளங்குகின்றது. மிகச்சிறந்த பயிற்சி நிறுவன விருதை Microsoft நிறுவனம் NIITக்கு 2001 இல் வழங்கி கௌரவித்தது. இந்தியாவின் முன்னணி கணனிச் சஞ்சிகையான Data quest இனது கருத்து கணிப்பின்படி NIIT முதன்மையானதாகத் தெரிவு செய்யப்பட்டது.

NIIT இலங்கையில் யூனியன் பிளேஸ், பம் பலப்பிட்டி, நுகெகொட, கண்டி, கம்பஹா, திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் கல்வி நிலையங்களை நடத்தி வருகின்றது.


ஒவ்வொரு 4 பேரிலும் ஒருவர் 60 வயதைக் கடந்திருப்பார்



உங்களை சுற்றிவர கவனியுங்கள். 2041 வருடமளவில் ஒவ்வொரு நாலாவது நபரும் வயது முதிர்ந்திருப்பார் – அது நீங்களாகவும் இருக்கலாம்.

ஆம். இலங்கை முதுமையடைகிறது. வயது முதிர்ந்தவர்களைக் கவனிக்க குறைந்த அளவிலான இளையோரே இருப்பார்கள். அந்த ஒருவர் நீங்களாக இருந்தால் என்ன நடக்கும்?

கவலைப்படத் தேவையில்லை என்கிறோம் நாம். இன்றே செலிங்கோ ஓய்வுதியக் கணக்கொன்றை ஆரம்பித்து யாரிலும் தங்கியிருக்க வேண்டியிராத எதிர்காலமொன்றை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் ஓய்வு பெறும்போது உங்களுக்கு மாதாந்த வருமானமொன்றை பெற்றுத்தரும் நிச்சயமான தனித்துவமான வழி செலிங்கோ ஓய்வூதியக் கணக்கே ஆகும்.

எந்தவொரு செலிங்கோ கிளையையும் நாடுங்கள். அல்லது எமது துரிதத் தொடர்பெண் : 2 461 461 ஐ அழையுங்கள். உங்கள் வாழ்நாள் முழுவதும் இன்று போன்றே சிறப்பாக அமைய நாம் உதவுவோம்.

CRA
செலிங்கோ
ஓய்வூதியக் கணக்கு



செலிங்கோ லைஃப்
பெரியதோ சிறியதோ எதையுமே காப்பது - செலிங்கோ
இல. 134, காலி வீதி, கொழும்பு 03.
தொலைபேசி: 2 461 461
தொலைநகல்: 2 437 613
மின்னஞ்சல்: cra@ceylife.lk
வெப்தளம்: www.ceylincolife.com
இலங்கையின் பதிவு செய்யப்பட்ட காப்புறுதி நிறுவனம்.

உங்களை யார் பராமரிப்பார் ?





நீங்கள் லங்கா ஐஓசி இன் பங்காளராகுவதற்கு

1

தினம் உள்ளது.

தெற்காசியாவின் போர்ச்சூன் குளோபல் 500 கம்பனிகளுள் ஒன்றான இந்தியன் ஒயில் கோர்ப்பரேசனின் பூரணத்துவத்தின் கீழ் லங்கா ஐஓசி இன் பங்குதாரராக இருங்கள்.

வழங்கல் நடவடிக்கைகள் 29 நவம்பர் 2004 இல் ஆரம்பிக்கின்றன.
மேலதிக விபரங்களுக்கு தயவுசெய்து வெளியீட்டினை பார்வையிடுங்கள்.

www.lankaioc.net

IOC
Lanka IOC
Bringing Energy to Life

# அழகே உன்னை அவமதிக்கிறேன்!

அழகு என்றதும் 'தோல் காப்பியம்' தான் நம் நெஞ்சில் துருத்தி எழும். எல்லா அழகும் அழகல்ல. இயல்பான புறத்தோற்றமே அழகு. ஆள்பாதி, ஆடைபாதி என்று சொன்னாலும் சொன்னார்கள். இன்று கண், மூக்கு, கன்னம், உதடு, கால், வயிறு, தலைமுடி போன்ற உறுப்புகளுக்கும் செயற்கை முலாம்! அதிலும் பாரபட்சம் இல்லாமல் பாதி ஆடையையே ஏற்றுக் கொண்டார்கள் உச்ச நாகரீக வாரிசுகள்.

பண்டைக் காலத்தில் எகிப்து நாட்டுப் பட்டத்து ராணிகள் தமது கண்களைச் சுற்றிலும் 'அன்டிமனி' உலோகத் தூளை அரைத்துத் தடவிக்கொள்வார்களாம். கவர்ச்சியான பச்சை நிறத்திற்கு 'மாலசைட்' என்றொரு தாது மண். அதை அப்படியே தண்ணீரில் அல்லது எண்ணெயில்



குழைத்துக் கண்களுக்கு அடியில் பூசி அழகு காட்டினார்களாம். எகிப்து பாரோக்களுக்கு மட்டுமா? இந்தக் காலத்து ஹீரோக்களுக்கும் இதுதான் பிரியம்.

அதனால் பெண்கள் தமது கண்களைச் சுற்றியுள்ள கருமை வளையத்தை மறைக்க மீண்டும் கொழுப்பு எண்ணெய், மெழுகுக் கலவைகளைக் கையாள்வர். கண்ணாடித் தூள் ஜிகினா வேறு.

வரலாற்றில் ஓர் உண்மை சொல்லவா? ஐரோப்பாவில் ஏழாம் நூற்றாண்டில் தாந்தி இன மேட்டுக்குடி மக்கள் எப்போதாவதுதான் குளிப்பார்களாம். பக்கத்தில் நெருங்கினால் கக்கத்தில் (அக்குளில்) மட்டுமல்ல, உடம்பு சகிக்க முடியாது நாறும். அதை மறைக்கவே மேனி முழுவதும் வாசனைப் பொடி அப்புவார்களாம். இன்று பட்டணங்களின் பாமரர்களுக்கும் இது ஒன்றும் அதிசயக் கண்டுபிடிப்பு அல்லவே.

உடம்பின் வெளிச்சுவரில் ஒரு சதுர சென்டிமீற்றரில், அதாவது ஒரு கைவிரல் பதிக்கும் இடத்தில் குறைந்தது 50 வியர்வைத் துவாரங்கள் உள்ளன. அக்குளின் அதே பரப்பளவில் 1000 துவாரங்களில் வியர்வை மழையே பொழிகிறது. ஒவ்வொரு துளியிலும் உடம்பின் உணவுப் பழக்கத்திற்கு ஏற்பவே நாற்றமும் அடிக்கிறது. அதைப்போக்க இருக்கவே இருக்கிறது 'ஸ்பிரே' வகைகள். வயலில் பூச்சி மருந்து தெளிப்பான்கள் மாதிரி உடம்பிற்கும் வாசனைத் தெளிப்பான்கள். அந்த வாசனை ஈர்ப்பில் அசடு வழியும் சிலருக்கு மயக்கம்வரத்தான் செய்யும். பெரும்பகுதி ஆல்கஹோல் போதைக் கரைசல் அல்லவா?

இதற்கிடையில், வாசனைத் திரவியங்களில் ஒவ்–டி–கோலன் என்று வியாபாரம் பேசுவது கேட்டிருப்பீர்கள். பிரஞ்சு மொழியில் ஒவ் என்றால் தண்ணீர். கோலோன் என்பது ஜெர்மனியில் சிற்றூர். அங்கு தங்கி இருந்துதான் கியோவன்னி மரியா ஃபரீனா என்பவர் கழிப்பறை கழுவ உதவும் திரவம் ஒன்றைக் கண்டுபிடித்தார். 1709 ஆம் ஆண்டு எலுமிச்சை நீரில் இருந்து தயாரித்த திரவம் அது. பின்னர் அதில் கொஞ்சம் வாசனைப்பொருள்கள் கலந்து விற்கப்பட்டது. நாடெங்கும் கண்கள் சொக்கும் அமோக வரவேற்பு அதற்கு. சுருக்கமாகச் சொன்னால் ''ஒவ்–டி–கோலன்'' எனபது கோலோனின் நீர்.

'எண்சான் வீட்'டில் இருந்து கெட்ட வியர்வையா? கதவை அடை. வியர்வைத் துவாரங்களுக்குப் பூட்டுப் போடு. இப்படிக் கட்டளையிட்டுத்தான் மேனியில் பூசப்படும் அலுமினியம் குளோரோ ஹைஹீடிரேட்டி இரசாயனப்பொருள் வியர்வைச் சுரப்பிகளைச் சுருங்கச் செய்கிறன. வியர்வை உற்பத்தியை மட்டுப்படுத்தினால் துர்நாற்றம் போயேபோச்சு என்று சிலுப்பலாம். உண்மையில் வியர்வைப் போக்குவரத்தில் வீதிமறியல் என்றால் உடல் வெப்பம் வெளியேறாது. அதனால் காய்ச்சல் வரும் என்று சொன்னால் யாரேனும் நம்புவார்களா? நமக்கு சுகந்தம் தானே முக்கியம்!

சிகப்பழகு முகம் வேண்டுமா, காரீய கார்பனேட்டு என்றொரு இரசாயன வெண்பொடி இருக்கிறது. இரு நூறு ஆண்டுக் காலப் பழையது. ஐரோப்பியர் பதினெட்டாம் நூற்றாண்டில் முகத்தில் தடவி மகிழ்ந்தது. இன்றைக்கும் அத்தகைய வெள்ளைத்தூளை நாம் பூசி மகிழ்கிறோம்.

'டால்க்' என்றால் என்ன தெரியுமா? களிமண். உலர்ந்த மக்னீசியம், அலுமினியம், பொட்டாசியம் சிலிக்கேட்டுக் கலவையே 'டால்க்'. 'கம் பவுடர்' என்றால் 'மற்றும் பவுடர்' என்றும் அர்த்தம்.

முடி கொட்டுகிறதா? அதற்கும், பொடுகு நீக்குவதற்கு குழம்புகளும் பல வண்ணங்களில், மணங்களில் கிடைக்கின்றன. பொடுகு என்பது உச்சந் தலையின் உலர்ந்த சருமம். அதற்கு ஈரச்சத்து ஊட்டினாலே போதும். அல்லது நனைத்துத் துவட்டுங்கள் போதும். சருகுகளை அப்புறப்படுத்த சந்தனப் பூச்சுகளா?

சருமத்தைப் பதப்படுத்தும் குழம்புகள் எல்லா அழகு சாதனக் கடைகளிலும் கிடைக்கும். இவை எல்லாம் நடுத்தர மங்கையர் மீது திணிக்கப்படும் வன்முறைக் கொடுமைகள். அதில் 'டைஹைடிராக்சி அசிட்டோன்' என்றொரு இரசாயனப்பொருள் அடங்கி இருக்கிறது. அது மேல்தோலில் அமினோ அமிலங்களுடன் வினைபுரிந்து அழுக்கு நிறத்தில் படியும். அதனை அப்படியே உருட்டித் திரட்டித் தட்டிவிடலாம்.

உங்கள் தோல் ஒவ்வொரு வினாடியும் உங்களை அறியாமலே புதுப்பித்துக்கொண்டு இருக்கிறது. அடியில் புதிய தோல் தோன்றும் போது மேலே பழைய தோல் சருகாகி உரிகிறது. அதில் 'கார்னியல்' செல்கள் உதிர்ந்துவிடும். ஒவ்வொரு குளியலின்போதும் நீங்கள் பாம்பாகி விடிகிறீர்கள். உடம்பு பழசு– தோல் புதிசு.

தோல் உலர்ந்து போகாமல் இருக்க



அடித்தோலில் சீபம் என்றொரு எண்ணெய் வேறு சுரக்கிறது. இல்லை என்றால் கவலையே வேண்டாம், உங்கள் சருமத்தைப் 'பொன்போல்' பாதுகாத்திட இருக்கவே இருக்கிறது ஒலிவ் எண்ணெய்.

இல்லையென்றால் உடம்பு வியர்வையை வெளியே விடாமல் தோலை ஈரப்பதத்துடன் பாதுகாக்கலாமாம். அதற்கும் மேனி ஈரப்படுத்திகள் (Skin moisturizers) உண்டு. இவை தோலுக்கு நீர்ச்சத்து ஊட்டி மேல் தோலைச் சற்று உப்பலாக்கிக் காட்டும்.

(மறுபக்கம் பார்க்க)



# Hero மோட்டார் சைக்கிள் விநியோகஸ்தர்களாக Abans




இந்திய Hero Motors நிறுவனம் Abans நிறுவனத்தினூடாக இலங்கைக்கு அறிமுகப்படுத்தியுள்ள மோட்டார் சைக்கிள் வகைகளைப் படத்தில் காணலாம். (07)

மோட்டார் சைக்கிள் உற்பத்தியில் முன்னணியில் திகழும்– இந்தியாவைத் தளமாகக்கொண்ட– Hero Motors நிறுவனம் அதன் புதிய உற்பத்திகளை இலங்கையில் விநியோகம் செய்ய இலங்கையில் இலத்திரனியல் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களை விநியோகம் செய்வதில் முன்னணி வகிக்கும் Abans நிறுவனத்தை ஏக விநியோகஸ்தராகத் தெரிவுசெய்துள்ளது.

அதன்படி புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட நவநாகரீக மோட்டார் சைக்கிள்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

இப்புதுவகையான மோட்டார் சைக்கிள்கள் ஒரு லீற்றர் பெற்றோலுக்கு 70 முதல் 90 கிலோ மீற்றர் வரையிலான தூரத்துக்கு ஓடக்கூடியவை.

எரிபொருட்களின் விலை உயர்ந்துள்ள இப்போதைய நிலையில் அதனை மீதப்படுத்தும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ள இவ்வகையான மோட்டார் சைக்கிள்கள் அவற்றின் தரத்தை உறுதிப்படுத்துவதோடு மோட்டார் சைக்கிள் பாவனையாளருக்கும் பெரும் ஆறுதலாகவும் உள்ளது–

Abans இப்பொழுது Hero Motors நிறுவனத்திடமிருந்து 4 வகையான மோட்டார் சைக்கிள்களை முதலில் அறிமுகம் செய்துள்ளது.

Hero Stream 49cc, Hero Sting 92cc, "Hero Smart 75cc and Hero Ezeesx Scooter 75 cc. போன்றவையே அறிமுகம்செய்யப்பட்டுள்ள அந்த 4 மோட்டார் சைக்கிள்களுமாகும். இவை இலங்கை வீதிகளில் சவாரிசெய்ய உகந்தவையாகும்.

இளம் அலுவலக உத்தியோகத்தர்களையும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களையும் இப்புதிய ரக சைக்கிள்கள் கவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இவற்றில் காணப்படுகின்ற சொகுசு, நாகரீக அமைப்பு, எரிபொருள் மீதப்படுத்தும் தன்மை போன்றவை காரணமாக இந்த ரக சைக்கிள்கள் இந்தியாவில் மிகவும் பிரபல்யம் அடைந்துள்ளன.

நாடெங்கிலும் உள்ள Abans இன் காட்சியறைகளில் இவை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. போதுமான அளவு உதிரிப்பாகங்கள் கையிருப்பில் உள்ளதால் நீண்டகாலப் பாவனை மற்றும் பராமரிப்புக் குறித்து எவரும் கவலைப்படத் தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Mobitel தொலைத்தொடர்பு நிறுவனத்தின் முன்னணி விநியோகஸ்தர்களான K-Telecom நிறுவனம் அதன் முதலாவது ஆண்டு நிறைவை அண்மையில் கொண்டாடியது.

இதனையொட்டி K-Telecom தனது வாடிக்கையாளர்களில் ஒருவருக்கு அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு மூலம் 20 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த கார் ஒன்றைப் பரிசாக வழங்கவுள்ளது.

நவம்பர் மாதம் 2004முதல் K-Telecom இல் அல்லது அதன் அனுமதிபெற்ற விநியோகஸ்தர்களிடம் Mobitel இணைப்பைப் பெற்ற வாடிக்கையாளர்கள் மாத்திரமே இதில் பங்குபற்றமுடியும். K-Telecom நாடு முழுவதும் 300 இற்கும் மேற்பட்ட உப விநியோகஸ்தர்களைக் கொண்டுள்ளது.

நேரடியாகவும், தனது உபவிநியோகஸ்தர்களின் ஊடாகவும் K-Telecom நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களைக் கருத்தில் கொண்டு குறைந்த விலையில் Mobitel இணைப்புக்களை வழங்கிவருகின்றது.

2ஆயிரத்து 700 ரூபா மற்றும் மூவாயிரத்து 500 ரூபா விலைகளில் கையடக்கத் தொலைபேசிகளைவழங்கிவந்த K-Telecom இப்பொழுது தங்களிடம் Mobitel இணைப்பை ஏற்படுத்தும் வாடிக்கையாளர்களுக்கு இலவசமாக Motorola கையடக்கத் தொலைபேசியை வழங்கிவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## அழகே உன்னை...

(தொடர்ச்சி)

தண்ணீரை ஏதேனும் எண்ணெயில் கரைத்ததே அழகு 'கிரீம்'. இது மாயாஜால ஓம் கிரீம் மந்திரங்கள் மாதிரிதான். இதனைப் பூசினால் முகத்தில் பளபளப்பும் வரும். அதனால் முகத்தில் தாற்காலிகமாகச் சுருக்கம் மறையும் அப்பா நடிகர்கள், பேத்தி நடிகைகளுடன் துள்ளித் துள்ளிக் காதல் பாட்டுப் பாடலாம். எல்லாமே வெளிப்பூச்சுமயம்.

எண்ணெய்த் துளிகளை நீரில் கலந்து விற்கிறார்கள். 'எமல்ஷன்' என்கிற சில்மிஷம். இங்கு கலக்கப்படும் எண்ணெய், நீங்கள் நினைத்த தேங்காய் எண்ணெய்யோ, நல்லெண்ணெய்யோ அல்ல. கல்லெண்ணெய். நிலத்தடியில் இருந்து பெறப்படும் பெட்ரோலியப் பாறை எண்ணெய் அல்லது கனிம (Mineral Oils) எண்ணெய்கள். 'பெட்ரா' என்றால் கிரேக்கத்தில் பாறை, 'ஒலியம்' என்றால் எண்ணெய் தான்.

இதிலும் கொஞ்சம் கெட்டியாக இருக்கிற பசைப்பொருள் உண்டு. பெட்ரோலிய ஜெல்லி அழகுசாதன ஜெல். அதில் மெழுகுகளுடன் கொஞ்சம் இயற்கைக் கொழுப்புகள் இடம்பெறும். இயற்கைக் கொழுப்பு என்பது தாவரக்கொழுப்பு, மிருகக்கொழுப்பு, செம்மறியாட்டு கம்பளித் தோலில் இருந்து தயாரிக்கப்படும். லானோலின் என்பது மயிர்ரிருந்து தயாரிக்கப்படுவது.

அவ்வாறே கண்ணுக்கும் மை அழுக்கு. 50 சதவீத சோப்பு, 40 சதவீத மெழுகுககள், மீண்டும் 5 சதவீத லானோலின் கொழுப்புகள் கலந்த களிம்பு அது. அதற்குப் பச்சை நிறம் வேண்டுமா. 'குரோமிய மூன்றாக் சைடு' நீல நிறத்திற்குச் கொஞ்சம் 'அல்ரா மாரின்' எனும் கந்தகக் கூட்டுப்பொருள்.

பூச்சு தேவைப்படும் இன்னொரு அவசியம் உதடு. அதற்கான சாயம் என்றால் ஆமணக்கு எண்ணெய்தான். அதில் மெழுகு வர்த்தி, நிறம் ஊட்ட சாயங்களும், நிறமிகளும் கலப்பது உண்டு. 'மெட்ரா' – 'புரோமோ' –'தயோரெக்ஸின்' என்பது சிறப்புக்கு ஏற்ற இரசாயனம். ஆமணக்கு எண்ணெயில் நாற்றத்தைப் போக்கவே ரம்மிய வாசனைத் திரவியங்கள் கலக்கப்படுகின்றன. பல முறை தாளித்த சமையல் எண்ணெய்களில் நாள்பட ஒரு விதக் காறல் வீசுமே. இந்த உதட்டுச்சாயத்திலும் இதே காறல் மணம் நாறும். அதனை மறைத்திட எதிர் 'ஆக்சிகரணப்' பொருள் (antioxidants) உதவும்.

இவற்றில் எதுவெல்லாம் நோய்க்காரணி என்று தீர்மானமாகத் தெரியாது. நாகரீக மனிதர்கள் (நாறும் மனிதர்கள்) இதைப் புரிந்து கொண்டாலே போதும்.

வெளிநாடுகளில் நீங்கள்
உழைக்கும் பணத்தினை
மக்கள் வங்கியினூடாக
தாய்நாட்டிற்கு அனுப்பி
இலட்சக்கணக்கில் பரிசுகளை
வெல்லுங்கள்.

வெளிநாட்டு - பண
அதிர்ஷ்ட சீட்டிழுப்பு
Foreign Remittance Lucky Draw

நீங்கள் இவ்வாறு அனுப்பும் ஒவ்வொரு ரூ. 10,000 க்கும் வெளிநாட்டு பண அதிர்ஷ்ட சீட்டொன்று பணத்தினை பெற்றுக்கொள்பவருக்கு கிடைப்பதுடன், மூன்று மாதங்களுக்கு ஒருமுறை ரூ. 50,000 பெறுமதியான பரிசுகள் 10 தினை வெல்லும் சந்தர்ப்பம்.

வருட கடைசீ சீட்டிழுப்பில் மேலும் இலட்சகணக்கில் பரிசுகள்.

1 வது பரிசு - ரூபா 2.5 மில்லியன்
2 வது பரிசு - ரூபா 1 மில்லியன்
3 வது பரிசு - ரூபா 500,000
ஒவ்வொன்றும் ருபா 50,000 பெறுமதியான ஆறுதல் பரிசுகள் 47

வெளிநாடுகளில் இருந்து மக்கள் வங்கியின் ருபா கணக்கொன்றில் வைப்புச் செய்யும் வெளிநாட்டு பணத்திற்கு,
வெஸ்டன் யூனியன் பணப்பரிமாற்றல் முறையில் மற்றும்,
இலங்கை கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள மக்கள் வங்கி கிளையில் அல்லது நாடு பூராகவும் உள்ள மக்கள் வங்கி கிளைகளில் மாற்றும் வெளிநாட்டு பணத்திற்கு, பயணக் காசோலைக்கு, காசுக் கட்டளைக்கு,
இவ் வெளிநாட்டு அதிர்ஷ்ட சீட்டை பெற்றுகொள்ள முடியும்.
இச் சீட்டிழுப்பு மக்கள் வங்கியில் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள

மக்கள் வங்கி
உங்களுக்காக - நாட்டிற்காக

இருமல்........ இருமல்........
எங்கும் இருமல்

இருமல், தடிமல், மூச்சு திணறல்,
(மூச்சு விட கஷ்டப்படுதல்)
மற்றும் எல்லாவிதமான....,

சித்தாலேப
இருமல் அரிஷ்ட






சித்தாலேப
சித்தாலேபயின்
இன்னுமொரு தயாரிப்பு

ஹெட்டிகொட இன்டஸ்ரீஸ் (பிரை) லிமிட். 33/3, ஸ்ரீ தர்மராம றோட், இரத்மலானை, இலங்கை.
தொலைபேசி: 2736910 தொலைநகல்: -2735465